கலைமகள் வெளியீடுகள்

★

	ரூ.	அ.
முருகன் ஓர் உழவன்—ஸ்ரீமான் வேங்கடரமணி அவர்கள் எழுதிய அரிய நாவல்	1	8
குமுதினி—ஸ்ரீ ரவீந்த்ரநாத் டாகுர் எழுதிய நாவல்: வங்காளியிலிருந்து ஸ்ரீமதி ரங்கநாயகி மொழிபெயர்த்தது	1	8
மாயா விநோதினி—ஸ்ரீ ரவீந்த்ரநாத் டாகுர் எழுதியது: ஸ்ரீமதி தஞ்சம் மொழிபெயர்த்தது	1	8
பைரவி—சரத்சந்த்ர சட்டர்ஜி எழுதியது: ஸ்ரீ த. நா. குமாரஸ்வாமி மொழிபெயர்த்தது	1	8
விதியின் செயல் முதலிய கதைகள்— ஸ்ரீ ஏ. எஸ். பஞ்சாபகேச ஐயர், ஐ.ஸி,எஸ். எழுதியது	0	6
ரிஷப விஜயம்—ஓர் இனிய நாடகம்: ஸ்ரீ கே. வி. பஞ்சநதையர் எழுதியது	0	12
மண்ணாசை—ஸ்ரீ சங்கரராம் எழுதிய நாவல்	1	8
ஸ்ரீ சங்கராசார்யார் உபந்யாசங்கள்— 50 உபந்யாசங்கள் கொண்ட புஸ்தகம்	1	8
ஸ்ரீ சங்கர விஜயம்—ஸ்ரீ காமகோடி பீடாதிபதி யவர்கள் திருவாய்மலர்ந்தருளியது	0	10
சியாமளா தண்டகம்—வடமொழி மூலமும் தமிழுரையும்: ஸ்ரீ அனவரத விநாயகம் பிள்ளையவர்கள், எம். ஏ., எல். டி. மொழிபெயர்த்தது	0	1
த்வாதசோப நிஷத்—தமிழில் ஸ்ரீ என். எஸ். ராஜராமையர் மொழிபெயர்த்தது	2	0
முப்பெரு வீரர்—ஸ்ரீ எ. எஸ். பஞ்சாபகேசய்யர் எழுதிய அரிய நவீனம்	2	0
நிர்மலா—ஸ்ரீ பிரேம்சந்த் (ஸ்ரீ கா. ஸ்ரீ. ஸ்ரீநிவாஸாசாரியார் ஹிந்தியிலிருந்து மொழிபெயர்த்த நாவல்)	1	8
அநுபமா—சரத் சந்த்ர சட்டோபாத்யாயர் எழுதிய நாவல்: ச. வி. ஸ்ரீனிவாச சர்மா மொழிபெயர்த்தது	0	8
கொனஷ்டையின் கதைகள்	1	8
இருளில் ஒளி—சரத்சந்த்ர சட்டோபாத்யாயர் எழுதியது	0	6
ஜவஹர் கடிதங்கள்— (தம் குமாரி இந்திரா நேருவுக்கு எழுதியவை) ஸ்ரீ சி. ரா. வேங்கடராமன் பி. ஏ., பி. எல்., மொழிபெயர்த்தது.	1	8
கலைஞன் தியாகம்— (ஸ்ரீ கி. வா. ஜகந்நாதன்)	1	8
ஹைதர் காலம் (சிறு கதைகள்) ஸ்ரீ T. N. சுப்ரமண்யன் எழுதியது	1	0
வெறும் கோயில் விஷ்ணுஸகாராம் காண்டேகர்எழுதியது (ஸ்ரீ கா. ஸ்ரீ. ஸ்ரீனிவாசாசார்யர் மொழிபெயர்ப்பு)	1	8
குஸுமா (சரத் சந்த்ரர்) ஸ்ரீ அ. கி. ஜெயராமன் மொழிபெயர்ப்பு	1	4
முதற் காதல் (ஜவான்டர் ஜனீல் எழுதியது)	0	10
ரானடே (ஸ்ரீ சி. ரா. வேங்கடராமன்)	1	8

★

SANATHANA DHARMA	1	8
TWO PLAYS of BHASA. (Sri A. S. P. Iyer)	1	8
BAGAVAD GITA (By Sri D. S. Sarma)	0	6

தபாற் செலவு, ரயில் செலவு முதலியவை பிரத்யேகம்.

எமது எல்லா ரயில்வே புத்தகசாலைகளிலும், ஏஜண்டுகளிடமும் கிடைக்கும்.

மானேஜர்,

"சுதேசமித்திரன்" புத்தகசாலை, சென்னை.

Printed and Published by T.S. Visvanatha Iyer, B.A., at the Swadesamitran Power Press, Mount Road, Madras.-Editor, C.R. Srinivasan, B.A.

சுதேசமித்திரன்

வாரப்பதிப்பு

Vol. 13 No. 15 10-5-'42 Price 2 Annas.

வாரப் பதிப்பு சுதேசமித்திரன் 10-5-1942

சென்றவார நிகழ்ச்சிகள்

ஸ்டாலின் செய்தி

மே தினத்தை முன்னிட்டு மிஸ்டர் ஸ்டாலின் ரஷ்ய மக்களுக்கு ஒரு செய்தியை விடுத்தார்:—

"நமது நாட்டை துரோகமாக ஹிட்லர் தாக்க ஆரம்பித்து, 10 மாதங்களுக்கதிகமாகிவிட்டது.

"இந்தப் பத்து மாத காலத்தில் ஏற்பட்ட நெருங்கிய தொடர்பால் நாஸிகளின் உண்மையான நோக்கம் தெளிவாகியிருக்கிறது, இந்த எதிரிகள் எப்படிப்பட்டவர்கள்? மற்ற நாட்டினர் ஜெர்மன் சுதந்திரத்தைத் தாக்குவதால், அதைத் தடுக்கப் போர்புரியும் தேசியவாதிகளெனத் தம்மை நாஸிகள் கூறிக்கொள்கின்றனர். இது பொய். உண்மையில் நாஸிகள் தேசியவாதிகளல்ல; வேறு நாடுகளைப்பிடிக்கும் பேராசை கொண்ட ஆக்ரமிப்புக்காரர்கள்.

இந்த யுத்தம் காரணமாக ஜெர்மனியிலும், ஜெர்மன் சேனையிலும் ஸோவியத் சேனையின் நிலைமையிலும் பெரிய மாறுதல்கள் ஏற்பட்டுள்ளன. 10 மாதங்களுக்கு முன்பிருந்ததைவிட ஜெர்மனியும் ஜெர்மன் சேனையும் பலஹீனமடைந்திருக்கின்றன.

ஆனால் ஸோவியத் ரஷ்யாவின் பலம் இந்த யுத்தத்திற்கு முன்பிருந்ததைவிட மிக அதிகரித்திருக்கிறது. முன்பெல்லாமிருந்ததைவிட நமது நாட்டினர் அதிகமாக ஒற்றுமையடைந்திருக்கிறார்கள்.

மற்ற நாடுகளுடன் நமது உறவு மிக அபிவிருத்தியடைந்திருக்கிறது.

* * * *

ஸால்ஸ்பர்க் சந்திப்பு

ஹிட்லரும், முஸோலினியும் ஸால்ஸ்பர்க் நகரில் சென்ற மாதம் 30-ம் தேதி சந்தித்துப் பேசினர். இரு தலைவர்களின் நெருங்கிய நட்பும், ஜெர்மனி-இத்தாலியின் இணைபிரியாத ராணுவத் தொடர்பும் பேச்சுகளில் விளங்கிற்று. என ஜெர்மன் செய்தி ஸ்தாபனம் அறிவிக்கிறது.

பேச்சுகளில் வான் ரிப்பன்ட்ராப்பும், ஸியானோ பிரபுவும் கலந்து கொண்டனர். ரோம் நகரிலுள்ள ஜெர்மன் தூதரும், பெர்லினிலுள்ள இத்தாலியத் தூதரும் ஹிட்லர்-முஸோலினி பேச்சுகளின்போது கூட இருந்தனர். இரு நாட்டு சேனை நிர்வாகத் தலைவர்களும் பேச்சுகளில் கலந்துகொண்டனர். பூர்ண அபிப்பிராய ஒற்றுமை இருந்ததுபற்றி முஸோலினிக்கு ஹிட்லர் வாழ்த்தனுப்பியுள்ளார்.

* * * *

மாண்டலே வீழ்ச்சி

பர்மாவின் பழைய தலைநகரான மாண்டலேயை ஜப்பானியர் இம் மாதம் 1-ந் தேதி ஆக்கிரமித்துக்கொண்டதாக அறிவிக்கப்படுகிறது.

இதுவரை பிரிட்டிஷ் அதிகாரிகளோ, சீன அதிகாரிகளோ இச் செய்தியை உறுதிப்படுததவில்லை. எனினும் கடைசியாகக் கிடைத்த செய்தியிலிருந்து மாண்டலேயைக் காப்பதில் மகத்தான சங்கடம் ஏற்பட்டிருக்கிறதென்பது தெளிவு.

லாஷியோவை ஜப்பானியர் ஏற்கனவே கைப்பற்றி விட்டார்கள். இந்நிலையில் மாண்டலேயைக் காப்பாற்றுவதற்காகப் பெருவாரியான துருப்புகளைக் காவுகொடுப்பது உசிதமல்லவென்று லண்டனிலுள்ள அதிகாரிகள் கூறுகின்றனர்.

ஜப்பானியப்படை பர்மா சீனா ரஸ்தாவில் ஸென்வி வரை முன்னேறியிருப்பதாகத் தெரிகிறது. ஸென்வி கோட்டை லாஷியோவுக்கு வடக்கே 25 மைல் தூரத்திலிருக்கிறது.

* * * *

ஜப்பானியர் நோக்கமென்ன?

நேச சேனைகளின் தலைவரான ஜெனரல் ப்ளேமி பத்திரிகை நிருபர்களிடம் பின்கண்டபடி கூறினார்:—

ஆஸ்திரேலியாவுக்கு வட கிழக்கே ஜப்பானியர் மேலும் படைகளைக் குவிக்கின்றனரென்பது நிச்சயம். எதிரியின் விமானத் தாக்குதல் அதிகரித்துள்ளதிலிருந்து மேலும் ஏதோ திட்டம் செய்திருக்கின்றனரென்பது தெரிகிறது. நமது வெளி அரண்களைப் பிடித்துக்கொள்வதோ, அமெரிக்காவுடன் நமக்குள்ள கடல் மார்க்கத்தைத் துண்டிப்பதோ எதிரியின் திட்டமாயிருக்கலாம். ஆனால் நமது பலமும் ஓங்கியிருக்கிறது.

சமீபத்தில் இலங்கைமீது நடந்த தாக்குதல் படையெடுப்பிற்காகவா அல்லது பர்மாவில் நடக்கும் போரிலிருந்து நம் கருத்தைத் திருப்பவா என்று தெரியவில்லை.

மார்ஸ்பி துறைமுகமோ டார்வினோ இரு கக்ஷிகளுக்கும் முக்கியமல்ல; ஆனால் இவை தாக்குதல் தளமாக உபயோகப்படலாம்.

* * * *

அமெரிக்கா ஜப்பானைத் தோற்கடிக்கும்

"அமெரிக்க மக்கள் நீண்ட யுத்தத்திற்குத் தயார்; இறுதியாக வெற்றி கிடைக்கும் வரை போர் செய்யும் உறுதிகொண்டிருக்கின்றனர்." என மிஸ்டர் வினன்ட் லண்டன் திரும்பிய பின் பத்திரிகை நிருபர்களிடம் தெரிவித்தார்.

"அமெரிக்கர் ஜப்பானைத் தோற்கடித்துக்கொள்வர்; ஜெர்மனியைத் தோற்கடிக்கும் சந்தர்ப்பம் ரஷ்யாவுக்கு அளித்துள்ளோம்."

* * * *

விசாகை கலெக்டர் அபயம்

சென்ற மாதம் 30-ந் தேதி விசாகப்பட்டணம் டவுன் ஹாலில் நடந்த பிரம்மாண்டமான பொதுக்கூட்டத்தில் விசாகப் பட்டணம் ஜில்லாக் கலெக்டர் மிஸ்டர் ஸி. எச். மாஸ்டர்மன் பேசுகையில் "கடற்கரையின் இப்பகுதியில் உடனே எதிரிப் படையெடுப்பு நடப்பதற்கில்லை; இன்னும் நீண்ட நாள் கழித்து ஏற்பட்டால் ஏற்படலாம். ஆகவே யாரும் பயப்படவேண்டிய அவசியமில்லை" என்று கூறினார்.

மிஸ்டர் மாஸ்டர்மன் மேலும் கூறியதாவது:—

ஜப்பானியப் படையெடுப்பின் முதல் அதிர்ச்சி இப்பொழுது தீர்ந்து விட்டது. ஆகவே இங்கு வசிப்பதால் ஏற்படக் கூடிய அபாயங்களைப்பற்றியும், அசௌகர்யங்களைப்பற்றியும் பேசுவதை ஜனங்கள் இனி நிறுத்தி நிலைமை நாம் எதிர்பார்க்கிறபடி அவ்வளவு மோசமாக இல்லையென்பதை உணருவரென நம்புகிறேன்.

இந்நகரின் நிலைமை சம்பந்தப்பட்டமட்டில் துளியும் அதைரியப்பட வேண்டிய அவசியமே இல்லை. விமானங்களை ஏற்றி வரும் கப்பல்கள் மூலமாகவே இங்கு விமானத் தாக்குதல் நடந்ததென்பதை உங்களில் பலரும் அறிவர். மேற்படி கப்பல்களுக்குத் துணையாகக் கடற்படை ஒன்றும் வந்தது. இப்பொழுது இக் கடற்படையும் விமானம் தாங்கிய கப்பல்களும் அவற்றிலிருந்த விமானங்களும் கொழும்புக்குச் சமீபத்தில் கடுமையாகத் தாக்கப்பட்டதால் இப்பொழுது வங்கக் கடலிலிருந்து பின்வாங்கி சிங்கப்பூருக்குக் கிழக்குப் பக்கமாகப் போயிருக்கின்றன.

வெகு நாட்கள் கழித்து என்ன நேரிட்டாலும் சரி, கடல் மூலமாகவோ அல்லது ஆகாய மூலமாகவோ இந்தக் கரைக்கு உடனே எவ்வித அபாயமும் ஏற்படாது; அந்த அபாயம் மறைந்து விட்டது.

* * * *

புதிய விமானத்தொழிற்சாலை

இந்தியாவிலேயே விமானங்களைத் தயாரிப்பதற்காக டாடா கம்பெனியார் புதிய தொழிற்சாலை ஒன்றை ஆரம்பித்திருக்கின்றனர். யுத்தம் ஆரம்பித்த பிறகு இந்நாட்டில், இந்தியரால் ஏற்படுத்தப்படும் விமானத்தொழிற்சாலையில் இது இரண்டாவதாகும். தொழிற்சாலை மேற்கிந்தியாவில் ஒரு இடத்தில் அமைக்கப்பட்டிருக்கிறது. வெளிநாட்டிலிருந்து ஏராளமான நிபுணர்கள் தருவிக்கப்பட்டிருக்கின்றனர். டாடா கம்பெனியாரே பூரா மூலதனத்தையும் போட்டிருக்கின்றனர். இப்பொழுது பொதுமக்களிடமிருந்து பணம் வசூலிக்கப்படமாட்டாது. சமீபகாலம் வரையில் இந்திய விமானப்போக்கு வரத்து இலாகா அதிகாரியாக இருந்த ஸர் பிரடரிக் டிம்ஸ் மேற்படி தொழிற்சாலையில் சேர்ந்திருக்கிறார்.

* * * *

ஸர் கிரிப்ஸ் விளக்கம்

இந்தியாவுக்குத் தாம் தூது சென்றதுபற்றி விவரமான விவாதமொன்றைக் காமன்ஸில் ஆரம்பித்து வைக்கையில் ஸர் ஸ்டாபோர்ட் கிரிப்ஸ் பின்வருமாறு கூறினார்:—

நான் சென்ற சமயம் மூன்று விஷயங்களில் மிக நெருக்கடியானது. முதலாவதாக இந்தியாவை நோக்கி ஜப்பானியப் படைகள் வந்துகொண்டிருந்ததால், இந்தியப்பாதுகாப்பை நடத்துவதே மற்றெல்லா விஷயங்களை விட முக்கியமாயிருந்தது. இரண்டாவதாக, தூரக்கிழக்கில் நடத்தும் யுத்தத்தோடு அச்சு நாடுகள் வெகு கெட்டிக்காரத்தனமாகப் பொய்ப் பிரசாரம் செய்து வந்ததால், சில இந்தியர் பிரிட்டிஷாருக்கு விரோதமான மனப்பான்மை கொண்டிருந்தனர். எதிர்காலத்தில் என்ன நடக்குமென்ற நிச்சயம் இந்தியருக்கில்லை. மூன்றாவதாக குடியேற்ற நாட்டந்தஸ்தாகிய சுயஆட்சி கிடைக்கப் போகிறதென்று தெரிந்தும், இந்திய சர்க்கார் அமைப்பைப்பற்றி பல வகுப்பினர் பலவிதமான கருத்துகளை உறுதியாகக் கூறத் தொடங்கினர். இரண்டு வருஷங்களுக்கு முன்புகூடச் சில தீவிர வாதிகளின் தெளிவற்ற கருத்தாக இருந்த பாகிஸ்தான் திட்டம் மிகப் பலம் வாய்ந்த முஸ்லீம் அரசியல் ஸ்தாபனத்தின் முக்கியத் திட்டமாயிற்று.

இம்மூன்று விஷயங்கள் இந்திய மக்களின் பொதுவான ஒற்றுமை ஏற்படுத்துவதில் தடையாயிருந்தன. இந்தியரை ஒற்றுமைப் படுத்த பிரிட்டிஷ் சர்க்கார் துரிதமான நடவடிக்கைகளெடுத்துக் கொள்ள வேண்டுமெனத் தீர்மானித்தனர், இந்தியாவின் எதிர்காலப் பிரச்னையைத் தீர்ப்பதும் இந்தியப் பாதுகாப்பைப் பலப்படுத்துவதுமே பிரிட்டிஷ் சர்க்காரின் நோக்கம். இதை ஈடேற்ற இரண்டு சமாசாரங்கள் அவசியம். ஒன்று எதிர்காலம் பற்றித் திட்டமான ஐயந்திரிபற்ற உறுதி மொழி; இரண்டு, இந்தியா யுத்தத்தை நடத்த வைஸ்ராய் நிர்வாக சபையில் பல வகுப்பினரும் அரசியல் கக்ஷிகளும் சேருமாறு அழைத்தல்.

சுய நிர்ணயத்தை எவ்வாறு தீர்மானிப்பது என்பதுபற்றியும் தற்போதைக்கு அமைக்க வேண்டிய சர்க்கார் பற்றியுமே அபிப்பிராயபேதம் காணப்பட்டது. தவிரவும், காங்கிரஸ் முஸ்லிம் லீக் இவ்விரண்டில் ஒன்றாவது ஒப்புக்கொள்ளாத எந்த பிரிட்டிஷ் திட்டத்தையும் மற்றச் சிறு கக்ஷிகள் ஒப்ப மறுத்தன.

* * * *



நூல் ஆராய்ச்சி

ஏடுகாத்த பெருங் கிழவர் ஆராய்ச்சியில் ஈடுபட்டிருக்கிறார்.

தனிப் பெருந் தமிழர்

“கே. எஸ். ஆர்.”

எழுதியது

“சென்ற ஐம்பது வருஷங்களில் இம்மாகாணத்தில் விளங்கிய பெரியார்கள் ஒவ்வொருவரையும் அநேகமாக எனக்குத் தெரியும். ஆனால் அறிவாற்றலில் சிறந்து கல்விக்காக முழுமனதுடன் பாடுபட்டதில் மகாமகோபாத்யாய’ சாமிநாதையருக்கு ஈடாக வேறு யாரையும் நான் அறியேன். ‘அதிவேகமாய்ச் சென்றுகொண்டிருக்கும் காலம் ஒரு நாளும் திரும்பி வராது’ எனும் உண்மையை அவரைப்போல் நன்குணர்ந்து ஒவ்வொரு நிமிஷத்தையும் நற்பயன்படுத்தி வருபவர்களையும் நான் பார்த்ததில்லை. கலைஞர்களாகக் கருதப்படுவோர் தங்கள் தங்கள் கலைகளிடத்தில் கொள்ளக்கூடிய சிரத்தா பக்தியில் இப்பெரியாரைப் போல் சிறந்தவர் தென்னிந்தியாவில்-ஏன் இந்தியாவில்கூட-இல்லையென்றே அச்சமின்றிச் சொல்லுவேன்.”-இவ்விதம் மகாமகோபாத்யாயரின் சதாப்தி சமயத்தில் ஸ்ரீ வி. வி. ஸ்ரீநிவாஸ அய்யங்கார் எழுதினார். மகாமகோபாத்தியாயர் இணையற்றவர்: தமிழ்த்தாயின் அருந்தவப் புதல்வர்: தாய் மொழிக்கு அருந்தொண்டாற்றியவர்: நிறைவேற்றிவைத்த பணி நிகரிலாச்சிறப்பு வாய்ந்தது. இம்மகா புருஷரின் கிருஹம் கலைமகள் நிலையமாகத் திகழ்கிறது. இப்பெரியாருடைய புகழ், தமிழ் மணக்கும் இடங்களில் எல்லாம் பரவி விளங்குகிறது; தம் ஆயுட்காலம் முழுமையும் கல்வி அபிவிருத்திக்காகவும் ஆராய்ச்சியின் மேம்பாட்டிற்காகவும் உழைத்தார்: ஏடுகாத்த இப்பெருங்கிழவர் தம் அந்தியகாலம் வரையிலும் பழஞ்சுவடிகளைப் புரட்டிப்படித்து, பிறருக்கும் அவை பயன்பெறும் வழியையே நாடிவந்தார்: தமிழ் மொழி மறுபடியும் தழைத்தோங்க உதவினார். வடமொழிக்குச் சமமான ஸ்தானத்தைத் தென்மொழிக்கும் சம்பாதித்துக் கொடுத்தார். திராவிட பாஷையில் இருந்த விலையற்ற மாணிக்கங்களைக் கண்டெடுத்த பெருமை அய்யரவர்களையே சார்ந்தது. எல்லாவற்றிற்கும் மேலாக நம் தமிழ் தனிமதிப்பு பொருந்தியது என்பதை நிரூபித்தவர் இவர்தான். ஸ்ரீ சக்ரவர்த்தி ராஜகோபாலாச்சாரியர் கூறியதுபோல் “ஸ்ரீ சாமிநாதையரின் கல்வி கடலைப்போன்றது. மெய்வருத்தம் பாராத அவருடைய முயற்சியுடன் தேனீயும் எறும்புமே போட்டியிடலாம். தாய் மொழியின் தொண்டிலும் கல்வி முயற்சியிலும் அவருடன் நாம் போட்டியிட முடியாதாயினும் அவருடைய அடக்க குணத்தையாவது நாம் கற்றுக்கொள்ள வேண்டும்” இத்தகையகுண விசேஷங்கள் அமைந்து அண்டுவோர் அனைவராலும் ஒரு முகமாகப் பாராட்டப்பட்டுவந்த மகாமகோபாத்யாய தாக்ஷிணாத்ய கலாநிதி டாக்டர் உ. வே. சாமிநாதையர் சமீபத்தில் திருக்கழுக்குன்றத்தில் தேகவியோகமானது, முக்கியமாய் நம் தமிழ் நாட்டிற்கும் பொதுவாக கல்வி உலகிற்கும், அளவிட முடியாத நஷ்டமாகும்.

தமிழுக்குச் செய்த தொண்டு

ஆயிரம் பிறைகண்ட அய்யரவர்கள் “வேதநாற் பிராயம் நூறு” வரை ஜீவந்தர்களாயிருந்து தாம் மேற்கொண்ட பணியை மேலும் மேலும் தொடர்ந்து நடத்தி வருவார் என்று



இரண்டு பிரசித்த வித்யாதிகர்கள்

மஹாமஹோபாத்யாய சாமிநாதையரும் ராவ் பஹதூர் புரொபஸர் எம், ரங்காச்சாரியரும். 1911-ம் வருஷம் பிரஸிடென்சி காலேஜில் இருந்த போது எடுக்கப்பட்டது.

தமிழ்நாடு ஆவலுடன் எதிர்பார்த்தது: ஆசை நிராசையாகி விட்டது; தமிழர் இன்று துக்க சாகரத்தில் ஆழ்ந்திருக்கின்றனர். நம்மை விட்டுப் பிரிந்து சென்ற இவ்வுத்தமர் சில தினங்களுக்குமுன் கால் எலும்பு அகஸ்மாத்தாய் முறிந்துவிட்டது காரணமாக படுத்த படுக்கையாகவே இருந்து வந்தார்: நம் நகர நிலைமை கேவலமாகிவிட்டதை யொட்டி திருக்கழுக்குன்றத்தில் உள்ள திருவாவடுதுறை மடத்திற்கு சென்றார்: தேகத் தளர்ச்சியும் தள்ளாத வயதும் அய்யரவர்கள் திடீரென வியோகமாகியதற்குக் காரணமாயின: நம்மோடு அன்புடன் பேசி, தமது கலைச் செல்வத்திலிருந்து நமக்கும் ஒரு பங்கு அளித்த தாக்ஷிணாத்ய கலாநிதி இப்போது மறைந்துவிட்டார்! ஆயினும் அவரது பேச்சின் இனிமையையும் சாதுர்யமான ஸ்வபாவத்தையும், இளையவர்களிடமும் காட்டிய விஸ்வாசத்தையும், கலாபிவிருத்தியில் கொண்ட ஆர்வத்தையும், கடமையில் கருத்து கொண்டு கஷ்டத்தையும் பொருட்படுத்தாமையையும் எவர் மறுக்க முடியும்? தமிழ்ப் பெரியாருடன் நெருங்கிப் பழகிய எவர்தான் தம் தாய் பாஷையிடம் புத்துணர்ச்சியும் மட்டிலாத மகிழ்ச்சியும் வற்றாத ஊற்றுபோன்ற உத்சாகத்தையும் கொள்ளாமல் இருக்கமுடியும்? இப்போது தமிழா நாகரிகம், அதன் பழமை ஆகியவற்றைப்பற்றியெல்லாம் பிரஸ்தாபம் அதிகரித்து வருகிறது. சாமிநாதையரவர்களின் சேவையின்றேல் இப்பேச்சுகளுக்கு இடமே இருந்திராது: இம்மாபெருங் கிழவருக்குத் தமிழ்நாடு நன்றி பாராட்டத் தயங்கவில்லை: அது தன் கடமை என்பதையும் உணர்ந்திருக்கிறது. அய்யரவர்கள் ஒரு உன்னதமான கலைவீரர்: தமிழணங்கு தன் ஆபரணங்களை இழந்து சட்டை செய்வாரின்றி பரிதவிப்பதைப் பார்த்தார்: அவர் உடனே அவளுக்கு உதவி புரிய விரைந்தார்: ஒரு கலா ரஸிகர் பல வருஷங்களுக்கு முன்னர் எழுதியதுபோல், அவள் இழந்த ஐந்து ஆபரணங்களுள் மூன்றைக் கண்டெடுத்து அவற்றால் அவளை அலங்கரித்துள்ளார். சிந்தாமணியால் அவளது சிரஸுக்கு சோபையளித்து, மணிமேகலையினால் அவளது அழகிய இடையைச் சிங்காரித்து, சிலப்பதிகாரத்தினால் அவளது இரு பாதங்களுக்குத் திரும்பவும் இனிய ஓசை ஒலிக்கும் சதங்கையை அணிவித்திருக்கிறார்; “கைவளையலாகிய வளையாபதியையும் காதணியாகிய குண்டலகேசியையும் கண்டெடுத்து அவளது காந்தி அதிகரிப்பதையே அவர் எதிர்பார்க்கிறார்” என்றார் அந்த அபிமானி. உத்க்ருஷ்டமான பணி: உத்சாக மளிக்கும் பணி: உயர்வு காட்டும் பணி: ஐயரவர்களின் பணி இவ்விதமானது.

கல்வி பயில ஆரம்பித்தது

மஹாமஹோபாத்யாயர் கும்பகோணத்திற்கருகாமையிலுள்ள சூரிய மூலை என்னுமோர் கிராமத்தில் தோன்றினார். 1855-ம் வருஷம் பிப்ரவரி மாதம் 19-ந் தேதி பிறந்தார். பிதாவின் பெயர் வெங்கடசுப்பய்யர்; சொந்த ஊர் உத்தமதானபுரம். இவர் பிறந்த வருஷத்தைப் பற்றி ஒரு குறிப்பை இங்கு எடுத்துக்காட்டுவது உசிதமாகும். “ஒவ்வொரு தாயும் தன்னுடைய குழந்தையை அத்ருஷ்டசாலியாகக் கருதுவது வழக்கம். தங்களுக்குக் கிடைத்த லாபங்களை யெல்லாம் அக் குழந்தையின் அத்ருஷ்ட பலனாகவே பாராட்டுவாள். என்னுடைய அன்னையாரும் அவ்வாறு சொல்வதுண்டு, நான் பிறந்த வருஷத்தில் எங்களுக்கென்று அரியலூரில் ஒரு வீடு ஏற்பட்டது என் அத்ருஷ்டத்தின் பலன் என்றே நம்பினார். அதுமட்டுமன்றி, அந்தப் பக்கத்திலிருந்த ஒரு சந்நியாசி இறக்கும்போது, ‘ஆனந்த வருஷத்தில் இங்கே ஒரு அதிசயம் நடக்கப்போகிறது. அதைக் காணாமல் போகிறேன்’ என்று சொல்லி உயிர் நீத்தாராம். இந்த நாட்டிற்கு முதல் முதலாக ரயிலும் தந்தியும் வந்தமையே அவர் கூறிய அதிசயம் என்று எல்லோரும் கருதினார்கள். அந்த அதிசயம் நிகழ்ந்த வருஷத்தில் நான் பிறந்ததும் ஓர் அதிசயம் என்றே என் தாயாரின் உள்ளத்தில் ஒரு சந்தோஷ உணர்ச்சி உண்டாகியிருக்கக்கூடும். ஆனால் அதை வெளிப்படையாகச் சொல்வதில்லை. ‘இப்படி ஒரு சந்நியாசி சொன்னாராம். அந்த வருஷத்தில்தான் நீ பிறந்தாய்’ என்று பிற்காலத்தில் என் அருமை அன்னையார் அன்புடன் கூறியிருக்கிறார். (என் சரித்திரம். அத்தியாயம் 8) தந்தையார் தமது வருத்தத்தைப் பாராட்டாமல் தனயனுக்குத் தகுந்த வித்தியாப்பியாசம் அளிக்கத் தீர்மானித்தார். பால்யத்திலேயே இவருக்குத் தமிழிலும் சங்கீதத்திலும் மிகுந்த விருப்பம் ஏற்பட்டு விட்டது. தகப்பனாரே இவருக்கு முதலில் தமிழாசிரியராக விருந்து, நிகண்டு, சதகம் முதலிய கருவி நூல்களைக் கற்பித்தார். பின்பு அரியலூர் சடகோபய்யங்காரிடம் இவர் பாடம் கேட்டார். “சடகோபய்யங்காரிடம் என்று நான் மாணாக்கனாகப் புகுந்தேனோ, அன்றே தமிழ்த் தாயின் அருட் பரப்பிற் புகுந்தவனானேன். எனக்குத் தமிழில் சுவை உண்டாகும் வண்ணம் கற்பித்த முதற்குரு சடகோபய்யங்காரே. பொம்மைகளைக் காட்டிக் குழந்தைகளைக் கவர்வது போல, தமிழ்ச் செய்யுட்களின் நயத்தை எடுத்துக் காட்டி, என் உள்ளத்திற்குள் அந்த இளம் பருவத்தில் தமிழ் விதையை விதைத்தவர் அவரே”

மஹா வித்வானிடம் சேர்ந்தது

இதற்கப்புறம் மற்றும் சில வித்வான்களிடமும், செங்கணம் எனும் ஊரிலிருந்த விருத்தாசல ரெட்டியார் என்ற கனவானிடமும் இவர் பாடம் படித்து தமிழ்

மஹாமஹோபாத்யாயர்

மேற்படி கௌரவத்திற்குரிய உடுப்புகளை அணிந்திருக்கையில் எடுத்த படம்.

நூல்களின் பரப்பை அறிந்து கொண்டதன்றி, மேலும் மேலும் பல நூல்களில் பயில வேண்டுமெனும் விருப்பத்தை அதிகமாக மேற்கொண்டார். ஆகவே இவரது ஆசிரியர்கள் அனைவரும் இவர் திருவாவடுதுறையாதீனத்து மஹாவித்வான் ஸ்ரீ மீனாக்ஷிசுந்தரம் பிள்ளையவர்களிடம் தான் இனிமேல் பாடம் கேட்கவேண்டும் என்று தெரிவித்து விட்டார்கள். அப்போது இவருக்குப் பிராயம் பதினேழு. 1871-ம் வருஷம் ஏப்ரல் மாதம் இவரது தந்தையார் இவரை மஹாவித்துவானிடம் அழைத்துச் சென்றார். அச்சமயம் அப்பெரியார் போட்ட சில கேள்விகளுக்கு அய்யரவர்கள் அளித்த பதில் அவருடைய அன்பை உடனே அள்ளிக் கொண்டது. சிறுவனைத் தம்மிடம் குருகுல வாஸம் பண்ணும்படி அவர் ஆக்ஞாபித்தார்: அதன் அவசியத்தையும் அவர் உணர்த்தினார், பிள்ளையை விட்டுப் பிரிகையில் பிதாவின் கண்களிலிருந்து சில நீர்த்துளிகள் கீழே உதிர்ந்தனவாம்! மஹாவித்வானை ஆச்ரயித்த பின்பு இவரது தமிழ்ஞானம் அளவு கடந்து விஸ்தரித்துவிட்டது. தமிழையே தாம் தொழும் தெய்வமாகக் கொண்டார். அக்காலத்தில் மடங்கள் தமிழ்ப் பாஷா சர்வகலாசாலைகள்போல் திகழ்ந்தன. இவற்றுள் பிரசித்தி பெற்ற திருவாவடுதுறை ஆதீனகர்த்தரின் அத்யந்த ப்ரியராயிருந்தார் மஹா வித்வான். அந்நாளில் மடாதிபதிகளான ஸ்ரீ அம்பலவாண தேசிகரும் மேலகரம் ஸ்ரீ சுப்ரமணிய தேசிகரும் மஹா வித்வானிடம் அன்புடன் உறவாடினர்: இவரது விசேஷ மதிப்பும் அவர்களது அத்தகைய அன்பையே கவர்ந்தது. மாயூரத்தில் இருக்கையில் சில காலம் ஸ்ரீ கோபாலக்ருஷ்ண பாரதியாரிடம் இவர் பெற்று வந்த இசைப் பயிற்சி, சிறிது காலத்திற்கப்புறம் மஹாவித்வானின் உத்திரவு காரணமாக பங்கமடைந்தது. இவரது பெயர் மாறியதற்கும் மஹாவித்வானை மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள்தான் காரணம்.

என்னுடைய இயற்பெயர் வெங்கடராமன் என்பது: அதுவே சர்மா நாமம். இவரிடம் என் தந்தையார் சொல்லியதும் வெங்கடராமன் என்பதே, அப்பெயராலேயே என்னை அழைத்து வந்த இவர் சில தினங்களுக்குப் பின் ஒரு நாள் என்னை நோக்கி “வீட்டார் உம்மை அழைப்பது இந்தப் பெயராலேயா? அன்றி உமக்கு வேறு பெயருண்டோ?” என்றுகேட்டார். நான் “வெங்கடராமன் என்பது மூதாதையின் பெயராதலின் தாய்தந்தையர் அவ்வாறு அழையாமல் சாமிநாதன் என்பதன் திரிபாகிய ‘சாமா’ என்று அழைப்பார்கள்” என்றேன். “சாமிநாதன் என்ற பெயரே நன்றாயிருக்கிறது. இனி அப்பெயராலேயே உம்மை அழைக்கிறேன்” என்று கூறி அன்றுமுதல் அப்பெயராலேயே அழைத்து வருவாராயினர். இவருடைய விருப்பத்தின்படி பிறரும் அங்ஙனமே செய்துவந்தார். (ஸ்ரீ மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் சரித்திரம் இரண்டாம் பாகம் பக்கம் 18.)

"இலக்கிய டாக்டர்"

சென்னை சர்வகலாசாலையார் மரியாதை செய்தபோது எடுத்த படம்.

குருவின் சரித்திர விசேஷம்

அவரது விருப்பத்தினுல் அப்பெயரே சாஸ்வதமாக நிலைத்துவிட்டது. அய்யரவர்கள் தமது குருவின் சரித்திரத்தை மிகவும் விஸ்தாரமாக எழுதியிருக்கிறார். நம் மஹாமஹோபாத்யாயருக்கும் மஹா வித்வானுக்கும் இருந்த நெருங்கிய சம்பந்தம் இப்புத்தகத்தின் இரண்டாம் பாகத்தில் மிகவும் விரிவாக விவரிக்கப்பட்டிருப்பது நம் பாக்கியமாகும். இந்த மஹா வித்வானின் சரித்திரம் தமிழகத்திற்குப் பெருமையளிப்பதாகும். சரியான காலக் குறிப்புகள்: சுற்றுப்புறமுள்ள ஸ்திதி விளக்கம்: பெரியாரின் பிரபந்த ஆராய்ச்சி: இவற்றை இவ்வுத்தம நூலில் வாசர்கள் காணலாம், மஹாவித்வானின் பெருமைக்குரிய காரணங்களையும் இவர் குறிப்பிட்டிருப்பது தமிழ் நாட்டினர் இவருக்குக் கிருதக்ஞர்களாக விருக்கும்படிச் செய்கிறது. இப்புத்தகத்தைப் பூர்த்தி செய்விப்பதற்கு இவருக்கு 45 வருஷ காலப்பிரயாசை ஏற்பட்டது. இது 1933-ல் பிரசுரமாகியது. இப்புவியில் தமிழ் உலாவி வரும் பரியந்தம் இச்சரித்திரம் ஜீவித்திருக்கும் என்பதில் ஐயமிராது. இக்காலம்போல் அல்லாத முந்திய நாட்களில் எட்டுச்சுவடிகளைக் கூர்ந்து கவனிப்பதும் அவற்றைக் கஷ்டப்பட்டு படித்தாராய்வதும் தான் முக்கியமானவை. அச்சுப் பிரதிகள் அந்நாளில் அவ்வளவாகக் கிடையா: புலப்படாதவற்றின் விளக்கத்தை வினயத்துடன் வித்வான்களிடம் விசாரித்து வித்யாதனத்தை சம்பாதித்து வந்தனர்: வித்தியாபி விருத்திக்கு இன்றியமையாததான வினயம் நம் அய்யரவர்களிடம் அக்காலத்திலிருந்தது பற்றி இவர் தமிழ்ப் புலமையின் உச்சியை எட்டிவிட்டார். இவர் மாயூரத்தில் மஹாவித்வானிடம் இருந்துவரும் கும்பகோணம் காலே கலாசாலைத் தமிழ்ப் பண்டிதர் தியாகராஜ செட்டியாரும் அடிக்கடி அங்கு வருவதுண்டு: இதனுல் இவருக்கும் அவரிடம் அதிக பரிச்சயம் ஏற்பட்டது: இது பிற்காலத்தில் பயனையும் அளித்தது. 1876-ல் ஸ்ரீ பிள்ளையவர்கள் மரணத்தினுல் இவர் மிகுந்த துக்கத்தையடைந்தார். அப்போது இதைக் கண்டு இவரிடம் பரிவுகொண்ட ஸ்ரீலஸ்ரீ சுப்ரமணிய தேசிகர் இவரை மதுரைக்கு அழைத்துச் சென்று, அங்கு இவர் பண்டித சமூகத்தில் புகழ் எய்த உதவினுர். 1880-ல் தியாகராஜ செட்டியார் தமிழ் பண்டிதர் பதவியை விட்டு விலகினுர். தமக்குப் பின்னர் தகுதியானவர் அய்யர் தான் என்பதைத் தலைவர் ராவ்பஹதூர் டி.கோபாலராவிடம் அவர் தெரிவித்தார். சாது சேஷய்யா, திவான்பஹதூர் ஆர். வி. ஸ்ரீநிவாஸய்யர், பி. ஹனுமந்தராயர் ஆகியவர்கள் இந்த நியமனத்தை முழு மனதுடன் ஆதரித்தனர். அவ்வருஷம் பிப்ரவரி மாதம் இவர் புது வேலையை ஏற்றுர். மரணபரியந்தம் செட்டியார் செய்த உபகாரத்தை மறவாமல் அவர்களது புகழ் நிலைத்திருக்க வழி தேடி வந்தார்.

ஆராய்ச்சியில் ஈடுபட்டது

பண்டைய நூல்களைக் கண்டெடுத்து அவற்றை ஆராய்ச்சி செய்து தமிழுலகிற்குப் பேருதவி புரிந்த இப்பெரியாரைப் போற்றுதார் யார்? ஒரு சமயம் சேலம் ஸ்ரீ ராமசாமி முதலியார் 'ஜீவக சிந்தாமணி' பிரதியை இவரிடம் கொடுத்து, அதைத் தமக்கு விளக்க வேண்டும் என் விரும்பினுர்: பின்னர் பிழையின்றி அதை அச்சிற்ப் பதிப்பிக்கத் தாம் உதவுவதாகவும் அவர் கூறினுர். அன்று ஆரம்பித்தது இம்மஹத்தான தொண்டு: உடலில் ஆவி இருக்கும் வரை தளர்வின்றி நிறைவேறி வந்தது. குன்றுத ஊக்கம்: வெறுப்புருத விஸ்வாசம்: இவைதான் இவர் தமிழ்நாடு மேன்மையுற முனைந்ததற்கு உதவின. சுவடிகளைக் கண்டுபிடிக்கவும் அவற்றைச் சம்பாதிக்கவும் இவர் சளைக்கவில்லை: சிரமத்தால் சோர்வடையவில்லை: தேடி அலைந்ததற்கும் குறைவில்லை. இவர் பதிப்பித்த நூல்கள்தான் தமிழின் முதிர்ச்சியையும் தமிழின் பெருமையையும், தமிழர் நாகரீகத்தையும் நாம் இன்று அறிதற்குக் காரணபூதமானவை. 'சிந்தாமணி' 1887-ம் வருஷம் அக்டோபர் மாதம் வெளிவந்தது. இதில் இவருக்கேற்பட்ட சிரமத்தை முகவுரையில் இவர் எழுதிய பின் கண்ட வாக்கியங்கள் புலப்படுத்தும்.

மதுரைத் தமிழ்ச் சங்கம். மத்தியில் இருப்பது ராமநாதபுரம் ராஜா. அவருக்கு வலது மஹாவித்வான் ரா. ராகவய்யங்கார். இடது மஹாமஹோபாத்யாயர். இடது கோடி மஹாமஹோபாத்யாய ம. வி. ராமாநுஜாச்சாரியார்,

பண்டித சமூகம்

மஹாமஹோபாத்யாய அய்யரவர்களின் 60-ம் ஆண்டு பூர்த்தியான சமயம் பல வித்வந் மணிகள் அவரைக் கௌரவித்தனர்.



எழுத்தும் சொல்லும் மிகுந்தும் குறைந்தும் பிறழ்ந்தும்திரிந்தும், பலவாறு வேறுபட்டுக் கிலமுற்றிருந்த இந்நூலுரைப் பழையப் பிரதிகள் பலவற்றையும் பலகால் ஒப்பு நோக்கி இடையுருத பரிசோதனை செய்துவந்தபோது, கவிகளின் சுத்த வடிவத்தையும் உரையின் சுத்த வடிவத்தையும் கண்டு பிடித்தற்கும், உரையினுள் விசேஷ உரையின்னது பொழிப்புரை யின்னதென்று பிறித்தறிதற்கும், மேற்கோள்களின் முதலிறுதிகளைத் தெரிந்து கோடற்கும், பொழிப்புரையை மூலததோடு இயைத்துப் பார்த்தற்கும், பிழையைப் பிழையென் நிச்சயித்து பரிகரித்தற்கும் பொருள் கோடற்கும் எடுத்துக் கொண்ட முயற்சியும் அடைந்த வருத்தமும் பல.

மஹாமஹோபாத்யாயர் 1927-ம் வருஷ இறுதியில் சென்னை சர்வகலாசாலையார் விரும்பியபடி "சங்கத்தமிழும் பிற்காலத்தமிழும்" என்ற தலைப்பின் கீழ் பத்துப் பிரசங்கங்களைப் புரிந்தார். இதில்காணப்படும் ஒரு பகுதி இவர் ஆராய்ச்சியின்போது எடுத்துக்கொண்ட சிரமத்தைச் சுட்டிக்காட்டுகிறது.

ஆராய்ச்சி அனுபவத்தைப் பொறுத்தது. சுவடிகளைப் பிரதி செய்வித்து ஒப்புநோக்கி ஒழுங்கு செய்தல் முதலியனவும் ஆராய்ச்சியில் அடங்கும்...ஒரு நூலை அப்படியே பிரதிசெய்விக்கக் கூடியவர்கள் இந் நாளில் இல்லை. சுவடியைக் கண்டால் இக்காலத்தில் ஓட்டம் எடுக்கிறுர்கள்...அன்புடையவர்களுக்கே அவ்வேலையைச் செய்வது சாத்தியம். ஒப்புநோக்கும்போது சரியாக விருக்கிறதா என்று கேட்டால் அன்பில்லாதவர்கள் சரியென்று சொல்லிவிடுவார்கள. சிந்தாமணியைப் பரிசோதிக்கையில் நான படித்த ஒவ்வொரு வரியும் பாட்டும் சரியாக உள்ளன என்றே ஓய்வில்லாமல் ஒருவர் சொல்லிக்கொண்டிருந்தார். அவர்பால் ஐயமுற்றுச் சிந்தாமணியிலிராத வேறு நாலிலுள்ள பாட்டொன்றைச் சொல்லிச் சரியாக இருக்கிறதா என்று கேட்டேன். அவர் சரியென்று மிகத் துணிவாகச் சொன்னுர். அதன் பின் அவரை மெல்ல விலக்கிவிட்டேன். (பக்கம் 135)

சிரமத்தின் மற்றெரு உதாரணத்தையும் எடுத்துக்காட்டலாம்.

"சிந்தாமணி உரையில் ஓரிடத்திற் பஞ்சாட்சரம் உபதேசிக்கப்பட்டதாக எழுதியிருந்தது. சிந்தாமணியோ சைனர்களுடைய நூல். இறக்கும் நிலையிலிருந்த ஒரு நாயின் காதில் மந்திரம் உபதேசிக்கப்பட்டதென்பது சந்தர்ப்பம்: உரையைப் பிரதி செய்தவர் உரையாசிரியர் எழுதியிருந்த 'பஞ்சநமஸ்காரம்' என்பதை 'பஞ்சாட்சரம்' என்று எண்ணிவிட்டாரென்று தோன்றியது.

(பக்கம் 137)

பதிப்பித்த பிரசித்த நூல்கள்

சிந்தாமணியின் இரண்டாம் பதிப்பு 1907-லும் மூன்றும் பதிப்பு 1922-லும் வெளிவந்தன. பின் வந்த ஒவ்வொரு பதிப்பும் முந்தியதை விட விசேஷமாகச் சோபிக்கிறது: ஞானப் பரப்பு மேலும் பிரகாசிக்கிறது. சிந்தாமணியைப் பதிப்பித்து வரும் போதே சிலப்பதிகாரம், மணிமேகலை, வளையாபதி, குண்டலகேசி என்பவற்றைப்பற்றி இவர் அறிந்து கொண்டார். இந்தப் பதிப்பு நிறைவேறியவுடன் மணிமேகலை ஆராய்ச்சியில் இவர் கருத்தைச் செலுத்தினுர். பத்துப்பாட்டு முன்பு வெளிவந்தது. மணிமேகலை 1898-ல் பதிப்பித்து நிறைவேறியது. இதன் முகவுரையில் ராவ் பஹதூர் எம். ரங்காச்சாரியார் செய்த மகோபகாரம் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

"தமிழ் மகள் தன் மணிமேகலையை இழந்திருந்தாள். அதனைக் கண்டெடுக்கும் பேறு எனக்கு வாய்த்தது ஆயினும் அதில் பதித்திருக்கின்ற ரத்தினங்களின் தன்மை இன்னதென்று முதலில் எனக்குத் தெரியவில்லை. அதனை ரங்காச்சாரியார் அறிவித்தார். மணிமேகலை மீட்டும் துவக்கப்பெற்றுத் தமிழ் மகளின் இடையை அலங்கரித்து நிற்கிறது." (நினைவுமஞ்சரி, பக்கம் 28)

1892-ல் சிலப்பதிகாரமும், 1894-ல் புறநானூறும் இவரால் அச்சிடப்பட்டன.

மஹாமஹோபாத்யாயருக்கு வாழ்த்து

இதற்கப்புறம் இவருக்குக் கௌரவங்களும் விரலாயின: சன்மானங்களும் வந்து குவிந்தன: கலாசாலையிலும் மாணவர்களால் மிகவும் பாராட்டப்பட்டார். தமிழ்ப்பண்டிதர் வகுப்புக்குப் பெருமையும் ஏற்பட்டது; குறும்புக்காரர்களும் இவர் முன் அடங்கிவந்தனர். மாணவனைக் கோபித்துக்கொள்ளாமல் புன்னகையுடன் சில வார்த்தைகளை இவர் சொல்லுவாராம்: அதுவே மாணவனை நல்வழிக்குத் திருத்தப் போதியதாகிவிடுமாம்: பிறர் மனது புண்ணுகவிடமாட்டார்: நல்ல நகைச்சுவையுள்ளவர்! 1903-ம் வருஷம் முடிவில் இவர் சென்னை பிரஸிடென்ஸி காலேஜுக்கு மாற்றப்பட்டார். 1903-ல் கௌரவ பத்திரமும் 1905-ல் ஆயிரம் ரூபா சன்மானமும் சர்க்காரிடமிருந்து கிடைத்தன: எல்லாவற்றிற்கும் மேலாக 1906-ல் மஹாமஹோபாத்யாயர் பட்டம் இவருக்கு வழங்கப்பட்டது: அச்சமயம் தேசிய கவி ஸ்ரீ ஸி. சுப்பிரமணிய பாரதியார் இவரை வாழ்த்தி பின்கண்டபடி பாடினுர்:

செம்பரிதி யொளிபெற்றுன் பைந்நறவு
  சுவை பெற்றுத் திகழ்ந்த தாங்கண
உம்பரெலாம் இறவாமை பெற்றனரென்
  றெவரே கொல் உவத்தல் செய்வார்?
கும்பமுனியெனத் தோன்றும சாமிநாதப்
  புலவன் குறைவில் கீர்த்தி
பம்பலுறப் பெற்றனனேல் இதற்கென்கொல்
  பெருவகை படைக்கின்றீரே? (1)





கனகாபிஷேகம் நடந்த காட்சி

தமது புத்ரனுக்கு பௌத்ரன் பிறந்ததை பார்க்கும் பாக்கியம் பெற்றுர், இது சமபந்தமாகப் புண்ய நதிகளிலிருந்து கொண்டு வரப்பட்ட தீர்த்தத்தினுல் இவர் அபிஷேகம் செய்யப்பட்டார் இவ்விரண்டு படங்களும இதைக்காட்டுகின்றன.

மஹாமஹோபாத்யாய அய்யரவர்களுக்கு அவரது சதாபிஷேக (80-ம் ஆண்டு நிறைவு) விழாவையொட்டி நகரப் பிரமுகர்கள் நடத்திய உபசாரத்தின் போது எடுத்தபடம.

அன்னியர்கள் தமிழ்ச் செவ்வி யறியாதார்
இன்றெம் மையாள்வோரேனும்
பன்னியசீர் மஹாமஹோபாத்தியாய்ப்
பதவி பரிவினீந்து
பொன்னிலவு குடந்தை நகர்ச் சாமிநாதன்
றனக்குப் புகல் செய்வாரேல்
முன்னிவனப் பாண்டியர் நாளிருந்திருப்பின்
இவன்பெருமை மொழியலாமோ? (2)

நிதியறியோம் இவ்வுலகத்தொரு கோடி
யின்பவகை நித்தந்துய்க்கும்
கதியறியோம் என்று மனம் வருந்தற்க
குடந்தை நகர்க்கலைஞர் கோவே
பொதியமலை பிறந்த மொழி வாழ்வறியும்
காலமெலாம் புலவோர் வாயிற்
றுதியறிவாய் அவர் நெஞ்சின் வாழ்த்தறிவாய்
இறப்பின்றித் துலங்குவாயே! (3)

1919-ம் வருஷம் பிரஸிடென்சி காலேஜிலிருந்து விலகிக் கொண்டார்: இதற்குள் இவரது கீர்த்தி பரவாதவிடமே கிடையாது. கவி ரவீந்திரநாத் தாகூர் போன்ற பெருமக்கள் இவரை வந்து பார்த்தனர். 1924-ல் ராஜா ஸர் அண்ணமலைச் செட்டியார் வேண்டுகோள் பிரகாரம் சிதம்பரம் ஸ்ரீ மீனுட்சி தமிழ்க்கலா சாலை அதிபர் பதவியை யேற்று 3 வருஷங்களுக்கப்புறம் மறுபடியும் திரும்பிவிட்டார். பாரத தர்மமண்டலத்தார் "திராவிட வித்யா பூஷணம்" எனும் பட்டத்தையும், காஞ்சி காமகோடி பீடாதிபதிகள் "தாக்ஷிணாத்ய கலாநிதி" எனும் பிருதத்தையும் 1932-ல் சென்னை சர்வகலாசாலையார் "டாக்டர்" என்ற கௌரவத்தையும் இவருக்கு மனமுவந்தளித்தனர். சென்னை, மைசூர், காசி, சிதம்பரம், திருவாங்கூர் ஆகிய இடங்களின் சர்வ கலாசாலைகளுக்கும் இவருக்கும் நெருங்கிய தொடர்பு இருந்தது. 1935-ம் வருஷம் ஏப்ரல் மாதம் இந்நகரில் இவரது 80-வது ஜன்மதினம் சிறப்புடன் கொண்டாடப்பட்டது: சர்வகலாசாலையில் உருவப்படமும் பிரதிஷ்டை செய்யப்பட்டது.

இசையில் இருந்த ஞானம்

இவருக்கு இசையில் இருந்த ஞானம் மட்டிலாதது. 1929-ம் வருஷம் மே மாதம் நகரில் "பண்டைத் தமிழ் இசையும் இசைக் கருவிகளும்" என்ற விஷயமாகப் பேசினர்: அருமையான விஷயம்: ஆச்சர்யகரமான பிரசங்கம்: அனுபவபூர்வமான விளக்கம். தம் கருத்துக்கு ஆதாரம் அதிகம் காட்டினர். இசைப்பெருமை தமிழர் இசை, இசைவகை, இசைக் கருவிகள், பிற்காலச் சங்கீதம் என்ற ஐந்து பகுதிகளாகப் பிரித்துக்கொண்டார். பண்களுக்கும் திறங்களுக்குமுள்ள வேற்றுமையை விளக்கினர். நெடில் எழும் சப்த ஸ்வரங்களுக்கு எழுத்துக்கள் என்பதை புலப்படுத்தினர். பாடுங்கால் இருக்க வேண்டிய இலக்கணங்களை எடுத்துச் சொன்னர். சம்பவிக்கும் குறைகளையும் சுட்டிக்காட்டினர். நடுவில் தாமே பாடவும் பாடினர். சமீபத்தில் சில வருஷங்களாக இவர் "கலைமகள்" பத்திரிகையில் சங்கீத வித்வான்கள், புலவர்களை ஆதரித்த பெருமக்கள், தமிழ் நாட்டில் அறிவு வளர்ச்சி, தமிழை வளர்த்த உத்தமர்கள், ஆகியவை சம்பந்தமாகத் தாம் கேட்டும் நேரிலும் அறிந்த பல விஷயங்களை எழுதி நமக்குப் பேருபகாரம் புரிந்து வந்தார், தமது சுயசரித்திரத்தையும் எழுதி வந்தார். இது பூர்த்தி பெருததே நம் பெருங்குறை. இவர் எழுதிய வியாசங்களைப் படிக்கும்போது நமக்கேற்படும் பெருவகைக்கு எல்லையே கிடையாது.

தமிழன்பர் மகாநாட்டில்

இதுநிற்க 1933-ம் வருஷம் டிசம்பர் மாதம் நம் மஹாமஹோபாத்யாயர் இந் நகரில் நடந்த தமிழன்பர் மகாநாட்டின் வரவேற்பு சபைத்தலைவராயிருந்தார். அச்சமயம் இவர் சில உயர்தர கொள்கைகளை வெளியிட்டார்: குறுகிய நோக்கம் ஒழிவதை விரும்பினர். இதில் இவரது குணதிசயத்தை நாம் காணலாம்.

"பண்டைக்காலப் புலவர்கள் வடமொழிப் புலவர்களோடு மனங் கலந்து பழகி, அவர்களுடைய கருத்துகளையும் சொற்களையும் தங்கள் நூல்களில் ஆண்டிருக்கிறார்கள். வடமொழியின் தொடர்பினல் தமிழ் மக்கள் எவ்வளவோ அரிய கருத்துகளை அறிந்து பயனுற்றிருக்கிறார்கள். ஒரு பாஷை வேறு பாஷையின் தொடர்பினல் விரிவுறும், அதனல் அப்பாஷையின் அழகு ஒரு போதும் குறையாது."

என்ன உன்னதமான மனோநிலை! பிற பாஷையைத் தூஷிக்கக்கூடாது என்பதற்கு எத்தகைய அத்தாக்ஷி! பிறகு இதே பிரசங்கத்தில் பாஷாபிமானம் குறைவுபட்டதற்கு திண்ணைப் பள்ளிக்கூடங்களில் முறைப்படி பாடம் கேட்காததுதான் என்பதையும் இவர் குறிப்பிட்டார். தமிழ் பாஷாபிமானிகளுக்கு அடியிற்கண்ட வாக்கியங்கள் உபயோகமாயிருக்கும்.

"தமிழ் வசன நடையை ஒருவகைப்படுத்த விரும்பும் அன்பர்கள் 'எழுதும் பாஷை வேருக இருக்கிறதே' என்று எண்ணுவதிற் பயனில்லை. பிழையின்றி இயன்றவரையில் யாவருக்கும் விளங்கும் சொற்களையே எழுதும் பழக்கத்தை மேற்கொள்வதே நல்ல முறையாகும்......பேசினுலும் எழுதினுலும கருத்தை அறிவிக்கும் நோக்கத்தை முக்கியமாகக் கொள்ள வேண்டுமேயன்றி கடின நடையைக் கைக்கொள்ளுதல் கூடாது. கொண்டால் 'தமிழே கடினமானது' என்ற எண்ணம் தமிழ் மககளுககு உணடாகி விடும.

"தமிழ்நாட்டார் பேசும் போதும எழுதும்போதும தமிழ்ப் பாஷையையே உபயோகிக்க வேண்டும. ஆங்கிலம் அறிந்தவர்களிற் பெரும்பாலோர் ஆங்கிலத்திலே நினைக்கிறார்கள். அவர்களால் ஆங்கிலச் சொற்கள் கலவாமல் பேச முடியவில்லை. இத்தகைய நிலை ஒரு பெருங்குறையல்லவா?"

இக்குறையை நீக்கவே மஹாமஹோபாத்யாயர் வாழ் நாள் முழுதும் உழைத்தார்: காலத்தின் குறிகள் இவருக்குத் திருப்தி தந்தன: மனோரதம் சித்தி பெற்றது.

"இருந்தமிழே உன்னல் இருந்தேன் இமையோர்
விருந்தமிழ்தம் என்ருலும வேண்டேன்-திருந்த
உதிப்பித்த பன்னூல் ஒளிர அடியேன்
பதிப்பிக்கவே கடைக் கண் பார்"

இச்செய்யுளைத் தமது ஜீவாதாரமாகக் கொண்டு, அந்தியகாலம் வரை தமிழ்த்தாயின் சேவையில் ஈடுபட்ட இத் தனிப் பெருந் தமிழரை தமிழ் நாடு எந்நாளும் மறக்க முடியாது!

ஹிந்திக் கதை

★

ஏமாற்றம்

★

ப்ரேம்சந்த் எழுதியது

ஹதிக்குளத்தில் தாமரை மலர்கள் மலர்ந்து இளங் காற்றில் அசைந்து கொண்டிருந்தன. சந்தியாகாலத்தின் சூரிய கிரணம் குளத்து நீரில் விழுந்து ஜலத்தைச் செம்பொன்னெனச் செய்தது. ராஜகுமாரி பிரபா கரையிலுள்ள பச்சைப்புல்லின் மீது நின்றுகொண்டு பட்சிகளின் இனிமையான குரலைக் கேட்டு ஆனந்தித்துக்கொண்டிருந்தாள். அவளுடைய சொர்ண மயமான சரீரம் இவள்தானே இந்த நந்தவனத்தைச் சோபை செய்பவள் என்று பார்த்தோர் பிரமிக்கும்வண்ணம் இருந்தது.

பிரபா முகிழமரத்தின் மீதிருக்கும் பட்சியைப் பார்த்தவண்ணம் "நான் கூட இந்த மாதிரி பறவையாக இருந்தால்!" என்ருள்.

பக்கத்தில் நின்றிருந்த தோழி உமா கொஞ்சம் சிரித்துக்கொண்டே "எதற்காக?" என்று கேட்டாள்.

பிரபா குளத்தைப் பார்த்த வண்ணம் "பச்சை மரக்கிளையின் மீது உட்கார்ந்துகொண்டு, என் குரலினல் இந்த வனத்தையே எதிரொலிக்கச்செய்ய!" என்ருள்.

"நௌகீடியின் ராணி! நீ எப்பொழுது நினைக்கிருயோ அப்பொழுதெல்லாம் இதைப்போல பல்வேறு பட்சிகளின் பாட்டைக் கேட்கலாமே!" என்று உமா கொஞ்சம் குத்தலாகச் சென்னுள்.

பிரபா மிகவும் சங்கோசம் கொண்டு "எனக்கு ராணியாவதற்கு இஷ்டமில்லை. ஒரு நதியின் ஓரத்தில் அழகான இடமும், ஒரு வீணையும், கேட்க இதைப்போல பட்சிகளின் இனிமையான நாதமும். இருந்தால் போதுமானது; இந்த இன்னிசையிலே தான், என் வாழ்க்கை பூராவும் லயித்திருக்கிறது!" என்ருள்.

பிரபாவுக்கு சங்கீதத்தில் அளவுகடந்த பிரியம் அவள் இதைப்போல் அநேகம் தடவை கனவு கண்டிருக்கிருள். உமா பதில் சொல்ல வாயெடுத்தாள்; அதற்குள்ளாக வெளியிலிருந்து யாரோ ஒருவன் "அன்பு காட்டி அவர் எங்கு சென்ருர்?" என்று பாடியது கேட்டது.

பிரபா ஒரேமனதாய் அந்த கானத்தில் லயித்தவளாய், கொஞ்சம் பரபரப்புடன் "அக்கா, இந்தப்பாட்டில் ஏதோ வசீகரமிருக்கிறது. நான் இது வரை இதைப்போல இனிமையான குரலைக்கேட்டதே இல்லை. அவனை உள்ளே கூப்பிடேன்" என்ருள்.

உமாவும் அந்தப்பிரபாவத்தில் மூழ்கினவளாய் "நானும் இது வரை, இதைப்போல மதுரமான சங்கீதத்தைக் கேட்டதே இல்லை. இரு, கதவைத்திறந்து கூப்பிடுகிறேன்" என்ருள்.

கொஞ்ச நேரத்திற்கெல்லாம் அந்தப் பாடகன் உள்ளே வந்தான். நல்ல அழகும் யௌவனமும் வாய்ந்த வாலிபன். காலில் செருப்புமில்லை; தலையில் முண்டாசுமில்லை. தோளில் ஒரு மான் தோல்; உடலில் காவி வஸ்திரம்; கையில் ஒரு வீணை. அவன் தன் கடைக்கண்ணுல் இருபெண்களையும் பார்த்து தலையைக் கீழே தொங்கவிட்டுக் கொண்டான்.

பிரபா அவனைப் பார்த்து வெட்கத்தால், தலை குனிந்து கொண்டாள்.

'யோகியே, தங்களைக் கண்டது எங்களுடைய பாக்கியமே, எங்களுக்கு ஒரு நல்ல கீர்த்தனத்தைப் பாடி எங்களைக் கடைத்தேறச் செய்ய வேண்டும்" என்று உமா பணிவுடன் சொன்னுள்.

யோகி தலையைக்கீழே சாய்த்த வண்ணமே "நாங்கள் கடவுளை பஜனை செய்பவர்கள். இந்த மாதிரி சமூகங்களில் நான் என்ன பாடுவது? நீங்கள் இஷ்டப்பட்டால் பாடுகிறேன்." என்று சொல்லிய வண்ணமே, இனிமையான குரலுடன் வீணையின் இசையைச்சேர்த்துப் பாடினுன்.

"அன்பு காட்டி அவர் எங்கே சென்ருர். அந்த அன்பு எங்கேயடி, இந்தப் பிரிவு ஏனடி, அம் மதுவன வகை எங்கே, அன்பு காட்டி அவர் எங்கே சென்ருர்?"

அந்த இனிமையான கீதம் பிரபாவை மதிமயங்கச் செய்தது. அந்த பக்தி ரஸமான கீர்த்தனம் அபூர்வமாக இருந்தது. வீணையின் நாதமும் ககன மண்டலத்தில் சென்று பிரதி பலித்தது. பிரபா அதில் மூழ்கி லாகிரி உண்டவளைப் போல் தவித்தாள். அவள் அதே நினைவில் இருந்தாள், அவளுடைய மனக்கண் கனவு காணச் சென்றது. குளத்திலிருக்கும் புஷ்பங்களும் மற்றுமுள்ளதும், சுழன்று சுழன்று அவளுக்கு அந்தப் பாட்டையே, திரும்பத் திரும்ப பாடுவதுபோல் தோன்றிற்று,

அந்தப் பாட்டைக் கேட்டது முதல் பிரபா மதி மயங்கி அதே புத்தியில் ஈடுபட்டவளாய் மரங்களின் மீதிருக்கும் பட்சிகளிடமும், மரங்களிடமும், அந்தப் பாட்டைப் பாடிக் காண்பித்து, பித்துப் பிடித்தவள்போல அழுது அழுது அலையலானுள், வீணையின் தந்தி நரம்புகளில் ஒலித்த ஒலி அவள் காதருகில் சப்திப்பதைப்போல் தோன்றிக் கொண்டிருந்தது.

2

பிரபா பகௌலி ஜமீந்தாரின் ஏக புத்திரி. ஜமீந்தார் தேவி சந்திரர் பழைய காலத்து மனிதர். நாகரீகப்பற்றற்றவர். அவர் கிருஷ்ண பக்தியில் ஈடுபட்டவர். ஜமீன்தாருக்கு சங்கீதத்தில் அதிகப் பிரியமுண்டு. அவரேகூட சில பாட்டுகள் இயற்றுவார். அதனுல் அவர் தர்பாருக்கு வெகு தூரத்திலிருந்தெல்லாம் வித்வான்களும் மேதாவிகளும் வந்து, பாடி வெகுமதிபெறக் கும்பல் கும்பலாக், வருவது வழக்கம். அவர் கிழவராகி விட்டபோதிலும், அந்தக் கலையின் ரஸம் பூராவையும் அறிந்து அனுபவித்தார். பிரபா சிறியவளாக இருந்ததிலிருந்து, அவருடன் கூடவே இருந்து வந்தாள். பூர்வ ஜன்மத்தின் ஸமஸ்காரத்தின் பயனுகவும், காலை முதல் மாலை வரை தகப்பனுருடன்கூட இருந்து, வித்வத்தின் சாராம்சத்தை அலசிப்பார்த்துக்கொண்டிருந்ததாலும், பிரபாவுக்கும் அந்த ஞானம் அதிகரித்தது.

அந்தச் சமயம் அவளுக்குக் கன்னிப் பருவம் வந்தது. ஜமீந்தார் நௌகட் தேசத்து அரசகுமாரன் ஹரிச்சந்திரனுக்குப் பிரபாவைக் கலியாணம் செய்து வைக்க உத்தேசித்திருந்தார். இரண்டு இடங்களிலும் கலியாணத்துக்கு வேண்டிய ஏற்பாடுகளும் நடந்துகொண்டிருந்தன. ராஜகுமாரன் வாலிபத்தின் பருவமடைந்தவனும், அஜ்மீர் தேசத்தில் 'மேயோ' காலேஜ் மாணுக்கனுகவுமிருந்தான். அவனுக்குக் கலியாணத்திற்கு முன் குமாரி பிரபாவை ஒரு தடவை சந்தித்துப் பேசவேண்டுமென்ற ஆசை இருந்தது. அதை ஜமீந்தார் குற்றமாகக்கருதினர்.

ராஜ குமாரனின் நவநாகரீகத்தைப் பற்றிக் கேள்வியுற்ற பிரபாவுக்கு அவன்மேல் அவ்வளவு பிடித்தமில்லாமலிருந்தது. அன்று பாடிக்கொண்டு வந்த யோகியின் மேல் அவள் அடங்காத பிரேமை கொண்டாள். உமா அவளுடைய தோழி இருவருக்குமிடையே யாதொரு திரையுமில்லை. ஆனுலும், பிரபா அவளிடமும் இந்த சமாசாரத்தைத் தெரிவிக்காமல் மர்மமாக வைத்திருந்தாள். உமா பிரபாவுடன் நெருங்கிப் பழகிக் கொண்டிருந்தாள். ஆனுல் அவளே தனக்குள் நெருப்பின் பகட்டை நினைக்கக்கூடாது, கொஞ்ச நாளைக்குள் அதுவே அதனுள்ளின் உள்ளேயே குமுறி சாந்தமாகிவிடும்.'எப்படி மாலைச் சூரியனின் கிரணம் மறைகின்றதோ அதே மாதிரியாக என்று நினைத்துக்கொண்டாள். ஆனுல் அந்த யோகியின் முக பிம்பமும் அவன் குரலின் இன்னிசையும் அவளுடைய ஹிருதயத்தைவிட்டு அகலவில்லை. அந்த மதுர மயமான கானம் அவளுடைய காதருகில் சப்தித்துக்கொண்டிருப்பது போல் அவளுக்குத் தோன்றியது. அவளுடைய கற்பனையில் யோகியின் முக பிம்பமும் அவனுடைய இனிமையான கானமுமே வந்து நின்றது. அவளுக்கு இம்மாதிரியான சம்பவங்கள் நடக்கும்பொழுதெல்லாம் வெளியிலிருந்து பாட்டின் குரலோசை கேட்பதுபோல் தோன்றும். அந்த சமயம் திடீரென்று எழுந்து வாசல்வரை போய்ப் பார்ப்பாள். அங்கு யாரையும் காணுமல் தவிப்பாள்.

திரும்பவும் தனக்குள்ளேயே 'என்ன என்னுடைய தசை! எனக்கு இது என்னவாகிவிட்டது? நானே இந்து ஸ்திரீ, தாயார் தகப்பனுர் யாரை நிச்சயிக்கிருர்களோ அவருக்கு நான் அடிமை, அதுதான் தர்மம்! என் மனப்பூர்வமாக அவருக்குச் சேவை செய்வதுதான் என் கடமை, நான் அன்னிய புருஷனை மனதினுல் நினைப்பது கூடப் பாபமாகும். ஆஹா! இந்த களங்கமான மனதை வைத்துக்கொண்டு நான் எப்படி அவர் முன் 'என் முகத்தைக் காண்பிப்பேன்? எப்படி இந்தக் காதால், அவருடைய மதுரமான பேச்சைக் கேட்பேன்? அவை கடுமையாகவும் பரிகாசத்தைப் போலவுமல்லவோ தென்படும்! அங்கு இந்தப் பாபியின் கண்ணில் படும் விசித்திரங்களை எப்படிப் பார்ப்பேன்? அச்சமயம் என் ஹ்ருதயத்தில் வஜ்ராயுதத்தால் துளைப்பதுபோலல்லவோ இருக்கும்! இளம் காதல் விளையாட்டுகள் விளையாடும் சமயம் இரும்பையும்விட அதிக கடினமுள்ளதாயும் மிகவும் துன்ப

ஏமாற்றம்! யார் ஏமார்ந்தது? பிரபாவா, ஹரிசந்திரனு? ஹரிசந்திரனுக்கும் பிரபாவுக்கும் மணம் நிச்சயமாகியது: ஹரிசந்திரன் பெண்ணைப் பார்ப்பதற்குத் தடை விதிக்கப்பட்டது. பெண்ணை ஹரிசந்திரன் பார்க்காமல் இல்லை. தனக்கு மனையாளாக வர விருப்பவளை, அவன் கண்டது. எவ்விதம்? படித்தால் நீங்களும் இன்புறுவீர்கள்! நிச்சயம்!! இக் கதையை வேது இனிமையாகத் தமிழில் மொழிபெயர்த்தவர் ஸ்ரீ வி. எஸ். வெங்கடேசன்.

ஹிந்திக்கதை

சாயா

ஸ்ரீ தாராதேவி

எழுதியது

நரேந்திரன் இப்பொழுது சாயாவின் வீட்டிற்குச் செல்வதில்லை. ஏனென்றால் சாயாவின் அத்தை சௌக்கியமடைந்து விட்டாள். ஆயினும் இலாவின் வருத்தம் குறைந்தபாடில்லை. அவள் தனக்குத்தான் கோபத்தினால் எரியலானாள். ரோஜா மலர் போன்ற அவள் முகம் கறுமையடைந்தது. சரியாகச் சாப்பிடுவதில்லை. வெளியே உலாவ வருவதில்லை. தனிமையாகக் கட்டிலில் படுத்து வருத்தத்துடன் புரண்டு கொண்டிருப்பாள். எஜமானியம்மாள் கவலையடைந்தாள். எப்பொழுதும் மகளின் முகத்தைப் பார்க்கலானாள்.

அன்று பூஜை செய்துவிட்டு அவள் வெளியே வந்த போது சந்திரமோஹன் வந்து "நரேந்திரன் தன் வீட்டுக்குச் செல்ல விரும்புகிறான்!" என்றான்.

"ஏன்? விடுமுறை நாட்களை இங்கேயே கழிக்கப்போவதில்லையா?...இலாவின் நிலைமை இந்த மாதிரி இருக்கிறது, நீ அவனிடம் சொல்லவில்லையா?"

"இல்லை. ஏனென்றால் இலா ஒன்றும் சொல்ல வேண்டாமென்று என்னைத் தடுத்திருக்கிறாள்!"

"உம்! சரி! வா என்னுடன்!"

சப்தத்தைக் கேட்டு நரேந்திரன் தலை நிமிர்ந்தான். எதிரே எஜமானியம்மாள் வந்து கொண்டிருந்தாள். புஸ்தகத்தை வைத்து விட்டு எழுந்தான்.

"நரேந்திரா! உன்னை நான் போகவிடமாட்டேன்! இலாவின் நிலைமை இந்த மாதிரி இருக்கும் போது...!"

நரேந்திரன் திடுக்கிட்டு "அவளுக்கு என்ன?" என்று கேட்டுவிட்டு அவனும் அவளுடன் உள்ளே சென்றான்.

பத்துப் பதினைந்து தினங்களில் இலா எவ்வளவு மாறிவிட்டாள். நரேந்திரன் அவளைக்கண்டு திடுக்கிட்டுப்போனான். மனதிற்குள் லஜ்ஜையடைந்து போனான். இலா ரோஷக்காரி! நான் என்ன முட்டாள்தனமான காரியத்தைச் செய்து விட்டேன். இவ்வளவு நாட்களாக இலா எங்கே என்று கூடக் கேட்கவில்லையே? என்னுடைய முரட்டுத்தனமான நடத்தையினால்தான் இலாவுக்கு இந்த மாதிரியான நிலைமை ஏற்பட்டது என்று தனக்குள் எண்ணமிட்டவனாய் "அம்மா! சந்திரமோஹனை இங்கே அனுப்புங்கள்!" என்றான்.

எஜமானியம்மாள் சென்ற பிறகு நரேந்திரன் அன்புடன் இலாவின் நெற்றியை வருடிக்கொண்டே "இந்த ஜுரம் எப்பொழுது வந்தது இலா? எனக்கு தெரிவிக்க வேண்டியது அவசியமில்லை என்று எண்ணினாயா? இந்த சந்திர மோஹன்......"

வார்த்தை முடியும் முன்பே "அண்ணாவை நான்தான் சொல்ல வேண்டாமென்று தடை செய்தேன்." என்றாள் இலா.

"நான் அன்னியன் அதனால் தானே?"

"இல்லை. உங்களுக்கு அவகாசம் இருக்காது. எதற்காக!"

"இலா! இதென்ன வார்த்தை! ஒரு டாக்டர் பல நோயாளிகளைப் பார்க்க முடியாதா?"

இலா ஒன்றும் பேசவில்லை!

நரேந்திரன் அவள் நாடியைப் பார்த்துவிட்டு "வைத்திய விஷயத்தை அறிவாயல்லவா? இலா! நான் எதற்காக வைத்தியம் கற்றுக்கொண்டேன் என்பதும் உனக்குத் தெரியாததல்ல. என் மீது அன்பு கொண்ட என் மாற்றாந் தாய் ஏழைகளுக்குச் சேவை செய்வதற்காகவே என்னை இவ்வளவு தூரம் அனுப்பி வைத்திருக்கிறாள். நீ...நீ என்னைத் தவறாக நினைத்துக்கொண்டிருக்கிறாய்! அப்பொழுதும்......"

இலா அவனுடைய கையைத் தன் கையில் எடுத்துக் கொண்டே "போதும்! போதும்! எல்லாம் தெரிந்து கொண்டேன். நீங்கள் ஒன்றும் சொல்ல வேண்டிய அவசியமில்லை" என்றாள்.

"அப்படியானால் எழுந்திருந்து வா! அம்மா ரொம்ப கவலைப்படுகிறாள்!"

இலா நரேந்திரனின் கையைப் பிடித்துக்கொண்டு வருவதைக் கண்ட எஜமானியம்மாளும் சந்திரமோஹனும் சிரிக்கலானார்கள். இலா தலை கவிழ்ந்து கொண்டாள்.

* * * *

ஒரு வருஷம் கழிந்தது. இப்பொழுது கோபியம்மாள் இல்லை. அவள் இறந்து மூன்று மாதங்கள் ஆகிவிட்டன. சாயாவை அப்பொழுதிலிருந்து எஜமானியம்மாள் தன்னுடனேயே வைத்துக்கொண்டாள். அவளுக்கு வேலை ஒன்றும் கிடையாது. இலாவுடன் கூடச் சுற்றுவதுதான் வேலை. இலா பியானோ வாசிப்பாள், சாயா மௌனமாக நின்றுகொண்டு அவள் கை விரல்களையே பார்த்துக்கொண்டிருப்பாள். தனக்கு, இந்த மாதிரி எப்பொழுது வாசிக்க வரும் என்று எண்ணுவாள். ஒரு நாள் அவள் இலாவிடம் "ஜீஜி, ஏன் இந்த தடவை அண்ணாவுடன்கூட டாக்டர் வரவில்லை?" என்று கேட்டாள்.

"நல்லது! சென்ற வருஷத்து விஷயங்கள் உனக்கு இன்னும் மறக்கவில்லையா?"

"என்ன ஜீஜி! என் அத்தையின் உயிரைக் காத்த அவரை நான் மறக்க முடியுமா?"

"ஆனால் இந்த வருஷம் பூராவும் நீ என்முன் அவர் பேச்சையே எடுக்கவில்லையே?"

"அவரைப்பற்றிப் பேச என்ன இருக்கிறது? இந்த தடவை அவர் வரவில்லை. இதனால் உனக்கு வருத்தமாக இல்லையா, ஜீஜி?"

"உனக்கு வருத்தமாக இருக்கிறதா?"

சாயா வெட்கத்துடன் "போ! அவர் உன்னைக் கலியாணம் செய்துகொள்ளப் போகிறார். உனக்குத்தான் தெரியும். சொல் ஏன் அவர் வரவில்லை?"

"அவருடைய அம்மாவின் உத்தரவு. இந்த வருஷம் விடுமுறை விட்டதும் நேரே வீட்டுக்கு வந்து சேரவேண்டும் என்று. சாயா! அவர் தன்னுடைய மாற்றாந்தாயிடம் எவ்வளவு அன்பும் மதிப்பும் வைத்திருக்கிறார் என்பது உனக்குத் தெரியாது. தாயிடம் உள்ள அவ்வளவு அன்பு......! அவளும் இவரிடம் அளவு கடந்த பிரியம் கொண்டிருக்கிறாள். இவரிடம் உள்ள அவ்வளவு அன்பு தன் மகன் ராமேந்திரனிடம் கூடக் கிடையாது!" என்றாள்.

இதற்குள் "இலா! இலா!" என்று சந்திரமோஹன் கூப்பிட்டான்.

"என்ன அண்ணா? இதோ வந்துவிட்டேன். சாயா! வா! அண்ணா கூப்பிடுகிறான். அவனுக்கு என்ன வேலையோ?"

"தாயம் விளையாடவோ அல்லது நாய் உன் பூனையை விரட்டுகிறதோ இதைக் கோள் சொல்லத்தான் கூப்பிட்டிருப்பார்!"

இலா சிரிக்கலானாள். சந்திரமோஹன் அவளைப்பார்த்து "மாமி சொல்லிவிட்டாள். இலா ஒப்புக்கொண்டால் நான் லக்னௌ சென்று நரேந்திரனை அழைத்து வரலாம் என்று!" என்றான்.

இலா என்னபதில் சொல்லுவாள்!

மூன்றாம் நாள் நரேந்திரனுடன் லக்னௌவிலிருந்து திரும்பிவந்தான் சந்திரமோஹன்.

* * * *

"இல்லை! இல்லை! அந்தப் பையனுக்கு சாயாவைக் கலியாணம் செய்து கொடுக்க முடியாது!"

"ஏன் அப்பா முடியாது? பையனிடம் என்ன குறைகள் இருக்கின்றன? பார்ப்பதற்கு நன்றாக இருக்கிறான். இருபது ரூபாய் சம்பளமும் வாங்குகிறான்!"

நரேந்திரனால் யாதொரு பதிலும் கூற முடியவில்லை. வாஸ்தவம். ஏழை வீட்டுப் பெண்ணுக்கு இதைவிட வேறு என்ன வேண்டும்? ஆனால் நரேந்திரன் உள்ளம் அதற்கு உடன்படவில்லை. ஏன்? இதற்குக் காரணம் உண்டு. ஒரு முறை இலாவின் மேல் வெறுப்புக் கொண்டு இந்தக் கர்வம் பிடித்தவளை மணப்பதைவிட அடக்கமுள்ள சாயாவை மணந்து நம் வாழ்க்கையைச் சுகமடையச் செய்து கொள்ளலாம் என்று எண்ணினான். இதன் பிறகு...இலா... ஆமாம் பிறகு சாயாவைப் பற்றி அவன் ஒன்றும் சிந்திக்கவில்லை. அவள் பெயரைக் கூட எடுக்கவில்லை. ஏன்? இலாவுக்குப் பிடிக்காது என்பதற்காகத்தான். சாப்பிடும் சமயம் சாயா எதிரே வந்தால்கூட அவன் தலை நிமிர்ந்து பார்ப்பதில்லை. ஆனால் இன்று...? அவன் ஹிருதயம் அவளை வெறுக்கலாயிற்று. அவனிடம் "நரேந்திரா! அவளை மணந்து வாழ்க்கையைச் சுகமடையச் செய்ய வேண்டு

"சாயாவிடம் சகல குணங்களும் பொருந்தியிருக்கின்றன. அழகும் ஒன்றும் குறைவில்லை. ஏன் நீயே அவளை விவாகம் செய்துகொள்ளகூடாது?" என்றான் நரேந்திரனிடம் சந்திர மோஹன். எஜமானியம்மாளும் சந்திரமோஹனும் மின்னலால் தாக்கப்பட்டவர்போல் ஆனார்கள்: ஆச்சர்யமும் திகைப்பும் அடைந்தவர்களாய் நரேந்திரன் முகத்தைப் பார்க்கலானார்கள். இலா கர்வத்துடன் நரேந்திரனை நோக்கி, "டாக்டர், என் அண்ணா என்ன ஒண்ணுமில்லாதவனா? இருபது ரூபாய் சம்பளக்காரனின் தாய் தன் மகனுக்கு மணந்து கொள்ள சம்மதிக்காத பெண்ணையா என் அண்ணாவை மணந்து கொள்ளச் சொல்கிறீர்கள்? இதென்ன வார்த்தை நீங்கள் சொல்கிறீர்கள்?" என்றாள்.
—இந்த சம்பாஷணையின் கருத்தை இவ்வாரம் வெளிவரும் இரண்டாம் பகுதியில் படிப்பீர்கள்.

* • • • •

★ "ஜயம்" மொழி பெயர்த்தது ★

மென்று ஒரு சமயம் எண்ணினாய்! இன்று அவளுடைய கஷ்டமான நிலைமையை ஏன் பார்த்துக் கொண்டிருக்கிறாய்?" என்று கேட்டது. அதனால் அவன் பயந்து "இல்லை! இல்லை! இந்தக் கல்யாணம் நடக்க முடியாது!" என்றான்.

சந்திரமோஹன் தாழ்ந்த குரலில் "நரேந்திரா! இந்தக் கல்யாணம் கார்த்திகை விஷயத்தில் தலையிடும் வழக்கம் என்னிடம் கிடையாது. ஆனால் கோபியம்மாளிடம் ஒரு வார்த்தை சொல்லியிருந்தேன். ஆகையால் தான் இவ்வளவு சிரமப்பட்டு இந்த வரனைத் தேடிக்கொண்டு வந்தேன். அவனுடைய தாய் எங்கே ஒப்புக் கொண்டாள்? இந்த அநாதைப் பெண்ணையா என் பிள்ளைக்குக் கல்யாணம் செய்து கொள்ளச் சொல்லுகிறீர்கள்? முடியாது என்றாள். அவளைச் சம்மதிக்கச் செய்து ஐநூறு ரூபாய் வரதக்ஷிணை கொடுப்பதாகவும் வாக்களித்து வந்திருக்கிறேன். பிறகுதான் அவள் ஒப்புக்கொண்டாள்!" என்றான்.

நரேந்திரன் சாந்தமான குரலில் "சந்திரமோஹன்! சற்று ஆழ்ந்து யோசித்துப் பார்! இந்த சில நாட்களுக்குள் இலா சாயாவை எந்த முறையில் பழக்கி இருக்கிறாள் தெரியுமா? இனியும் அவளை ஒரு ஏழை வீட்டில் கொடுப்பதென்பது முடியாத காரியம். அது அவளுக்குப் பெரிய தீங்கு புரிவதாகும். அதனால் அவள் மனது உடைந்துவிடும். சாயாவிடம் சகல குணங்களும் பொருந்தி இருக்கின்றன, அழகும் ஒன்றும் குறைவில்லை. ஏன் நீயே அவளை விவாகம் செய்துகொள்ளக் கூடாது?" என்றான்.

எஜமானியம்மாள் சந்திரமோஹன் இருவரும் மின்னலால் தாக்கப்பட்டவர்கள் போல் ஆனார்கள். ஆச்சரியமும் திகைப்பும் அடைந்தவர்களாய் நரேந்திரன் முகத்தைப் பார்க்கலானார்கள். இலா கர்வத்துடன் நரேந்திரனை நோக்கி "டாக்டர்! என் அண்ணா என்ன ஒண்ணுமில்லாதவனா? இருபது ரூபாய் சம்பளக்காரனின் தாய் தன் மகனுக்கு மணந்துகொள்ளச் சம்மதிக்காத பெண்ணையா என் அண்ணாவை மணந்து கொள்ளச் சொல்லுகிறீர்கள்? இதென்ன வார்த்தை நீங்கள் சொல்லுகிறீர்கள்? அத்தை உயிருடன் இல்லை. அதற்காக அம்மா அவளுடைய மருமானுக்கு அனாதைப் பெண்ணைக் கல்யாணம் செய்து வைத்துவிடுவாளா?" என்றாள்.

"இல்லை! இல்லை! இது கூட நடக்கக்கூடிய விஷயமா?" என்று சொல்லிக் கொண்டே எஜமானியம்மாளும் எழுந்து சென்றாள்.

நரேந்திரன் படபடத்த குரலில் "அம்மா! சாயாவுக்கு நான் பத்தாயிரம் ரூபாய் வரதக்ஷிணை கொடுத்தால் அப்பொழுதும் நடக்காதா?" என்றான்.

இதற்குப் பதில் இலா சொன்னாள். "பத்தாயிரமல்ல, ஒரு லக்ஷம் ரூபாய் நீங்கள் கொடுத்தாலும் சாயாவை என் அண்ணா மணந்து கொள்ள முடியாது." இவ்வளவு நாட்களுக்குப் பிறகு மீண்டும் இலாவின் கர்வம் அடியுண்ட சர்ப்பம் போல் தலை தூக்கியது. அவள் முகம் சிவந்தது. உதடுகள் துடித்தன. "எல்லாம் பொய்! சாயாவை இவர் காதலிக்காவிட்டால் இவர் வாயினின்றும் இந்த வார்த்தைகள் வெளிவருமா?" என்று கூறித் தன் கண்ணீரை அடக்க முயற்சித்துக் கொண்டே அவ்விடம் விட்டகன்றாள்.

நரேந்திரன் பேசாமல் உட்கார்ந்திருந்தான். எஜமானியம்மாளும் பெண்ணுடன் சென்றாள், இன்று சாயாவின் மேல் அவளுக்கு அளவிலாக் கோபம் வந்தது. அவள் முற்றத்தில் வந்து நின்று கொண்டு "இந்த நாசமாய்ப் போகிற ராம்தீன் அல்லவா இவளை என் வீட்டிற்குக் கொண்டு வந்து சேர்த்தான் அவன் புத்தி புல் மேயப் போய் விட்டது. அதனால் தான் தரித்திரன் வீட்டுப் பெண் ராணியாக வேண்டுமென்கிறாள். லாலாஜி பத்தாயிரம் ரூபாய் கொடுக்கப் போகிறாராம்! யார் வீட்டுப் பணம்! அம்மா கேட்டால் தெரியும்! பிறகு வீட்டில் நுழைவது! ஆமாம்!... நான் ஒன்றும்......" என்று இன்னும் ஏதேதோ சொன்னாள்.

இலா எல்லாவற்றையும் கேட்டுக்கொண்டிருந்தாள். வெட்கத்தினாலும் துக்கத்தினாலும் அவள் உள்ளம் எரிந்து கொண்டிருந்தது. ஜன்னலருகே நின்று கொண்டு அவள் உதட்டைக் கடித்துக்கொண்டிருந்தாள். சாயா எல்லாவற்றையும் பார்த்தாள். மெள்ள நரேந்திரன் முன் வந்து நின்றாள். சந்திரமோஹன் திடுக்கிட்டான், நிமிர்ந்து உட்கார்ந்தான். நரேந்திரன் வெறித்த பார்வையுடன் சாயாவை நோக்கினான்.

சாயா வருத்தம் நிறைந்த குரலில் "டாக்டர்! நான் உங்களுக்கு என்ன தீங்கு செய்தேன்? ஏன் நீங்கள் என்னை இந்த மாதிரி அவமானம் செய்கிறீர்கள்? சந்திரமோஹன் அண்ணாவிடம் அத்தை ஒப்படைத்திருக்கும் பொறுப்பை நன்மையாகவோ...... தீமையாகவோ ...அவரே...செய்து விடட்டும். இந்த விஷயத்தில் நீங்கள் தலையிட வேண்டாம். இது தான் நான் உங்களிடம் பிரார்த்திப்பது. எனக்காக நீங்கள் பத்தாயிரம் செலவு செய்ய வேண்டிய அவசியமில்லை." என்றாள்.

இதைச் சொல்லி விட்டு சாயா நிழலைப்போல் அவ்விடம் விட்டகன்றாள். இந்தப் பெண்ணிடம் கோபித்துக்கொள்வதா இல்லையா என்பது ஒன்றும் நரேந்திரனுக்கு விளங்கவில்லை.

இதற்குள் சந்திரமோஹன் "பார்த்தாயா நரேந்திரா? அடேயப்பா! மானம் வெட்கம் ஒன்றும் இல்லையே! இவள் பழைய சாயா தானா? சிவசிவா! இவளையா என்னை மணந்து கொள்ளச் சொல்லுகிறாய்? சரி போதும்! வா கொஞ்ச நேரம் வெளியே சென்று உலாவி விட்டு வரலாம் என் மனம் சரியாக இல்லை" என்றான்.

"ஆமாம்! என் மனமும் சரியாக இல்லை. சந்திரமோஹன் என்னைத் தனிமையாக விட்டுவிடு! நீ இதை விட்டுச் செல்!" என்றான் நரேந்திரன்.

சந்திரமோஹன் தோள்களைச் சிணுங்கிக் கொண்டே அங்கிருந்து அகன்றான். சாயா தன் அறைக்குச் சென்று தேம்பித் தேம்பி அழலானாள். "அடாடா! யார் எல்லோரிலும் எனக்கு வேண்டியவரோ அவரை என்னென்னவெல்லாம் சொல்லி விட்டேன்! என்னிடம் அன்பு கொண்டவரை நான் எவ்வாறு அவமானம் செய்து விட்டேன்! கடவுளே! நீ எல்லாவற்றையும் அறிவாய்! நீ அறியாதது ஒன்றுமில்லை!" என்று கதறினாள்.

இந்தச் சம்பவம் நடந்து எட்டு தினங்கள் கழிந்தன. சந்திரமோஹன் தொல்லைப்பட்டுக் கொண்டிருந்தான். சில சமயம் இலாவையும் சில சமயம் நரேந்திரன், எஜமானி இருவரையும் சந்தோஷப்படுத்த முயற்சித்துக் கொண்டிருந்தான். ஆனால் மூவரில் ஒருவராவது சந்தோஷமடைவதாகக் காணவில்லை. இலா முன் போலவே அவர்கள் இருவருடனும் வந்து உட்காருகிறாள்: கூடவே 'டீ' குடிக்கிறாள், சாப்பிடுகிறாள். ஆனால் அவள் முகத்தைப் பார்த்தால் அவள் ஏதோ விஷயத்திற்காக தன் மனத்துடன் போராடிக் கொண்டிருக்கிறாள் என்று தோன்றியது. 'டீ' கலக்கிறாள். ஆனால் சர்க்கரை போட மறந்து விடுகிறாள். நரேந்திரன் பேசாமல் குடித்து விடுகிறான். ஆனால் சந்திரமோஹன் "என்னைச் சர்க்கரை போட்டுக் கொள்ள வேண்டாமென்று யாரும் தடுக்கவில்லை. இலா...நீ தினம்" என்று ஏதாவது சொல்லுவான்.

"ஓஹோ! நான் மறந்து விட்டேன்!...டாக்டர் உங்கள் கோப்பையில் சர்க்கரை போட்டிருக்கிறேன் அல்லவா?" என்பாள்.

"ஆமாம்!" என்பான் நரேந்திரன்.

அன்று மழை பெய்து கொண்டிருந்தது. சந்திரமோஹன் கிண்டலாக "இந்திர தேவன் புத்தி புல் மேயச் சென்று விட்டது!" என்றான்.

அதே சமயம் எஜமானியம்மாள் "சந்திரா!" என்று கூப்பிட்டாள். அவன் முகம் தொங்கியது. இலாவையும் நரேந்திரனையும் சந்தோஷப் படுத்த அவன் எஜமானியைப் போல நடித்துப் பேசினான்: ஆனால் எஜமானியம்மாள் அவன் பேசியதைக் கவனிக்கவில்லை. அவள் அவனைத் தன் அறைக்கு அழைத்துச் சென்று "சாயாவின் விவாகத்தை அவர்கள் வீட்டில் நிச்சயம் செய்ய வேண்டாம். இலா வேண்டாமென்று தடுத்திருக்கிறாள்!" என்றாள்.

"ஏன்?"

"உன் தங்கை விஷயம் உனக்குத் தெரியாதா? அவள் மனதிலுள்ளதை எப்பொழுதாவது அவள் முதலில் சொல்லுவதுண்டா?" என்றாள்.

இலா நரேந்திரன் தனிமையாக இருப்பது கண்டு அவனிடம் "டாக்டர், உங்களிடம் ஒரு விஷயம் சொல்ல விரும்புகிறேன்!" என்றாள்.

"சொல்லேன்! இலா!"

"நான்... நான்... நினைக்கிறேன். நீங்கள் என்னை மணந்து ஒரு நாளும் சுகமடைய முடியாது!"

"ஏன்?"

"ஏனென்றால் நீங்கள் என்னைக் காதலிக்கவில்லை. உங்கள் ஹிருதயத்தில் சாயா அதிகாரம் செலுத்துகிறாள். மன்னிக்க வேண்டும். நான் உங்களை நம்பவும் முடியாது. நீங்கள் சாயாவை மணந்துகொள்ளுங்கள். நான் சந்தோஷத்துடன் தங்கள் பாதையிலிருந்து விலகி விடுகிறேன்."

நரேந்திரனின் முகம் சிவந்தது. இலாவிடமிருந்து இம்மாதிரி வார்த்தைகள் வருமென்று அவன் எதிர்பார்க்கவே இல்லை. அவனுடைய மனத்தைத் தாக்கியது இந்தச் செய்தி. அவன் "ஆனால் சாயா இதை ஒப்புக்கொள்ள மாட்டாளே!" என்றான்.

"நான்...நான் அவளை இப்பொழுதே ஒப்புக் கொள்ளச் செய்கிறேன்!"

இலா சென்றாள். நரேந்திரன் தனக்குள் "இலா! நீ கர்வத்தினால் உன் உள்ளத்திலிருந்து என்னை அகற்றுகிறாய். ஆனால் பிறகு சாயாவுடன் என்னைப் பார்க்கும் போது உன் நிலைமை என்ன ஆகுமென்பதைக் கடவுளே அறிவார்!" என்றான்,

சந்திரமோஹன் வந்து நரேந்திரனிடம் "வா! நரேந்திரா! மழை நின்று விட்டது. இன்றைக்காவது ஏதாவது வேட்டை கைக்குச் சிக்குகிறதா பார்க்கலாம்." என்றான்.

(தொடரும்.)

காந்தி ஜோஸியர்

ஒரு வருஷப் பலன் மாதவாரி ரூ. 3.
ஆருடம் 5 கேள்விகளுக்குப் பதில் ரூ. 1.
வி. பி. செலவு அணா 5.
ஜனனகால விவரம் or எழுதும நேரம். சுமார் வயது தேவை.
ஹனுமான் ஆச்ரமம், திருத்தணி S.I.

BLACK LOCK& MACARTHUR LTD., GLASGOW

வெள்ளை வர்ணத்தில் 541 வெள்ளைதான் உயர்ந்தது. வெண்மை மாறாது. வெடிக்கவும் செய்யாது. அதிக ஸன்னமாதலால் ஆண்டு வரும். 541 ஈய வெள்ளையை வாங்கி உபயோகித்தால் கூலி மிச்சமாகும். அடிக்கடி வர்ணம் கொடுக்க வேண்டிய அவசியமுமிராது. 541 கெக்கின்பேரில் மான் மார்க்கும் இரண்டு ஈய வீல்களும் இருக்கிற கெக்காகப் பார்த்து வாங்குகள். போலிகளை வாங்கி ஏமாறாதீர்கள். செந்தூரத்தில் "மான் மார்க்" செந்தூரம்தான் உயர்ந்தது. இவைகள் எல்லா வர்ண வியாபாரிகளிடத்திலும் கிடைக்கும்.

Sole Agents:- M.R.V. AIYER & CO., 49, பந்தர் தெரு, மதராஸ்.

“எங்கள் ஐயா”

★

சிறு கதை — ரா. ஆறுமுகம்

ஒரு கிராமப் பள்ளிக்கூடம்: அங்கிருந்த உபாத்தியாயரை மாணவர்கள் “ஐயா” என்று அன்புடன் அழைப்பது வழக்கம். ஐயாவுக்குத் தமது சிஷ்யர்களிடம் இருந்த ப்ரீதி அதிகம்: அவர்களது நன்மையை யுத்தேசித்தே கடுமையாக நடந்துகொள்வார் அவர். “அடிக்கிற கை அணைக்கும்” என்ற பழமொழிக்கேற்ப அவர் நடந்து வந்ததால் அவரிடம் படித்தவர்களுக்கு அவரைக் கண்டதும் அலாதி மரியாதையும் விஸ்வாசமும் உண்டு. இந்தச் சிறுகதையில் பழைய காலத்தில் பள்ளிக்கூட உபாத்தியாயர்கள் நடந்துகொண்ட முறையையும், காலப்போக்கில் மாறும் நிலைமையையும் நீங்கள் படிப்பீர்கள்.

சுமார் ஆயிரம் வீடுகள் கொண்ட அந்தக் கிராமத்தின் மேற்குக் கோடியிலிருந்தது எங்கள் பள்ளிக்கூடம். தூரத்திலிருந்து பார்ப்பவர்களுக்கு கூரையால் மூடப்பட்ட அக்கட்டிடம் ஒரு குடிசைதான் தோற்றும். ஆனல் அதன் பின் பக்கமோ இரண்டு பர்லாங் சுற்றளவிற்கு விசாலமான நந்தவனம்; அதில் பலவிதமான புஷ்பச் செடிகளும், மா, கொய்யா, மாதுளை எலுமிச்சை முதலிய பெரிய கனி தரும் மரங்களும் மலிந்து தூணவிட்டும். அதன் கிழப்பக்கம் ஒரு பெரிய கிணறு. மற்றொரு பக்கம் ஒரு சமாதி. நிம்மதியான இடம்.

பள்ளிக்கூடம் ஆரம்பிக்கும் நேரம் சூரியோதயத்திற்கு முன்பு; கலேயும் நேரம் அஸ்தமனத்திற்குச் சிறிது பின்பு. அதிகாலேயில் எவன் எல்லோருக்கும் முன்னுல் வருகிருனே அவனே எங்கள் “ஐயா” (உபாத்தியார்) அன்றைக்கு மிகவும் மெச்சிக்கொள்வார். இதற்காக நாங்கள் எங்கள் வீடுகளில் படுக்கைக்குப் போகும்போதே எப்போது விடியும் என்று தான் நினைத்துக்கொண்டு படுப்போம். இதனுல் சில சமயம் விடி நிலாக் காலங்களில் இரவில் எந்த நேரத்திலும் எழுந்து விடியும் தருணமாகிவிட்டதோ என்றெண்ணி ஓடி அயர்ந்து நித்திரையிலாழ்ந்திருக்கும் ஐயாவை எழுப்பி விடுவோம். அவர் வெளியே வந்து நிலாவையாவது நக்ஷத்திரத்தையாவதுபார்த்து “அடே, இப்போது 2 அல்லது 3 மணி தானே ஆகும்! உன்னே யார் வீட்டில் உசுப்பிவிட்டது?” என்று ஆச்சரியமாய்க் கேட்பார். “வீட்டிற்குத் தெரியாமலே வந்து விட்டோம், ஐயா” என்று சொன்னுல், “சரி, இங்கேயே படுத்துக்கொள்ளுங்கள். இனித் திரும்பிப்போக வேண்டாம்” என்று படுக்க இடம் கொடுப்பார்.

சரியாக 5 மணிக்கு அவர் எழுந்திருப்பார். நேரே கிணற்றிற்குச் சென்று ஸ்நானம் செய்து விட்டுப் பள்ளிக்கூடத்தின் ஒரு பாகத்திலுள்ள பூஜையறைக்குள் சென்று கதவைத் தாளிட்டு ஜபத்திலாழ்ந்திவிடுவார். அதற்குள் மாணவர்களெல்லாம் வந்து விடுவார்கள். அவர்களிடையே அமைதியை நிலைநாட்டிக் கொண்டு ‘சட்டாம்பிள்ளை’ உலாவிக்கொண்டிருப்பார். ஒரு மணி நேரம் கழித்துத்தான் ஐயா வெளியே வருவார். அவர் கதவு திறக்கும் சப்தம் கேட்டதும் எழுந்து நிற்போம் எல்லோரும். அரையில் தூய மெல்லிய வெண்மையான வஸ்திரத்தை ஒரு பாதி சுற்றி, அதன் மற்றொரு பாதியைத் தன் உடம்பின் மேல் பாகத்தையும் மறைத்திருப்பார். நெற்றியில் திருநீறு; மொட்டைத் தலே. முகத்தில் அந்நேரம் அருள் ததும்பிக்கொண்டிருக்கும். சிவபெருமானையே நேரில் கண்டதுபோலிருக்கும் எங்களுக்கு. வழக்கமாக அவர் நிற்கும் ஒரு குறிப்பிட்ட இடத்தில் வந்து நிற்பார். உடனே இரு பெரிய மாணவர்கள் “பூசுவதும் வெண்ணீறு” என்ற பாட்டை ஆரம்பிப்பார்கள். ஒவ்வொரு அடியாக அவர்கள் பாடி நிறுத்தியதும் அதைத் தொடர்ந்தே மற்றவர்களெல்லாம் சொல்லி முடிப்போம். பிரதிதினமும் இதே பாட்டிருக்காது. ஒரு நாளைக்கு ‘கல்லார்க்கும் கற்றவர்க்கும்’ மற்றொரு நாள், ‘பித்தா பிறை சூடி’ இன்னெரு நாள் ‘தோடுடைய செவியன்;’ இப்படியாக தேவாரத்திலிருந்து பல பாட்டுகள். பாட்டு முடிந்ததும் அவரவர்கள் வகுப்பில் போயமர்ந்து விடுவோம்.

வகுப்புகளுக்குத் தனித்தனியே அறைகள் கிடையா. ஒரு பெரிய ஹால் ஐந்து பாகமாகப் பிரிக்கப்பட்டிருந்தது. அதில் தான் முதல் வகுப்பிலிருந்து ஐந்தாம் வகுப்புவரை, சுமார் நூறு மாணவர்கள் படித்தோம். ஐந்தாம் வகுப்புக்கு மேல் உலகத்தில் படிப்பே கிடையாது என்று நாங்கள் எண்ணுவோம். ஏனெனில் அந்தக் கிராமத்திலிருந்தவர்களில் படித்தவர்கள் எவரும் அதற்கு மேல் படித்ததே இல்லை. அவர்களெல்லோருக்கும் இந்த ஒரே பள்ளிக்கூடம் தான், ஒரே ஐயா தான்.

காலையில் வாய்ப்பாடுதான் எல்லோருக்கும் பொதுவான பாடம். வகுப்புக்குத் தக்கபடி வாய்ப்பாடு பிரிக்கப்பட்டிருக்கும். தரையில் பரப்பியிருக்கும் மிக நேர்த்தியானமணலிலமர்ந்து முன்னுல் ஓலைச் சுவடியை அவிழ்த்து எல்லோரும் வைத்துக் கொண்டு தயாரானதும் ஒருவன் “ஒருத்தன் பேருக்கு ஒன்னு ஓரோன் ஒன்னு” என்று மணலில் எழுதுவான். அவனைத் தொடர்ந்தே அதே ராகத்தில் அந்த வகுப்பிலுள்ளவர்களெல்லாம் கத்துவோம். மற்றொரு வகுப்பிலிருந்து “ஒருத்தன் பேருக்குக் கால், ஒரு கால் கால்” என்பான் இன்னெருவன். மூன்ருவது இடத்திலிருந்து மாகாணி வாய்ப்பாடு கிளம்பும். இப்படியாக ஐந்து வகுப்பிலிருந்தும் ஐந்து விதமான ராகங்கள் வெளிப்படும்.

ஐயாவும் சட்டாம்பிள்ளையும் தான் இத்தனை பேரையும் கவனித்துக் கொள்வார்கள். இவ்வளவு இரைச்சலிலும் எவன் தப்பிதமாகச் சொல்லுகிறுன் என்று எங்கள் ஐயாவின் செவியில் விழுந்து விடும். உடனே அது, எந்தப் பையன் குரல் என்று கண்டு அவனருகில் போய் நின்று மறுபடியும் ஆரம்பிக்கச் செய்து அவனைத் திருத்துவார்.

ஒரு மணி நேரம் மணலில் எழுதி எழுதி விரலெல்லாம் எரிச்சலெடுக்கும் தருணத்தில் “எல்லோரும் ஏட்டைக் கட்டலாம்” என்று சட்டாம்பிள்ளை உத்தரவிடுவார். குபீரென ராகம் நின்று ஓலைகள் கட்டும் சப்தம் கேட்கும். அவைகளை அவரவர்களிடத்தில் வைத்துவிட்டு வரிசையாக எல்லோரும் வீட்டுக்குக் கிளம்பி விடுவோம். சிலர் அப்படியே சற்று தூரத்திலிருக்கும் கிணற்றிற்குச்சென்று ஸ்நானம் செய்து விட்டுத் திரும்புவது முண்டு.

வீட்டில் காப்பி சாப்பிட்டறிந்தவன் எங்கள் பள்ளிக்கூடத்தில் ஒருவனுமிருக்க மாட்டான். எல்லோருக்கும் வயிறு நிறைய, ஒவ்வொரு தாயும் பழைய சாதத்தையே போட்டு அனுப்புவாள். பைக் கட்டை (புத்தகங்களடங்கிய துணிப்பை) எடுத்துக் கொண்டு 9 மணிக்கு மறுபடியும் பள்ளிக்கூடம் திரும்புவோம். அதற்குள் ஐயாவும் காலை ஆகாரத்தை முடித்து விடுவார்.

நான் படிக்கும்போது அவருக்கு 50 வயதுக்கு மேலிருக்கும்: அவர் நித்திய பிரமச்சரிய விரதத்தைக்கடைப்பிடித்து ஒழுகியவராதலால் அந்த வயதிலும் அவர் திடகாத்திரமாகவே யிருந்தார். எத்தனை மைல்களானுலும் சளைக்காமல் நடப்பார். தன் சாப்பாட்டைத் தானே சமைத்துக் கொள்வார். நந்தவனத்தின் ஒருபாகத்திலிருந்த சிறு குடிசை தான் அவர் சமயலறை. நாங்கள் 7 மணிக்கு வெளியேறி 9 மணிக்குத் திரும்புவதற்குள் சாதம் வடித்து, ரசம் வைத்து, ஒரு துகையலும் செய்து கொள்வார். யார் வீட்டிலிருந்தாவது தயிர் இனமாக வந்து விடும். காலையில் சமைத்த சாதத்தில் ஒரு சிறிதை மத்தியானத்திற்கும் வைத்துக் கொள்வார். இரவில் ஏதாவது பழங்கள்—நந்தவன மரங்களிலிருந்து உதிர்ந்தவைகள்.

9 மணிக்குத் திரும்பி வரும்போது தான் எங்கள் மனமெல்லாம் எங்கள் ஐயாவைப் பற்றியே நினைந்து கொண்டிருக்கும். ஏனெனில் இனித்தான் ஒழுங்காகப் பாடம் ஆரம்பிக்கும். எங்களுக்கு அவர் ‘அநுக்கிரக’ம் கிடைக்கும் சமயமும் அதுதான். முதல் வகுப்பு முதல் மூன்ரும் வகுப்பு வரை சட்டாம் பிள்ளை பார்த்துக் கொள்வார். 4 5, வது வகுப்புகளை ஐயா கவனித்துக் கொள்வார். நான் அப்போது நான்காம் வகுப்பிலிருந்தேன். ஒரு வகுப்பிற்குக் கணக்குக் கொடுத்து விட்டு, மற்றெரு வகுப்பிலுள்ளவர்களை ஒரு பாடத்தை எடுத்துக் கொண்டு வரிசையாக வாசிக்கச் செய்வார். எல்லாம் தமிழ்தான். கணக்குக் கொடுக்கப்பட்ட வகுப்பிலேயே அவர் கவனம் அதிகமாயிருக்கும். அவர் இரண்டு வகுப்பிற்கும் மத்தியில் ஒரு நாற்காலியில் வீற்றிருப்பார்.

ஒவ்வொரு பையனும் ஸ்லேட்டை அவரிடம் கொண்டுபோய்க் காட்டுவோம்: அவர் சரியாயிருந்தால் ஒரு ‘கொக்கியு’ம் தப்பாயிருந்தால் ஒரு ‘முட்டை’யும் சிலேட்டில் போட்டு அனுப்பிவிட்டு, தப்பிதமாய்ச் செய்தவர்களை யெல்லாம் நிற்கச் சொல்லுவார்; கரும்பலகையில் செய்து காட்டுவார். உடனே அதைக் கலைத்துவிட்டு, நிற்பவர்களை ஒவ்வொருவராக வந்து அவர் செய்த முறைப்படி செய்யச் சொல்லுவார். அவர் கையிலிருந்து ‘சாக்குக்கட்டி’யை வாங்கும் போதே, கை உதறலெடுக்க ஆரம்பித்துவிடும் எங்களுக்கு. போர்டு பக்கத்தில் நெருங்கியதும் பாதி உயிர் போய்விடும். அவரைத் திரும்பிப்பார்ப்போம். ஐயா ‘உம். என்னடா கழுதே முழிக்கிறே” என்று பல்லைக் கடிப்பார். மள மள வென்று ஏதாவது போர்டில் கை எழுதிவிடும், அவரைப் பார்க்காமலே. ‘படார்! படார்!!’ என்று முதுகில் வெங்காய வெடி போட்டது போல் சப்தம் கேட்கும். உடம்பில் சட்டையணிந்தவர்களே அங்கே எவரும் கிடையாது. (வருஷத்தில் ஒரு நாள் இன்ஸ்பெக்டர் வரும்போதுதான் எல்லோரும் பட்டுச் சட்டை குல்லாயுடன் காட்சியளிப்போம்) அதனுல் முதுகில் ‘திடும்’ அடி அப்படித்தான் கேட்கும். ஐயா அதற்கு என்ன செய்யமுடியும்? உடனே பள்ளிக்கூடமே மழை பெய்து ஓய்ந்த மாதிரி ‘கப் சிப்’ பென்ருகி விடும்.

“தடிக் கழுதை, எத்தனை தரம் சொன்னுலும் உன் மண்டையிலே ஏறலியேடா! உன்னை வெட்டிப் புதைக்கணுமடா—” என்று ஆசீர்வதிப்பார் எங்கள் ஐயா. உண்மையாகவே அவர் சொல்லுகிறபடி செய்துவிட்டாரானுல் கவலை ஒழிந்து ஒரே பாடாகப் போய்விடும் என்றுதான் நாங்கள் நினைப்போம். ஏனெனில்



சீக்கியர் வீரராக மாறிய நாள்

“கல்ஸா ஜன்ம தினம்” சீக்கியர்களை கத்தியேந்திய வீரர்களாகக் குரு கோவிந்தசிங் மாற்றிய தினம் லாகூரில் கொண்டாடப்பட்டது. (என். என். பி. எஸ்.)

அப்படிச் சொல்லிக்கொண்டிருக்கும்போதே குபீரெனப்புலி போல் பாய்ந்து குடுமியை ஒரு கையால் இழுத்துக்கொண்டு மற்றொரு கையால் முதுகில் ஓங்கி ஓங்கிக் குத்துவார், தபால் ஆபீசில் முத்திரை குத்துவது போல. “ஐயா, ஐயா” என்று அலறல் சத்தம் வெளிப்படும்.

“ஐயாவாவது, அம்மாளாவது! செய்டா கணக்கை” என்று உறுமுவார். எப்படிச் செய்யமுடியும்? முதுகு எரியும் எரிச்சலை அவர் கண்டாரா? நாங்கள் அப்படியே நிற்போம், முதுகைத் தடவிக்கொண்டே. “பார்த்தாயா, இவனுக்கு என்ன ஊக்கம். முறைத்துப்பார்க்கிருனே! உம். டே, யாரங்கே. ஓடித்துவா ஒரு புளியம் விளார்!” என்று சப்தம் போடுவார். நாலைந்து பையன்கள் நந்தவனத்திற்குள் விழுந்தடித்து ஓடுவார்கள். அங்கே தான் புளியமரம் தயாராய் நிற்கிறதே அரை நொடியில் ஐந்து விளார்கள் வந்துவிடும். அதில் பொறுக்கி எடுத்து ஒரு விளாரைத் தன் கையில் வைத்துக்கொண்டு “இப்ப என்ன சொல்றே? கணக்கைப் போடுகிருயா, அல்லது விளார் முறியணுமா?” என்று கர்ஜிப்பார்.

“ஐயா, இனிமே இல்லைய்யா?” என்று அர்த்தமற்ற ஒரு மன்னிப்பைக் கேட்டுக் கெஞ்சுவான் பையன்.

“என்னடா இனி மேல் இல்லை. இனிக் கணக்கே போடமாட்டாயா?” என்று சொல்லிக்கொண்டே எழுந்திருப்பார். பையன் பின்னுல் அடியெடுத்து வைத்து நகர்வான். “அவனை முன்னுலே தள்ளு” என்று அவர் சொல்லும் முன்பே பின்னுலிருப்பவன் அவனைத் தள்ளிக்கொண்டு போய் அவர் முன் நிறுத்தி விடுவான். அவனிரு கையையும் சேர்த்துத் தன் இடக்கரத்தால் பிடித்துக்கொண்டு வலது கரத்திலுள்ள விளாரினுல் உடம்பில் எந்த இடமென்று கூடப்பாராமல் விளாசி விடுவார். சில சமயம் ரத்தம் கூட வந்துவிடும்! அதைக்கண்டெல்லாம் அவர் அதைரியமடைந்து விடமாட்டார். பையன் எவ்வளவு தாங்க முடியுமோ அதுவரை அவனை ஒரு கை பார்த்து விட்டுத்தான் விளாரை வீசி எறிவார். அல்லது விளாரே பையன் மேல் இரக்கம் கொண்டு ஒடிந்துவிட வேண்டும்.

சடாரென அந்த ஹாலைச் சுற்றி ஒரு பார்வையை வீசுவார். அடேயப்பா! அதிகாலையில் அருள் ததும்பிக்கொண்டிருந்த முகத்தில் இப்போது கொடூரம் தாண்டவமாடும். கண்கள் சிவந்து காணப்படும். இத்தனை நேரமும் தங்கள் பாடங்களையே நிறுத்தி விட்டு இந்த ஒரு பையன் படும் சித்திரவதையைக் கண்டு சிலர் ஆனந்தமும், அநுதாபமும் கொண்டு மௌனமாக இருந்த மற்ற நான்கு வகுப்பு மாணவர்களும் ஐயாவின் பார்வையைக் கண்டு உடல் நடுங்கி குபீரெனத் தங்கள் பாடங்களை மிகப் பெரிய குரலில் படிக்க ஆரம்பித்து விடுவார்கள். அடிபட்ட பையனுக்கும் இதுதான் சமயம். அந்தச் சப்தத்தோடு தானும் சேர்ந்து அடிபட்டதை நினைந்து நினைந்து அழ ஆரம்பித்து விடுவான்.

ஆனுல் அவரோ இன்னும் அவனை விடமாட்டார்!

கணக்கைச் சரியாகச் செய்த ஒரு பையனைக் கூப்பிட்டு போர்டில் செய்து காண்பிக்கச் சொல்லுவார். அவன் துள்ளிக் குதித்து வந்து மளமளவென்று எழுதிக்கொண்டே போவோன். “இப்போதாவது நன்ருய்க் கவனித்துக்கொள்” என்று அடிபட்டவனை எச்சரிப்பார். அவன் எதைக் கவனிப்பானே? கெட்டிக்காரன் கணக்கை முடித்து விட்டுத் தன்னிடத்திற்குப் போனதும், “என்ன புரிந்ததா?...” எனக்கேட்பார். அடிபட்டவன் பதில் சொல்லக்கூட முடியாமல் தேம்பிக்கொண்டே தலையசைப்பான். அவன் எப்படியசைத்தாலும் அவன் புரிந்துகொண்டான் என்ற அர்த்தத்தையே அவர் எடுத்துக்கொண்டு, “அப்பாடா, இதற்கு இவ்வளவு நேரமாச்சு!” என்று முடிப்பார். அப்போது தான் பையனும் தன்னைப் பிடித்த சனியன்விட்டது என்று நினைப்பான்.

ஆனுல் அவரோ இன்னும் அவனை விடமாட்டார்!

“இங்கே வா” என்பார். அவன் தயங்குவான். “வாடா, ஒரு வார்த்தையிலே” என்பார். அந்த ஒரு வார்த்தையிலே ஒரு அன்பு கலந்திருக்கும். அவன் அதன் அர்த்தத்தைத் தெரிந்து கொண்டு மெதுவாய் அவரிடம் வந்து நிற்பான். அவனைத் தன்னிருகைகளாலும் பிடித்திழுத்து ஒரு கையால் அணைத்துக் கொண்டு மற்றொருகையால் அவன் முழுகில் அடிபட்ட இடமெல்லாம் தடவிக்கொடுத்து ‘அடிக்கும் ஒரு கை; அணைக்கும் ஒரு கை’ என்ற வாக்கியத்தை அவனுக்குச் சொல்லாமல் உணர்த்துவது போல் செய்வார்.

“நான் இன்றைக்கு உன்னை அதிகமாகத்தான் அடித்துவிட்டேன். ஐயாவிற்குக் கோபம் வரும்படியாக ஏன் நீ நடந்து கொள்ளுகிருய்? கோபம் வரும் சமயத்தில் யாரோ உனக்கு இஷ்டமில்லாத பயல்கள், நீ அடிபட வேண்டுமென்று நினைத்து விளாரையும்கொண்டுவந்து விடுகிருர்கள்—” என்று பலவிதமான ஆறுதல் வார்த்தைகள் சொல்லி அவன் முதுகையும் கன்னங்களில் வழியும் கண்ணீரையும் துடைத்து விடுவார். ஆஹா! என்ன மந்திர சக்தி தானிருக்குமோ அவரிடம்! ரத்த விளாரான அந்த உடம்பில் அவர் ஸ்பர்சம் பட்டதும் வலியே தெரியாமல் போய் விடும். அவருடைய கொஞ்சுதலான வார்த்தைகளே அதற்கு மருந்து.

மத்தியானம் ஒரு மணியோ, இரண்டு மணியோ, எப்போது அவருக்குப் பசியெடுக்குமோ அப்போது தான் பையன்களையும் அனுப்புவார். பள்ளிக்கூடத்தினருகில் ஒரு செல்வந்தர் வீடு இருந்தது. அவர் வீட்டில் அழகாக மாட்டியிருந்த கடிகாரம் மாதத்தில் 20 நாள் ஓடாது. அதை நம்பிக்கொண்டிருந்து பயனில்லை யென்று கண்ட எங்கள் ஐயா, நிழலைக் கொண்டே மணியைத் தெரிந்து அனுப்புவார்.

வீட்டிற்குச் சென்றதும் சில பெற்றோர்கள் தங்கள் பையனின் உடம்பில் சூடு போட்டது போல் விளாரடிபட்டிருப்பதையும், எருவு தட்டியது போல் அவர் ஐந்து விரல்கள் முதுகில் பதிந்திருப்பதையும் கண்டு அவரிடம் சண்டை போட வருவார்கள். எங்கள் ஐயா, அவர்களிடம் விநயமாகப் பேசி, கடைசியில் பையனுக்குச் சிபார்சு செய்ய வந்த அவர்களே, “அப்படியா, சரி, இனிமேல் அவன் கண்ணிரண்டையும் தவிர, அவனை உரித்து உப்பைத் தடவினுலும் எங்களுக்குச் சம்மதம்” என்று சொல்லும்படி செய்து திருப்பியனுப்பி விடுவார்.

ஆனந்த பற்பொடி

இந்த லேபிலைப்பார்த்து வாங்குங்கள்.
இதுதான் மார்க்கட்டில் சிறந்தது எங்கும் கிடைக்கும்.

Certified by Rt. Hon. V. S. Srinivasa Sastri, P.C.
Hon. Sir R. K. Shanmukham Chetty, K.C.I.E.
Hon. Sir Md. Habibulla Sahib Bahadur, K.C.S.I.
Hon. Sir K. V. Reddi, Kt. Sir B. N. Sarma, K.C.S.I.
Hon. Sir P. S. Sivaswami Aiyar, K.C.S.I., C.I.E.
Hon. Sir C. P. Ramaswamy Aiyar, K.C.I.E.
Hon. Sir M. Krishnan Nair, Kt. Sir A. P. Patro, Kt.
Hon. A. T. Pannirselvam, Dr. P. Subbaroyan
Hon. Justice K. Sundaram Chetti, Hon. P. T. Rajan

ANANDA TOOTH POWDER — TRADE MARK — REGISTERED

Hon. Justice Sir C. V. Kumaraswami Sastri, Kt.
Hon. Justice Sir V. Ramesam, Kt.
Hon. Justice Sir C. V. Ananthakrishna Aiyar, Kt.
„ C. Madhavan Nair; Sir M. D. Devadoss, Kt.
„ M. Venkatasubba Rao, Raja of Sivaganga.
Rajas of Kollengode, Bobbili, Ramnad, Mandasa.
Gold medals from Mysore, Pudukkottai, Etc. States
MANUFACTURED BY—VAIDYARATNA
PANDIT E. RAMANATHA SASTRI, MADRAS, 3.

விலாஸ மாற்றம்

சென்னை, மைலாப்பூர், பஜார் ரோட்டிலிருந்த நமது ஆனந்த பற்பொடி வியாபாரத்தை தற்காலம் பின்கண்ட விலாஸத்துக்கு மாற்றப்பட்டிருக்கிறது.

விலாஸம்:—
வைத்திய ரத்ன பண்டிட்
யு. ராமநாத சாஸ்திரி,
வைத்திய வித்தாச்ரமம்,
25-B, யதோத்காரி :: கீழண்டை மாடவீதி,
சின்ன காஞ்சீபுரம்.

அவரிடம் அடி வாங்காதவன். எவனுகிலும் ஒருவன் அங்கே யிருந்தால அவன் அவர் அன்பிற்குப் பாத்திரமாகாதவனுய்த் தானிருக்க வேண்டும். நானே அவருடைய் பரிபூரண அன்பிற்கும் பாத்திரமானவன்! இல்லாவிட்டால் இன்னும், அவரை நினைக்கும் போதெல்லாம், என் முதுகில் ஒருவித எரியும் உணர்ச்சி ஏற்படுமா?

அவர் ஜீவஹிம்சை யென்பதையே அறியாதவர். ஒருநாள் அதிகாலை 5-மணிக்கு எங்களில் சிலர் வழக்கம் போல் பள்ளிக்கூடத்திற்குப் போனேம், அது பனிக்காலம். அப்படியிருந்தும் அவர் ஒரு மரத்தடியில் ஒரு அடி உயரமுள்ள நீண்ட பலகையைப் போட்டு, சால்வையால் உடம்பைப் போர்த்திக்கொண்டு படுத்திருந்தார். நாங்கள் அவரை எழுப்ப ஓடி அவரிடம் நின்றேம். அவர் கால் பக்கம் சால்வையின் மேல் ஏதோ ஒன்று கருப்பாய்ச் சுருண்டு கிடந்தது. அது என்ன வென்று குனிந்து பார்த்தோம். அவ்வளவு தான். "ஐயா! ஐயா!!" என்று சப்தம் போட்டுக் கொண்டு தூரத்தில் ஓடிப்போய் நின்று இன்னும் பலமாய்க் கத்தினேம். சப்தம் கேட்டு அவர் திடுக்கிட்டு எழுந்தார். அவர் கால் மேல் படுத்திருந்த அந்தக் கருநாகம் 'பொத்' தென்று கீழே விழுந்து மரத்தடியிலிருந்த பக்கத்துப் பொந்தில் நுழைந்து விட்டது. அவர் அதைக் கண்டு சிரித்து "ஆடே! பையன்களா, இதற்குத்தானு இப்படிப் பயந்தீர்கள்? பாம்பும், தேளும் என் தோழர்கள். நான் இரவில் தனியாய் இருக்கிறேனே என்று அவை எனக்குத் துணையாய் வந்து பக்கத்தில் படுத்துக்கொள்ளுகின்றன. இந்த 30 வருஷமாய் இந்தக் காட்டில் தானே, நினைத்த இடத்திலெல்லாம் துணியை விரித்துப் படுக்கிறேன். எத்தனையோ பாம்புகளுக்கு என்னை யாரென்று தெரியும். நான் அவைகளுக்கு ஒரு தீங்கும் நினைத்ததில்லை. அப்படியிருக்க அவைகள் ஏன் என்னைத் தீண்டும்?..." என்று உபந்யாசம் செய்ய ஆரம்பித்து விட்டார்.

'அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்' என்னும் வாக்கியத்தை எங்களுக்கு அடிக்கடி விளக்கிச் சொல்வார். அதன் படியே அவரும் நடந்து காட்டினுர். நந்தவனத்தின் மூலையிலிருந்த சமாதி அவருடைய பெற்றேர்களை அடக்கம் செய்த இடம். காலையில் ஸ்நானம் செய்ததும், அன்றலர்ந்த மலர்களைக் குடலையில் பறித்துப் போட்டுக் கொண்டு அந்தச் சமாதிக்குச் சென்று அதை வலம் வந்து மலர் தூவி விட்டுத் தான் கோவிலுக்குள் புகுவார் ஜபம் செய்ய.

அவர் அக் கிராமத்திற்கே ஒரு கலைப் பொக்கிஷம். அவர் பிரும்மசரியாயிருந்தாலும் மற்றவர்கள் மூலம் உலக விவகாரங்களனைத்தையும் நன்ருய்த் தெரிந்து கொண்டிருந்தார். அதனுல் அவரிடம் வீட்டில் நடக்கும் சிறு சண்டைகள் முதல், ஒரு கிராமத்திற்கு மற்றெரு கிராமத்திற்கும் நடக்கும் பெரிய கலகங்கள் வரை அவர் விசாரணைக்கு வரும். அவர் அவைகளை யெல்லாம் வெகு சாமர்த்தியமாக, இரு கட்சிக்கும் பாரபட்சமின்றித் தீர்த்துவைப்பார். கல்யாணம் செய்ய சுபமுகூர்த்தம், கடல் கடந்து பிரயாணம் செய்ய ஒரு நல்லநாள், காட்டில் விதை விதைக்க கருவோட்டம். இவ்விதமாக எந்த விஷயமானுலும் அக்கிராமத்தார் அவரிடம் தான் செல்வார்கள். அக்கிராமத்திற்கே அவர் தீர்க்க தரிசி.

அவரிடம் நான் நான்கு வருஷம் படித்தேன். நான்காம் வகுப்பில் படிக்கும்போதே 20 வருஷம் நிலைத்திருந்த என் தந்தையை அந்த ஊரை விட்டுச் சர்க்கார் மாற்றிவிட்டபடியால் நாங்கள் குடும்ப சகிதம் மதுரையில் வந்து குடியேறினேம். மதுரைக்குக் கிழக்கே 32 மைல் தூரத்தில் தானிருந்தது அந்தக் கிராமம். பேர்ய் வருவதற்கு வசதியாக மோட்டார்களும் ஓடிக்கொண்டுதானிருந்தன. எனினும் என்ன காரணத்தினுலோ அங்கே போய்வர எனக்குச் சந்தர்ப்பமே வாய்க்கவில்லை. என் படிப்பு முடிந்து உத்தியோகத்திலிருந்தபோது தான் அங்கே புறப்பட்டேன்.

* * * *

வனவாசம் செய்துவிட்டு அயோத்திக்குதிரும்பிவரும் போது ராமனுக்கு எவ்வளவு குதூகலமாயிருந்திருக்குமோ அப்படியிருந்தது என் சொந்தக் கிராமத்தை நான் அணுகிய போது. கிராமத்தை நெருங்கி வர வர மோட்டார் கூட நகர்வதுபோல் தோன்றியது. கார் செல்லும் ரஸ்தா கிராமத்திற்கு ஒரு மைல் தூரத்தில் விலகிச் செல்லுகிறபடியால் ஜனங்களை அங்கேயே இறக்கிவிட்டு அது மேலும் செல்வது வழக்கம். அன்று அக்கிராமத்திற்கு வந்த பிரயாணி நான் ஒருவன் தான். ராஜபாட்டையிலிருந்து பிரிந்து செல்லும் இட்டேரிப் பாதை வழியாக நடந்து ஊரையடைந்தேன்.

ஊரின் மத்தியில் எங்களுக்குச் சொந்தமான வீடு இருந்தது. நாங்கள் அதைவிட்டு நீங்கும்போது எங்களுக்குப் பழக்கமான ஒருவரை அவர் குடும்பத்துடன் அவரின் ஓலைக் குடிசையை உதறிவிட்டு வந்து, அவ்வீட்டில் இனமாக வசிக்கும்படி ஏற்பாடு செய்து விட்டு வந்தோம். அக்கிராமத்தில் வாடகை கொடுத்துக் குடியிருப்பவர்களே கிடையாது. ஒன்று சொந்த வீடுகளிலோ, அல்லது இரவல் இடங்களில் இனமாகவோ தான்வசித்து வந்தார்கள்.

நான் சென்று பார்த்தபோது எங்கள் வீடு இருந்த இடத்தில் பழய வீட்டைக் காணவில்லை! ஒரு சமயம் இடம் தவறிப் பார்க்கிறேனே என்று எண்ணிச் சுற்றிலும் நோக்கினேன். பக்கத்தில் நின்ற பெரிய புளிய மரமும் எதிரேயிருந்த பாசி படர்ந்திருந்த சுவர்களையுடைய பிள்ளையார் கோவிலும், பத்து வருடத்திற்கு முன் பார்த்தது போலவேதானிருந்தன. பின் எங்கள் வீடு மாத்திரம் உரு மாறியிருக்கக் காரணம்? வீட்டின் பாதிப் பாகம் தரையோடு தரையாகப்போயிருந்தது. மற்ற பாதிக்கும் அக்கதி நேரிட இன்னும் சிலகாலம் தானிருந்தது என்பதை மேலிருந்து சரிந்து கிடந்த ஓடுகள் வெளிப்படுத்தின. வீடு தான் மாறிவிட்டது, உள்ளேயிருந்த மனிதர்களாவது அப்படியே இருக்கிருர்களா. இல்லையாவென அறிய உள்ளே எட்டிப் பார்த்தேன். எனக்குத் தெரிந்த ஒரு பெரியவர் ஒரு மூலையில் உட்கார்ந்து 'டக், டக்' கென்று வெற்றிலையை தன் உரலில் போட்டு இடித்துக் கொண்டிருந்தார்.

"நீங்கள் யார்? யாரைப் பார்க்கணும்?" என்று கேட்டார்.

"என்ன தாத்தா, என்னைத் தெரியவில்லையா? நான்......... மகனல்லவா?" என்று சிரித்தேன்.

"என்ன? அவர் மகனு? கடைசிப் பையனு? அடே! பத்து வருஷத்திற்கு முன் பார்த்ததல்லவா, இப்போது பெரிய ஆளாகி விட்டாய். அடையாளமே தெரியலை. வா, வா இப்படி இரு" என்று உபசரித்தார்.

"எங்கே தாத்தா வீட்டிலே யாரையும் காணேம்?" என்று சொல்லிக்கொண்டே அவரருகில் அமர்ந்தேன்.

"எல்லாம் காட்டுக்குப் போயிருக்கிருர்கள். கடலை வெட்டு நடக்கிறது" என்று சொல்லி, என் பெற்றேர் முதலியவர்களின் க்ஷேமத்தை விசாரித்துச் சந்தோஷம் தெரிவித்தார்.

"நான் நம்ம பள்ளிக்கூட உபாத்தியாயரைப் போய் முதலில் பார்க்கவேண்டும். போய் வரட்டுமா?" என்று புறப்பட யத்தனித்தேன்.

"வாத்தியாரையா பார்க்கப் போகிருய்? உனக்கு விஷயம் தெரியாதா...?"

"ஏன், என்ன நடந்தது? எனக்கு ஒன்றும் தெரியாதே"' என்று பதட்டமாய்க் கேட்டேன்,

"அவர் இறந்து ஆறுமாதமாகிவிட்டது..."

"இறந்துவிட்டாரா? உண்மையாகவா?"

"இந்த ஊர் முழுக்கத் தெரியும். அவரை அடக்கம்செய்த அன்றைக்கு ஊர் ஜனம் அவ்வளவுபேரும்தான் திரண்டு வந்திருந்தார்கள்."

"என்ன சிக்கு?"

"உடம்பிற்கு ஒன்றுமில்லை. இரண்டு கள்ளன்கள் அடித்து விட்டார்கள்."

"கள்ளன்களா? அவர் எந்த ஊருக்குப்போயிருந்தார்?"

"எந்த ஊருக்கும் போகவில்லை. ஒரு நாள் ராத்திரி ரெண்டுமணியிருக்கும். பக்கத்துத் தெருவில் மணியகாரர் வீட்டில் யாரோ திருடர்கள் நுழைந்துவிட்டதாக ஒரே கூச்சலாயிருந்தது. தெருவில் படுத்திருந்தவர்களெல்லாம் அவர்களைத் துரத்திக்கொண்டு ஓடினுர்கள். அந்தச் சப்தம்கேட்டு வாத்தியார் படுக்கையிலிருந்து வெளியே வந்து பார்த்தார். அப்போது தான் 'அந்த வழியாக ஓடிய இரண்டு திருடர்கள். வாத்தியார் தங்களைத்தான் பிடிக்க வருகிருர் என்றெண்ணித் தங்கள் கையிலிருந்த இரண்டு கல்களை அவர்மீது வீசிவிட்டுப் பறந்துவிட்டார்கள். அக்கல்கள் அவர் மண்டையில் பட்டு ரத்தம் பெருகி வழிய அவர் அப்படியே மூர்ச்சையிழந்து வீழ்ந்து விட்டார். துரத்திச் சென்றவர்கள் அதைக் கண்டு மிக்க பதைபதைத்து முன்னிலும் வேகமாக ஓடித்தான் பார்த்தார்கள். ஆனுல் உயிருக்குத் தப்பி, முள்ளென்றும் வேலியென்றும் பாராமல் ஓடிக்கொண்டிருக்கும் கள்வர்களா இவர்கள் கையில் அகப்படுவார்கள்? வாத்தியார் அதே படுக்கையில் படுத்தவர் பின்பு எழுந்திருக்கவே இல்லை. அந்தக் கள்ளன்களே அவருக்கு எமனுக வந்துவிட்டான்கள்போலிருக்கிறது-" என்று முடித்தார்.

"ஐயோ அந்த உத்தமருக்கா இக்கதி நேரவேண்டும். சரி, இப்போது பள்ளிக்கூடத்தை யார் பார்த்துக்கொள்ளுகிறது?"

"யாரோ அவருடைய உறவினர் ஒருவர்"

"இதோ நான் போய்ப் பள்ளிக்கூடத்தையாவது பார்த்துவிட்டு வருகிறேன்" என்று அவரிடம் விடைபெற்றுக் கொண்டு புறப்பட்டேன்.

பள்ளிக்கூடத்திற்குள் நுழைந்து பார்த்த போது வகுப்பெல்லாம் வெரிச்சென்றிருந்தது. பையன்களின் புத்தகப் பையும் அதன் மேலிருந்த ஓலைச்சுவடிகளும் அவரவர்களிடத்தில் ஒழுங்காய் வைக்கப்பட்டிருந்தன. ஆனுல் அவர்களில் ஒருவரேனும் அங்கே காணப்படவில்லை. எங்கே போயிருப்பார்கள் என்று யோசித்துக்கொண்டு நிற்கையில் "பித்தாபிறை சூடி பெருமானே......" என்று பல குரல்களில் ஒலித்த பாட்டு காற்றில் மிதந்து வந்தது. அது நந்தவனத்திற்குள்ளிருந்துதான் வருகிறதெனத் தெரிந்து அங்கே விரைந்து பார்த்தேன். என்ன ஆச்சர்யம்! மாணவர்களனைவரும் புதிதாகக் கட்டப்பட்டிருந்த ஒரு சமாதியைச் சூழ்ந்து நின்று கை குவித்துப் பாடிக்கொண்டிருந்தனர். நான் அவர்களுக்குத் தெரியாமல் அதனருகில் நின்ற ஒரு மரத்தடியில் போய் நின்று கவனித்தேன்.

தன் பெற்றேர்களை அடக்கம் செய்திருந்த அதே சமாதிக்கருகில் தானும் இப்போது ஒரு சமாதியாகி விட்டார் எங்கள் ஐயா—என் குரு. அவர் பெற்றேர்களை அவர் ஒருவரே பூஜித்து வந்தார். இப்போது அவரை நூற்றுக்கு மேற்பட்ட மாணவர்கள் அனுதினமும் பூஜிக்கிருர்கள். அவருடைய உருவம் என் மனக்கண்ணில் தோன்றியதும் என் கண்களில் நீர் துளிர்த்தது. நானும் அவர்கள் பாட்டில் மெய்ம்மறந்து நின்று விட்டேன். பாட்டு முடியும் வரை பாரறியேன், விண்ணறியேன். பாட்டு முடிந்ததும் அவர்கள் வரிசையாக நான் நின்று கொண்டிருந்த மரத்தைச் சுற்றிக்கொண்டு பள்ளிக்கூடத்திற்குள் செல்லும் போது என்னைக் கவனித்துக் கொண்டே சென்றுர்கள்.

அவர்களுக்குக் கடைசியில் வந்த ஒருவர் நான் மரத்தில் சாய்ந்து அசையாமல் நிற்பதைக் கண்டு என்னையடுத்து "தாங்கள் யார்?" என்றுர். நான் திடுக்கிட்டு "நான் இந்தப் பள்ளிக்கூடத்தில் 10 வருஷத்திற்கு முன் படித்தவன். ஐயாவைப் பார்க்கலாமென்று வந்தேன். இங்கே வந்ததும் தான் விஷயம் தெரிந்தது. அவருடைய சமாதியையாவது தரிசித்து விட்டுப் போகலாமென நினைத்தேன்" என்று சொல்லி விட்டு அவர் பதிலுக்குக் காத்திராமல், பக்கத்தில் நின்ற செடிகளிலிருந்து சில மலர்களைப் பறித்துக் கொண்டு நேரே சமாதிக்குச் சென்று வலம் வந்து மலரைத் தூவி சாஷ்டாங்கமாய் விழுந்து நமஸ்கரித்து எழுந்து, கண்ணீரைத் துடைத்துக் கொண்டு அவருடன் கூடப் பள்ளிக்கூடத்திற்குள் நுழைந்தேன். நான் வெகு தூரத்திலிருந்து வந்ததையறிந்த அவர் எனக்குப் பழங்கள் கொடுத்து என் களைப்பை யாற்றிக் கொள்ள வேண்டினுர். அந்த 'ஐயா' கையிலிருந்து எத்தனை பழங்கள் வாங்கிச் சாப்பிட்டிருப்பேன், அப்போது அவைகள் தேவாம்ருதமாயிருந்தன. இன்று, அப் புதியவர் கொடுத்தவைகளைத் தொடவும் என் கை கூசியது.

"இதெல்லாம் எனக்கு எதற்கு? நான் அடுத்த பஸ்ஸிலே மதுரைக்குப் போகிறேன். ஐயாவின் ஞாபகார்த்தமாக ஏதாவது இருந்தால் கொடுங்கள்" எனக் கேட்டேன். அவர் பூஜையறைக்குள் சென்று, ஐயாவின் புகைப்படம் ஒன்றை எடுத்துக் கொண்டு வந்து கொடுத்தார். வாங்கிக் கண்களில் ஒற்றிக் கொண்டு, ஐயாவின் 'பாத காணிக்கை'க் கென கொண்டு சென்றிருந்த புது வஸ்திரங்களையும், பத்து ரூபாயையும் அப் புதியவரிடம் கொடுத்து ஐயாவின் சிலவிற்கு அதை உபயோகிக்கும்படி வேண்டிக்கொண்டு விடை பெற்றுத் திரும்பினேன்.

கர்ப்பத்தைத்தடுக்க "ரஹாத்"

நிச்சயமான மருந்தாகும். மூன்று நாட்கள் உபயோகித்தால் கர்ப்பம் தரிக்காது. ஆர்டருடன் உத்திரவாத பாரமும் அனுப்பப்படும். விலை ரூபா 5/8. அல்லது 10 ஷில்லிங். மாதவிடாய் தவருமல் ஏற்படும்.

Dr. S. H. KHAN, (S.M.) 42, Churchgate St., Fort, Bombay. Phone 21343.

டோங்ரேயின்

பாலாமிருதம்

பிரசித்தி பெற்ற

குழந்தைகளின் டானிக்

புதிய பதிப்பு!   மலிந்த விலை!!

பாரதி நூல்கள்

(நேர்த்தியான காலிகோ பைண்டு)

1.	கவிதைகள்	Vol I	ரூ.	3	0	0
2.	வசனங்கள்	Vol II	,,	3	0	0
3.	கட்டுரைகள்	Vol III	,,	3	0	0
4.	பகவத்கீதை (காலிகோ)		,,	0	8	0
5.	Agni & other Poems & Translations		,,	1	0	0
6.	Essays & other Prose Fragments		,,	1	0	0
7.	சரித்திரம்		,,	0	4	0

பாரதி பிரசுராலயம்,
567, ஹைரோடு, திருவல்லிக்கேணி, மதராஸ்.

3 உயர்ந்த

டானிக்குகள்

யுனைடெட் கன்ஸர்ன், 54, பந்தர் தெரு, மதராஸ்.
(உதவி வைத்தியர் Dr. P. S. C. மணி)

நவநாகரீகம்

★

ஓயாமல் பாட்டு

★

காசினி எழுதியது

* * *. 'என்ன என்ன எல்லாம் புதிசு புதிசாகக் கண்டு பிடிக்கிறார்கள்!" என்று குரலில் ஒருவித வியப்பு தொனிக்க, மாலினி சொன்னாள்.

இப்போதுதான் தாற்காலிகமாகபட்டணத்துக்கு ஒரு அபாயமும் இல்லை; இருட்டில் தட்டித் தடுமாறித் திண்டாடாமல், ஏதோ விளக்கு என்று பேருக்காவது பத்து மணி வரையில் போடலாம்; தெருவிலும் இருளோ என்று இருக்காமல் விளக்கு எரியும் என்று சொல்லி விட்டார்களா? இந்த சமயத்தில் ஒரு வாரமாவது பட்டணம் வந்து வீடு வாசலையும் கவனித்து தங்கள் புருஷர்களுடன் இருந்து விட்டுப் போகலாமே என்று பங்கஜம், மாலினி இருவரும் வந்திருக்கிறார்கள்.

என் அத்தையும் திடீரென்று நேத்தி மத்தியானம் வந்து சேர்ந்தாள். 'நீ என்ன செய்கிறாய் என்று ஒரு நடை வந்து பார்த்து விட்டுப் போலாம் என்று வந்தேன்! உன் குழந்தைகள் எல்லாரும் சௌக்கியமாக இருக்கிறார்கள்; இரண்டு நாளைக்கு என் அத்தங்காரைப் பார்த்துக்கச் சொல்லிவிட்டு வந்தேன். பட்டணத்திலே எதுவும் கிடைப்பதில்லை என்று எல்லோரும் சொன்னாளா? நீ என்ன திண்டாடுகிறாயோ என்று மனசு கேட்கலை. பார்த்து விட்டுப் போகலாமே என்று வந்தேன்!' என்றாள்.

கூட ஒரு மூட்டையும் கொண்டு வந்திருந்தாள். இதில் சம்பாரப் பொடி, பருப்புப் பொடி, வத்தல், வடாம், அப்பளம், கொஞ்சம் ஊறுகாய் தினுசுகள் எல்லாம் இருந்தன! ஒரு டின் பல் பொடியும் கொண்டு வந்திருந்தாள்!

'காபிக் கொட்டையும், சர்க்கரையும் நான் வாங்கி வைச்சது உனக்கு இன்னும் சில நாட்களுக்குப்போதும் என்பது தெரியும், ஒரு சமயத்துக்கு உதவுமே என்று இதெல்லாம் கொண்டு வந்தேன்!' என்றாள். அத்தை இவ்விதம் என்மேல் சபலப்பட்டது. எனக்கு ஒரு பக்கம் சிரிப்பு வந்தாலும் ஒரு பக்கம் துக்கம் கலந்த மகிழ்ச்சியும் ஏற்பட்டது! என்னமோ எழுத ஆரம்பித்து ஏதெல்லாமோ எழுதிக் கொண்டிருக்கேனே? புதுசு புதுசாகக் கண்டுபிடித்தல் என்று மாலினி சொன்னதும், 'என்னது இப்போ கண்டு பிடிச்சிருக்கா? ஏதாவது நாசகாரியா? விஷப்புகையா? நூறு மைலுக்கு சகல ஜீவனையும் நசிக்கச் செய்யும் விஷ வாயுவா? இதெல்லாம் கேட்டாலே குலை நடுக்கமாக இருக்கே?' என்றாள் என் அத்தை.

'இது ஒன்றும் அப்படி பயப்படக்கூடிய காரியம் இல்லை பார்க்கப் போனால் மனதுக்குக் குதூகலத்தைக் கொடுக்கும் சமாசாரம் தான்! காதுக்கும் இன்பத்தை அளிக்கும்?' என்றாள் மாலினி.

'அது என்ன விசித்திரம்? என்னமோ மூடு மந்திரம் பண்ணுறாயே? சொல்லேன்?' என்றாள் என் அத்தை.

'ஒரு தரம் முடுக்கி விட்டால் போதும்; பிறகு இரண்டு மணி நேரத்துக்கு ஓயாமல் பாடும் கிராமபோன் ஒன்று கண்டு பிடித்திருக்கிறாளாம்!' என்றாள் மாலினி.

'சொன்னத்தைச் சொன்னத்தைத் திருப்பிச் சொல்லுமா? என்று என் அத்தை வெடுக்கென்று கேட்டாள்.

மாலினி விவரமாகச் சொன்னாள், ஒரு பொத்தானை அமுக்கினால் போதுமாம். பதினைஞ்சு இசைத் தட்டுகளை இந்த கிராமபோன் நிற்காமல் வாசிக்குமாம், மேல் பக்கம், அடிப்பக்கம் எதுவும் நாம் திருப்ப வேண்டாமாம் தட்டுக்கள் மாற்ற வேண்டாமாம்! எல்லாம் அதுவே செய்து கொள்ளுமாம்! கேட்டால் விசித்திரமாக இல்லையா?

வெயில் நாளுக்கு

எப்படியோ மறுபடியும் கொஞ்ச நேரம் யுத்தத்தைப் பற்றியே பேசினோம்.

'போயும் வந்தும் சதா காலமும் இதுதானா பேச்சு? ஏதாவது சத்காலக்ஷேபமாகப் பேசக் கூடாதோ? என்று கேட்ட என் அத்தை, மறுவினாடியே:—'நானும் தினம், சுவாமீ இந்த யுத்தம் முடியட்டும்; மனிதர்கள் மனசில் சாந்தியும், சமரச புத்தியும் உண்டாகட்டும். சீக்கிரமாகவே சமாதானம்வரட்டும் என்றெல்லாம் வேண்டிக்கரேன்! ஒன்னும் ஓயர வழியாகக் காணமே?' என்று பெருமூச்சுவிட்டாள்.

'அது போகட்டும் அத்தை; இதெல்லாம் நம்ம வேண்டுதலுக்கு அடங்கியா நடக்கிறது? ஈசுவரன் என்னவிதமாகத் திட்டம் போட்டிருக்கானோ? அந்த முழுத்திட்டத்தையும் பார்த்தால் நாம் பதரமாட்டோம். இப்படி அறைகுறையாகக் காணுவது தான் சங்கடப்படும்படி இருக்கிறது. அதுதான் இதைப்பற்றி யோஜித்துப் பிரயோஜனமில்லை; இந்த வேர்க்குருவுக்கு ஏதாவது மருந்து தெரிந்தால் சொல்லுங்கோளேன்!' என்றாள் மாலினி,

அவள் முதலில் பேசிய உன்னத வேதாந்தமும், கடைசியில் கேட்டதும் எங்களுக்குச் சட்டென்று சிரிப்பை மூட்டிவிட்டது.

'நம்ப கிராமத்தில் ஒரு பெண்ணுக்கு இப்படித்தான் வேர்க்குரு அடையாக இருந்தது. இதுக்கு நொங்கைத் தடவினார்கள். சீக்கிரத்தில் குணமாகிவிட்டது. தினம் ஒரு இளம் நொங்கை முகத்தில் நன்றாகத் தடவி, கொஞ்ச நேரம் காஞ்ச பின், நன்னா அலம்பிவிட்டால் வேர்க்குருவுக்கு மட்டும் இல்லை. முகத்துக்கே நல்லது. முகம் மிருதுவாகப் பளபளப்பாக இருக்கும்!' என்றாள் என் அத்தை. நீயும் உன் பேத்திக்கு நெத்தியில் வேர்க்குரு வாரி ஈஷி இருக்கு; இதுக்கு என்ன செய்யலாம்?' என்று கேட்டிருந்தது. ஞாபகம் வந்தது. இந்த வைத்தியம் செய்து பாரேன்? சுலபமாகத்தானே இருக்கு?

"சௌகரிய ஆடை"

லண்டனில் இரண்டு யுவதிகள் அணிந்திருக்கும் உடைகளைப் பார்த்தவர்கள் அவை "சௌகர்யமானவை" எனக் கூற முடியாது. பார்ப்பதற்கு அவை பகட்டாக இருக்கின்றன துணியும் தைக்கப்பட்ட விதமும் இதற்குக் காரணமாம். பார்ப்பதற்கு அவை எத்தகையனவாக இருப்பினும், லண்டன் தையற்காரர்கள் உடை நன்றாகவும் அழுத்தமாகவும் இருக்கவேண்டுமென்ற நோக்கத்துடனே மேற்படி உடையைத் தயாரித்தனர்.

1 மணியில் வாலிபம்!

ரமணவிலாசினி
வடிகா

காமசக்தியை விருத்தி செய்து, துரித ஸ்கலிதத்தை நிறுத்தி, எல்லோருக்கும்சிற்றின்பத்தில் திருப்தியைத் தரும் பரம ஔஷதம். டப்பி ரூ. 1.
மதன மஞ்சரி பார்மஸி,
184, சைனபஜார் ரோட், மதராஸ்.

தலையில்

தலைமயிர் தெரிகிறதா அல்லது அடித்தலை தெரிகிறதா அடித்தலை புலப்படும் பக்ஷத்தில், உதிர்ந்த கேசராசிகளுக்குப் பதில் புதுக்கூந்தல் முளைக்கவில்லை என்பது நிச்சயம். அச்சமயம் கேசவர்த்தினியைக் கொண்டு பரிஹரிக்காமல், பாதி வழுக்கையைப் பூரண வழுக்கையாக விடுவானேன்? வழுக்கையால் ஏற்படும் கிழத்தோற்றத்தையும் அனுபவிப்பானேன்?

உதிர்ந்த இலைகள் மறுபடி முளைத்துவிடும். ஆனால் சில சமயங்களில் உதிர்ந்த கூந்தல் சிகிச்சையில்லாமல் முளைப்பதில்லை. அச்சமயங்களில் கேசவர்த்தினியை உபயோகித்து மயிர் உதிர்வதை நிறுத்தி இளங்கூந்தலையும், இளமையையும் ஒருங்கே பெறுங்கள்.

கேசவர்த்தினி

கூந்தலைக்காப்பது; விருத்திசெய்வது; அழகுபடுத்துவது விலை அ•12; மேற்செலவு வேறு. எல்லாக்கடைகளிலும் கிடைக்கும்.

தயாரிப்பவர்:
தென் இந்திய ரஸாயன சாலை,
ஆர். எஸ். புரம் — கோயமுத்தூர்.

IMMEDIATE VASHIKARAN
On contract basis we undertake to influence or subjugate like spellbound any one or more persons (male or female) instantly and surely cause them entirely at your own grasp quite easily. Particulars against Stamps. SANTI ASRAM, Dacca (Bengal)

ராஜ்-ராணி

மீரா பாய்

'ரஸியா' எழுதியது

★

வட இந்தியாவில் துளஸிதாஸ், வங்காளத்தில் சைதன்யர், மஹாராஷ்டிர தேசத்தில் துகாராம், ராம்தாஸ், ஏகநாத் — இவர்கள் எவ்வாறு அழியாப் புகழுடன் விளங்குகின்றனரோ அவ்வாறே மீராவின் புகழும் பெயரும் நம் தேசத்தில் பக்தி என்பது நிலைத்து நிற்கும் வரை அழியாப் புகழுடன் விளங்கும். இத்தகைய மீராவின் வாழ்க்கைச் சிறப்பை இங்கு காணலாம்.

பக்த மீராபாய்

ராஜபுத்திர வீரர்களுடைய உற்பத்தி ஸ்தானமாகிய மேவார் பண்டைக் காலத்து இந்திய 'கல்விக்கும் நாகரீகத்திற்கும் முதன்மையான இடமாய் இருந்தது என்பதும், ராஜபுத்திரர்கள் 'மிக பராக்கிரமசாலிகள் என்பதும் எல்லோருக்கும் தெரிந்ததே. ராஜ புத்திரர்கள் மேவாரின் சாம்ராஜ்யத்தையும், பெருமையையும் காப்பாற்றுவதற்காக அவர்களுக்கு எவ்வித துன்பங்கள் நேர்ந்த போதிலும் பகைவர்களுடன் போர் புரிவதோடு, தங்கள் வாக்கை நிறைவேற்றி சத்தியத்தை நிலை நாட்டினார்கள். அக்குடும்பத்தில் சுமார் பதினைந்தாவது நூற்றாண்டில் மகாத்மாவைப் போன்ற பக்த சிரோமணியாய் விளங்கிய ராஜ்ராணி மீராவைப்பற்றி இங்கு கூறுவோம்.

மேவாரில் ஒரு நாள் இரவு ராணா ஏதன் ஸிங்கின் அரண்மனையில் கூச்சலும் சிரிப்புமாயிருந்தது. அரண்மனையைச் சுற்றி விளக்குகள் ஆயிரக் கணக்கில் எரிந்துகொண்டிருந்தன: அநேக குழந்தைகளின் பாட்டுகள் கேட்டன. காரணம் என்னவென்று கேட்கிறீர்களோ! பிரமாதம் ஒன்றுமில்லை. ராணா ஏதன் சிங்கின் மகளுடைய பொம்மை ராதாவுக்கும் திவானி மகளுடைய பொம்மை கோபாலுக்கும் பொம்மைக் கலியாணம் தான். அக்கம் பக்கத்திலுள்ள குழந்தைகளெல்லாம் அக்கலியாணத்திற்கு வந்திருந்தார்கள். ராதாவுக்கும் கோபாலுக்கும் மேளதாளத்துடன் கலியாணம் நிறைவேறிற்று.

"இதோ இருக்கிறார்"

திடீரென்று தூரத்தில் மேள சப்தம் கேட்டது. வேறொரு கலியாண கோலம் வீதியில் வந்து கொண்டிருந்தது. ராணா ஏதன் ஸிங்கின் ஆறு வயதுடைய மகள் மீரா ஓடிப் போய் அரண்மனையின் சாரளத்தின் வழியாய் பார்த்தாள். வீதியில் யானையின் மீது கலியாணமாப்பிள்ளை உட்கார்ந்து கொண்டு வருவதைக் கண்டாள். முகத்தில் சந்தோஷம் தாண்டவமாடத் தன் தாயாரிடம் ஓடிப் போய் "அம்மா, என் கலியாணப் பிள்ளை எங்கே?" என்று கேட்டாள். தாயார் தன் மகளின் பால் வடியும் அழகிய மாசிலா முகத்தைப் பார்த்து எதிரில் மேடையின் மீது வைக்கப்பட்டிருந்த ஒரு விக்கிரகத்தைச் சுட்டிக்காட்டி "இதோ இருக்கிறார் கிரிதர கோபால், உன் கலியாணப் பிள்ளை. இவரைப் பூசை செய்" என்று கூறினாள். அன்றைய தினத்திலிருந்து மீரா பிரதி தினமும் கிருஷ்ணபரமாத்மாவுக்கு பூசை செய்வதிலும் பக்தியூறும் பாட்டுக்களைப் பாடுவதிலும் நாட்டியம் செய்வதிலும் முனைந்தாள்.

மீரா பூஜை

நாளடைவில் மீராயௌவன தசையை அடைந்தாள். அவளது பக்தியும் யௌவனமும் அவள் அழகைப் பன்மடங்கு எடுத்துக்காட்டியது. இதே வயதில் வேறொரு பெண் இவ்வளவு அழகுடையவளாக இருந்தால் நகைகளாலும் சேலைகளாலும் தன்னை எவ்வளவோ அலங்கரித்துக்கொள்வாள். ஆனால் மீராவோ அப்படி இல்லை. அவளுடைய முக்கியமான தொழில் பூசை செய்வது தான். தினம் கோவிலுக்குப் போய் கிருஷ்ண பகவானுக்கு மணிக்கணக்காய் பூசை செய்வாள். ஒவ்வொரு சமயம் மத்தியானத்தில் அங்கேயே தூங்கி விடுவதும் உண்டு. ஒவ்வொரு சமயத்தில் தான் நேரில் கிருஷ்ணபகவானுடன் பேசுவதாய்ப் பாவனை செய்துகொண்டு பேசுவாள். பார்ப்போர்கள் இவளைப் பைத்தியக்காரி என்றும், இன்னும் பல வேறு விதமாகவும் பேசிக்கொண்டார்கள். மீராவின் தாய் தந்தையர்களுக்கும் மற்றும் உறவினர்களுக்கும் மீரா இவ்வாறு இருப்பது கவலையையே கொடுத்தது. மீராவுக்குத் தகுந்த இடத்தில் சீக்கிரம் கலியாணம் செய்துவிட்டால் அவள் சரியாய் விடுவாள் என்று எண்ணி சித்தூர் மகாராணா கங்காவின் மூத்த குமாரன் போஜ்ராஜாவுக்குமீராவைவிவாகம் செய்துகொடுப்பதாய் நிச்சயம் செய்தார்கள். ராஜஸ்தானத்தில் உள்ள அழகுடைய பெண்களில் மீராவும் ஒருத்தியாய் இருந்ததினாலும், நல்ல தேகக் கட்டு வாய்ந்தவளாயும் இருந்ததினால் போஜ்ராஜா மீராவையே மணக்க விரும்பினான்.

பதி சிச்ருஷை

மறுபடியும் அரண்மனையில் மேள வாத்தியம் முழங்கிற்று. மணமகனின் கோலம் வீதியில் வந்து கொண்டிருந்தது. ஆனால் மீரா இம்முறை ஜன்னல் வழியாய் எட்டிப் பார்க்கவில்லை. தன் கணவன் தான் ஊர்வலம் வந்து கொண்டிருக்கிறான் என்பது அவளுக்குத்தெரியும். ராஜபுத்திர முறைப்படி கலியாணமும் நடந்தேறியது. மீராவும் கணவன் வீட்டுக்குப்போய்விட்டாள். ஆனால் புது தம்பதிகளுக்கு சந்தோஷமில்லை. அவர்கள் தனித்தனியாகவே இருந்து வந்தார்கள். அதிபலாட்டியரான மொகலாயருடன் மிக தைரியமாய் எதிர்த்து சண்டையிடும் மேவாரின் அரச குடும்பத்தில் உதித்த வீரனும் பலாட்டியனுமான போஜராஜாவுக்கு மகாத்மாவைப் போன்ற மனப்போக்குடைய பத்தினி பிடிக்கவில்லை. மீரா தன் கணவனைச் சந்தோஷப்படுத்தவும் அவன் இடும் கட்டளைகளுக்கு மீறாமல் இருக்கும் பொருட்டும் எவ்வளவோ முயற்சி செய்தாள். இதன் பொருட்டு எவ்வளவோ கஷ்டங்களையும் சகித்துக் கொண்டாள். ஆனால் தான் பூஜை செய்வதில் மட்டும் தன் மனப்போக்கின்படியே இருந்து வந்தாள். வீட்டு வேலைகள் முடிந்தவுடன் கோவிலுக்குப்போய் அங்கு பக்தர்களுடனும் சாதுக்களுடனும் சேர்ந்து பாடுவாள். இவ்விதம் ஒரு ராஜபுத்திர அரசி கேவலம் சாதுக்களுடனும் பக்தர்களுடனும் கோவிலில் ஆடிப் பாடுவது ராஜஸ்தான் எங்கும் பேச்சுக்கு இடமாய்விட்டது. பலர் பலவிதமாய்ப் பேச ஆரம்பித்தனர். இது மீராவின் மாமியாருக்குப் பெருங்கோபத்தை மூட்டியது. ஒரு நாள் காலை மீரா கோவிலிலிருந்து திரும்பி வந்தபோது அவள் மாமியார் அவளைக் கூப்பிட்டு, "மீரா, நீ இவ்வாறு நடந்துகொள்வது நன்றாய் இல்லை. நீ வயதில் மிகவும் சிறியவள். உனக்கு உலக அனுபவம் ஒன்றும் தெரியாது. நீ குற்றமற்றவள். உன்னைப்பற்றி மூடத்தனமாய் பலபேர் பலவிதமாய் பேசிக்கொள்கிறார்கள். நீ வெகு சிறுபொழுதையே உன் கணவனுடன் கழிக்கிறாய். பெரும்பொழுதெல்லாம் கோவிலிலேயே செலவிடுகிறாய். சில சமயம் இரவில்கூட சாதுக்கள் சன்னியாசிகளுக் கிடையே காணப்படுகிறாய். அவர்கள் துணையில் உன்னையும் மறந்து பாடுகிறாய், ஆடுகிறாய். இதெல்லாம் மகாராணியாகிய உனக்கு அழகல்ல என்பதை நீ உணரவேண்டும்" என்றாள். "அம்மா, என்மீது தயவு வையுங்கள். நீங்கள் இம்மாதிரி பேசுவது தர்மமல்ல. நீங்கள் நான் என்னை மறந்து நாட்டியம் செய்வதாயும், பாடுவதாயும் சொல்வது, நான் சாதுக்கள் துணையில் இருப்பதினால் அல்ல, என்னுடைய நாயகன் சன்னதியில் தான். அம்மா, என் மேல் கோபம் வேண்டாம். பக்ஷமாயிருங்கள். நான் உங்களை வேண்டிக்கொள்ளுகிறேன்" என்றாள் மீரா.

"அர்ப்பணம் ஆகிவிட்டது"

"மீரா, உனக்கு இன்னும் தெரியவில்லை. நீ பகவானி



பக்த மீராபாய் பரந்தாமனைப் பஜித்த கோவில்.

டத்தில் பக்தியுள்ளவள் என்பது எனக்குத் தெரியும். ஆனால் அயலார்கள் என்ன நினைப்பார்கள். அது தான் எனக்கு பயமாயிருக்கிறது. நீ அதிபக்தியுடையவள் தான். ஆனால் நீ யாரை பூஜை செய்ய வேண்டுமென்றால் கிருஷ்ணனை அன்று, கேவலம் மாடு ஓட்டும் பையன்களின் கடவுளை அன்று; சக்திக்கும் கீர்த்திக்கும் பேர் போன மேவாரின் குல தெய்வமாகிய துர்க்கையைத் தான்" என்றாள் மாமி. "அம்மா, என்னை மன்னித்துவிடுங்கள், என்னைப் பாடவும், ஆடவும் விடுங்கள். என்னைப் பல வந்தம் செய்யாதீர்கள். என் மனதையும் சரீரத்தையும் ஏற்கனவே கிரிதர கோபாலனுக்கு அர்ப்பணம் செய்துவிட்டேன். இனி வேறு எந்தக்கடவுளுக்கும் என்னை அர்ப்பணம் செய்ய முடியாது. என்னைத் தயவுசெய்து மன்னித்து விடுங்கள்." என்றாள் மீரா. மாமியார் எவ்வளவு சொல்லியும் ஒன்றும் பயன்படாமல் போய்விட்டது. மீராவினால் கோவிலுக்குப் போகாமலும், பாடாமலும் இருக்க முடியவில்லை. போஜ ராஜாவின் சகோதரி உதாவும் மீராவுக்கு எவ்வளவோ சொல்லியும் மீரா "என்னால் முடியாது, என்னை விடுங்கள்" என்னும் பதிலைத் தவிர வேறொன்றும் சொல்லவில்லை.

சகோதரி துர்ப்புத்தி

உதா எவ்வளவோ சொல்லியும் பயனில்லாமல் போகவே கோபத்தினால் மீரா மேல் பழிவாங்குவதென்று உறுதி கொண்டாள். அன்று முதல் மீராவின் மீது எந்த விதத்தில் பழி சுமத்தலாம் என்றிருந்தாள். ஒருநாள் காலை உதா தன் தமயனிடம் போய் "அண்ணா, நீ மீராவின்மீது எவ்வளவோ ஆசையுடன் இருக்கிறாய் ஆனால் ..." "ஆனால், என்ன? சீக்கிரம் சொல்" என்று போஜராஜன் கோபமாக வினவினான். "ஆத்திரப்படாதே, அண்ணா, அப்படி கேவலமானது ஒன்றுமில்லை."

"பின், ஆலசியம் பண்ணாமல் சீக்கிரம் சொல்." "ஒன்றுமில்லை, அண்ணா. சிலபேர் மீராவைப்பற்றி வம்பளக்கிறார்கள். அதைக் கேட்க என்னால் சகிக்க முடியவில்லை". "விளங்கச்சொல், உதா. எனக்கொன்றும் விளங்கவில்லை". "அண்ணா, நீ ஒன்றும் பிரமாதப்படுத்தாதே. யாராவது ஒட்டுக் கேட்டுக்கொண்டிருக்கப்போகிறார்கள். ராணா கங்காவின் வீட்டு மரியாதை என்னவென்றால் பிராணத்தியாகம் செய்து கொள்வதுதான். பாவம் மீரா...". "உதா, சீக்கிரம் சொல். என்ன மீராவுக்கு?" "அண்ணா, நான் என் கண்ணால் பார்த்தேன். நேற்று இரவு மீரா கோவிலில் யாருடனோ பேசிக்கொண்டிருந்தாள். நான் பார்த்து திடுக்கிட்டேன், இன்றிரவு என்னுடன் வா. நீயே பார்த்தாயானால் தெரியும்".

மன்னனின் கோபம்

போஜராஜாவின் கண்களில் தீப்பொறிகள் பறந்தன. மீராவை என்ன செய்கிறதென்று அவனுக்குத் தெரியவில்லை. மீராவின் குற்றமற்ற முகம் அவன் கண் முன் வந்து நின்றது: அன்றிரவு போஜ்ராஜா தன் சகோதரி உதாவுடன் கோவிலுக்குப் போனான். கதவுகள் மூடப்பட்டிருந்தன. கதவின் துவாரத்தின் வழியாய் உள்ளே விளக்கு வெளிச்சம் தெரிந்தது. உள்ளிருந்து மீராவின் ம்ருதுவான குரல் துவாரத்தின் வழியாய்க் கேட்டுக்கொண்டிருந்தது. ஒரு நிமிஷம் போஜ் ராஜா குரலைக் கேட்டு பிரமித்துவிட்டான், உடனே ஒரு இடி இடித்துக் கதவுகளைத் திறந்தான். அவ்விடத்தில் சாதுக்களாவது சன்னியாசிகளாவது ஒருவரும் காணப்படவில்லை. மீரா தன்னந்தனியே தன் எதிரிலிருக்கும் விக்கிரகத்துடன் தன்னையும் மறந்து ஏதோ பேசிக்கொண்டிருந்தாள். போஜ் ராஜா அவள் இரு கரங்களையும் பிடித்துக் குலுக்கி, "நீ யாருடன் இவ்வளவு நேரம் பேசிக்கொண்டிருந்தாய்?" என்றான், மீரா தன் கணவனைப் பார்த்து புன்னகை செய்து, "இதோ என் கிரிதர கோபாலுடன் தான் பேசிக்கொண்டிருந்தேன்" என்று சொல்லி எழுந்து மறுபடியும் பாடிஆடி மூர்ச்சையாகி விழுந்து விட்டாள். போஜ் ராஜாவுக்கு கோபம் தலைக்கேற வெறி கொண்டவன்போல் அவ்விடத்தைவிட்டகன்றான்.

அக்பரின் அவா

யதாப் பிரகாரம் மீராவின் பாட்டும். ஆட்டமும், பூஜையும் நடந்துகொண்டிருந்தன. மீராவின் பக்தியைப்பற்றியும் அவளது மனமுருகச்செய்யும் பாட்டுகளைக் குறித்தும் நாடெங்கும் பரவிய புகழ்மொழிகள் மொகலாய அரசனான அக்பர் காதிலும் விழுந்தன. அக்பர் பாட்டிலும் தெய்வ பக்தியிலும் பற்றுடையவரானதினால் தன் அரண்மனை பாடகனான தான் ஸேன் என்பவனை அழைத்து மீராவை டில்லிக்கு வரவழைக்கும்படி கட்டளை இட்டார். அது முடியாத காரியம் என்று தெரிந்த உடன் தானே சித்தூர் போவதாய் தீர்மானம் செய்து தான்ஸேனுடன் சித்தூருக்குப் புறப்பட்டார். சித்தூர் டில்லியிலிருந்து வெகு தூரம் இருந்த போதிலும் மீராவின் பக்தி ரஸம் ததும்பும் பாடல்களைக் கேட்கவேண்டும் என்னும் ஆவலானது அக்பரை அப் பிரயாணத்தை மேற்கொள்ள உத்சாகப்படுத்தியது.

சாதுக்களின் கூட்டம்

கோவிலில் மீராவின் பாட்டைக்கேட்கஒவ்வொரு நாளும் சாதுக்களின் கூட்டம் அதிகரித்துக்கொண்டே வந்தது. ஒரு நாள் அக்கூட்டத்தில் இரண்டு பிச்சைக்காரர்களும் மிக்க ஆவலுடனும் பக்தியுடனும் மீராவின் பாட்டைக் கேட்டு ரஸித்துக்கொண்டிருந்தார்கள். அவர்கள் யாராய் இருக்கக்கூடும்? அக்பரும் தான். ஸேனும் தான். பூஜை முடிந்தது. ஒவ்வொருவரும் விடைபெற்றுச் சென்றனர். மீராவும் அரண்மனைக்குத் திரும்பிக்கொண்டிருந்தாள். அக்பர் தன் இடத்திலிருந்து எழுந்து தன் சட்டைப் பையிலிருந்து முத்து ஹாரம் ஒன்றை எடுத்து தன் இரு கரங்களாலும் பிடித்துக்கொண்டு "மீரா, உன் பக்திரஸம் ததும்பும் பாட்டுகளைக் கேட்டு நான் பரவசமடைந்தேன். இந்த அற்பமான சன்மானத்தை நீ ஏற்றுக்கொள்வாயா?" என்றார். மீரா புன்னகை புரிந்து "பிரபு, என் உயிரை நான் கிருஷ்ணபரமாத்மாவுக்கு சமர்ப்பித்துவிட்டேன். என் யசமானனைத்தவிர வேறு ஒருவரிடத்திலிருந்தும் நான் ஒரு பொருளையும் தொடமாட்டேன்: வாங்கவும்" மாட்டேன் என்றாள். "நீ இதை உன் எஜமானன் கிரிதர கோபாலனுக்காக ஏற்றுக்கொள்" என்றார் அக்பர். கிரதர கோபாலனென்றவுடன் மீரா பரவசமடைந்தாள். அவளால் அந்த முத்துமாலையை வாங்காமல் இருக்கமுடியவில்லை. ஆகவே உடனே அவள் வாங்கி தன் எதிரில் இருக்கும் கிரிதர கோபால விக்கிரகத்தின் கழுத்தில் சாத்தினாள். மீண்டும் சந்தோஷத்தினால் ஆடவும் பாடவும் ஆரம்பித்தாள். மறுநாள் இச்செய்தி பரவ சித்தூர் முழுவதும் இதே பேச்சாய் இருந்தது.

சந்தேகமறத் தெரிந்தது

முத்து ஹாரத்தைப்பற்றிய சங்கதி போஜ் ராஜா காதிலும்விழுந்தது. அவன் அம்முத்து ஹாரத்தை பரிசோதித்ததில் அது அக்பருடையதுதான் என்று சந்தேகமில்லாமல் எல்லோருக்கும் தெரிந்து விட்டது. போஜ் ராஜாவின் முகம் சிவந்தது. அவன் வாயிலிருந்துவரும் ஒவ்வொரு வார்த்தையும் ஈட்டியைப் போல் பாய்ந்து கொண்டிருந்தது. மீராவை வெட்டிவிட வேண்டுமென்று அவனுக்குத் தோன்றியது. பிறகு அவள் ஒரு பெண், அதிலும் ராஜபுத்திரப் பெண், அவளைக் கொல்வது தர்மமில்லை என்று எண்ணி மீராவை தண்ணீரில் மூழ்கி தற்கொலை செய்து கொள்ளும்படி உத்தரவிட்டான். உண்மையான ராஜபுத்திர மகளிர் அவசியமானால் தங்கள் உயிரைத் தியாகம் செய்ய ஒரு நாளும் பின் வாங்க மாட்டார்களாகையால் மீராவும் தன் கணவனின் கட்டளையை ஏற்றுக்கொண்டாள். ராணா குடும்பத்திலுள்ள பெரியோர்களையும் தன் கணவனையும் வணங்கி விடைபெற்றுக்கொண்டு பிறகு கோவிலுக்குப் போய் அங்கிருக்கும் ஸாதுக்களிடத்திலும் கிரிதர கோபாலனிடத்திலும் விடை பெற்றுக்கொண்டு ஆடிபாடிக்கொண்டே ஆற்றங்கரையை அடைந்தாள். சிறிது நேரம் தன் இரு கரங்களையும் கூப்பி கிரிதர கோபாலனை மனமார தோத்திரம் செய்து இனி தன் எஜமானனை சொர்க்கத்தில் காண்போம் என்றும், சந்தோஷத்துடன் கடைசியாக விடைபெற்றுக் கொள்ளும் சமயத்தில் யாரோ பின்பக்கத்தில் மீராவை அழுத்த

(28-ம் பக்கம் பார்க்க)

சிறுவர் பகுதி

★

உண்மை ஜயித்தது

★

"ஸ்வாமி"

சந்திரன் உதயபுரி அரசனின் உண்மை வேலைக்காரன். சந்திரன் என்ற அவனுடைய பெயருக்கேற்றாற்போல் சந்திரனைப் போலவே ரொம்ப அழகாகவே விளங்கினான் அவன். சந்திரன் மிகவும் நற்குணம் வாய்ந்தவன். அவன் பிறந்ததிலிருந்து ஒரு பொய்யும் சொல்லி அறியான். அரசனிடம் ரொம்ப உண்மையாக வேலைசெய்தான். அரசனும் அவனை ரொம்ப நேசித்தான். ஆனால் உதயபுரி அரசனின் நந்தவனத்திலுள்ள மயில்களையும், அன்னங்களையும் ஜாக்ரதையாகப் பாதுகாக்க வேண்டியதே அவன் வேலை.

அரசன், சந்திரனுக்கு வேறு நல்ல உயர்ந்த வேலை கொடுக்கவேண்டுமென்று ரொம்ப ஆசைப்பட்டான். ஆனால் சந்திரன் தனக்கு பக்ஷிகளைப் பாதுகாத்துவரும் வேலையே போதுமென்று சொல்லி விடுவான். இவனுடைய உன்னத மனதைக்கண்ட அரசன் ரொம்ப சந்தோஷப்படுவது வழக்கம்.

ஒருநாள் உதயபுரிக்கு பாஞ்சால அரசன் தனது ராஜகுமாரியுடன் விஜயம் செய்திருந்தான். அன்று அரண்மனையில் விருந்தும் கேளிக்கையும் நடைபுடல்பட்டன. அன்று சாயந்திரம் உதயபுரி அரசன் பாஞ்சால அரசனையும், ராஜகுமாரியையும் அழைத்துக்கொண்டு உலாவுவதற்கு நந்தவனத்திற்கு வந்தான். அவர்கள் பல விஷயங்களைப் பற்றி சந்தோஷமாகப் பேசிக்கொண்டு சென்றனர். உதயபுரி அரசன் பாஞ்சால அரசனிடம் தனது வேலைக்காரன் சந்திரனின் குணத்தைப் பற்றியும், அவன் உயிர் போனாலும் ஒரு பொய் கூட பேசமாட்டான் என்றும், தன்னிடத்தில் அவ்வளவு உண்மையாக நடந்து வருவதாகவும் பெருமையுடன் சொல்லிக் கொண்டான்.

அதற்கு பாஞ்சால அரசன் சிரித்துக்கொண்டு சொன்னான்:— "உலகத்தில் மனிதனாகப் பிறந்தவன் ஒருபொய்கூட சொல்லாமல் இருக்கமுடியாது. அவன் என்ன ஹரிச்சந்திரனா பொய் சொல்லாமல் இருக்க? இது எல்லாம் வீண் புரளி," என்றான்.

உதயபுரி அரசன்சந்திரனின் உன்னதகுணத்தைப் பற்றி எவ்வளவு சொல்லியும், பாஞ்சால அரசன் அதை நம்பவேயில்லை! இதைக்கண்டு உதயபுரி அரசனுக்குக் கொஞ்சம் கோபம் கூட வந்தது; அதையும் அடக்கிக் கொண்டு "நீர் வேண்டுமானால் பரீக்ஷை செய்து பாருமே. அப்படி நீர் அவனை ஒரு பொய் சொல்லும்படி செய்துவிட்டால் எனது ராஜ்யத்தில் பாதியை உமக்குக் கொடுத்துவிடுகிறேன்" என்று வீராப்பு பேசினான்.

பாஞ்சாலஅரசன் சிரித்தான். "அப்படி நான் அவனை ஒரு பொய் சொல்லச் செய்யாவிட்டால் என் ராஜ்யத்தில் பாதியைஉமக்குக் கொடுத்துவிடுகிறேன்" என்று பந்தயம் கட்டினான் அவன். இருவரும் ஒப்புக்கொண்டார்கள்.

சந்திரனை ஒரு பொய் புளுகும்படிச்செய்ய யாது செய்யலாம் என்று யோசனை செய்தான் பாஞ்சால அரசன். "ஆம், அவனிடம் மிகுந்த பணத்தைக் கொடுத்து அவன் பாதுகாத்து வரும் மயில்களில் ஒரு அழகிய மயிலை வாங்கிவந்து விடுகிறேன். அத்தனை மயில்களில் அந்த அழகிய மயில் குறைந்ததற்கு அவன் தன் யஜமானனிடம் ஏதாவது ஒரு பொய் புளுகி தான் தீரவேண்டும்!" என்று யோசனைசெய்து கொண்டான் அவன்.

அன்று மாலை அவன் மிகுந்த பணத்தை எடுத்துக்கொண்டு சந்திரன் இருக்குமிடம் சென்றான். சந்திரன் அரசனுக்கு வணக்கம் செய்து அன்புடன் வரவேற்றான்.

"சந்திரா, என் ராஜகுமாரிக்குஒரு மயில் வேண்டியிருக்கிறது. இத்தனை பணத்தையும் எடுத்துக்கொண்டு எனக்கு ஒரு அழகிய மயிலைக் கொடுத்துவிடு" என்று கேட்டான் அரசன்.

"அரசே, என் யஜமானர் மயில் எங்கே என்று கேட்டால் என்ன பதில் சொல்வேன்?" என்றான் சந்திரன்.

"ஏன்? 'மயில் காணமல் போய்விட்டதென்று சொல்லி விடேன். இது தானா பிரமாதம்?" என்றான் அரசன்.

"அரசே, மன்னிக்கவும்! நீங்கள் என்னை பொய் சொல்லாமல் இருக்கும்படித் தடுக்க இருக்க நீங்களே என்னை பொய் சொல்லும்படித் தூண்டலாமா? அது என்னால் ஒருகாலும் முடியாது. உங்களுக்கு மயில் வேண்டுமானால் என் யஜமானரிடமிருந்து உத்தரவு வாங்கி வாருங்கள். எனக்குப் பணமும் வேண்டாம்,ஒன்றும் வேண்டாம்" என்றான். இவனிடம் தனது தந்திரம் செல்லாது என்று அறிந்த அரசன் சென்றுவிட்டான்.

பிறகு அவன் தனது மகளிடம் நடந்தவற்றைச் சொல்லி அவளைப் போய் அந்த மயிலை எப்படியாவது வாங்கி வரும்படி கட்டளையிட்டான். அந்த ராஜகுமாரி மிகவும் அழகானவள். அவளைக் கண்டதும் சந்திரன் உடனே மயிலைக் கொடுத்துவிடுவான். பிறகு அதை மறைக்க தனது யஜமானனிடம் ஏதாவது பொய் புளுகிவிடுவான் என்ற எண்ணம் அவனுக்கு.

ராஜ்குமாரி மிகுந்த பணத்தை எடுத்துக் கொண்டு சந்திரனிடம் சென்றாள். முதலில் சந்திரன் ராஜகுமாரியின் அழகைக் கண்டு பிரமித்துவிட்டான். ராஜகுமாரியும் அப்படியே சந்திரனின் அழகைக் கண்டு திகைத்து விட்டாள்.

"சந்திரா, இங்கே பார்! இத்தனை பணமும் உனக்குத்தான். பிடிவாதம் செய்யாதே. அந்த மயிலை எனக்குக் கொடுத்துவிடு. எனக்கு விளையாட வேண்டும்" என்று கொஞ்சி கொஞ்சி பேசினாள். சந்திரன் திகைத்தான்.

"ராஜகுமாரி, இந்த மயில் என்னுடையதல்ல. எனது யஜமானனுடையது. நான் பிறர் சொத்தை உன்னிடம் எப்படி கொடுக்கமுடியும்? எனக்கு பணத்தின்மேல் ஆசையேயில்லை. என் மயிலாக இருந்தால் உடனே உனக்கு இனாமாகவே கொடுத்துவிடுவேன்" என்றான்.

"உனக்கு பணம் வேண்டாவிட்டால் வேறு எது வேண்டுமானாலும் கேள். கொடுக்கிறேன். ஆனால் அந்த மயிலை மாத்திரம் என்னிடம் கொடுத்துவிடு. அரசரிடம் மயில் காணமல் போனதற்கு ஏதாவது சாக்கு சொல்லிவிடு" என்று சாகஸம் செய்தாள் ராஜகுமாரி.

(28-ம் பக்கம் பார்க்க)

வீதிகளிலும் நம்பிக்கையற்ற கடைகளிலும் வாங்காதீர்கள்.

நஞ்சன்கூடு பல்பொடி

பல வியாதிகளைத் தீர்க்கவும். குணப்படுத்தவும்

ஜீர்சப் கூலாயில்

ஸ்நான தைலம்

கவனிக்க போலிகளால் பற்களுக்கே அபாயம்

சோல் ஏஜண்ட்ஸ்: யுனைடெட் கன்ஸர்ன், 54, பந்தர் தெரு, மதருஸ்

(உதவி வைத்தியர் Dr. P. S. C. மணி) (தபால் மூலம் சிகிச்சை பெறுக)

சமீபத்தில் டில்லியில்காலஞ் சென்ற ஸர் பி. ராகவேந்திரராவ். இவர் இந்திய ஸர்க்கார் பொக்கிஷ இலாகாவில் பெரும் பதவி வஹித்தவர். இந்திய ஸர்க்கார் பொக்கிஷ இலாகா கூட்டுக் காரியதரிசியாக மரண சமயத்தில் வேலை பார்த்தார். இறக்கும்போது வயது 57.

மாகவுமல்லவோ இருக்கும்! அன்பே, நீ என் மனதிலிருந்து போய்விடு. இந்த இடம் உனக்கு ஏற்றதல்ல. என்னுடைய அதிகாரமாக இருந்தால் உன்னை என் ஹிருதயக் கோவிலில் தூங்க வைத்திருப்பேன், ஆனால் நான் கட்டுப்பாடு என்னும் கயிற்றினால் கட்டுண்டு கிடக்கிறேன்? இம்மாதிரியாக நினைத்து நினைத்து உருகியவண்ணம் ஒரு மாதம் கழிந்தது.

விவாக தினம் நெருங்கிக் கொண்டிருந்தது. பிரபாவின் முகம் தினத்திற்கு தினம் வாட ஆரம்பித்தது. அடிக்கடி விரஹ தாபத்தின் உபத்திரவத்தினால் பிரபா குளத்தில் விழுந்து சாந்தி அடைந்துவிடலாம் என்றும் நினைப்பாள், ஆனால் அதே சமயம் தன் தகப்பனருக்குத் தெரிந்தால் அவர் தன் உயிரை மாய்த்துக்கொள்வாரே என்று நினைத்து உருகுவாள். 'இந்த அனாதையை அவர் எவ்வளவு அன்பாகக் காப்பாற்றினார்! ஆகையால் அவருடைய ஜீவியத்தில் நானே அவர் ஐசுவரியம், ஆதலால் நானே அவர் ஜீவியத்திற்கு முதல் ஆதாரம்! நான் என் உயிரையே கொடுத்து அவர் எண்ணங்களை பூர்த்தி செய்ய வேண்டும். என் மனதில் எப்படி இருந்தபோதிலும் அவர் மாத்திரம் வருத்தமடையக் கூடாது' என்பதாகவும் நினைப்பாள்.

பிரபா ஒரு யோகியுடன் வாழ்க்கை நடத்துவது உசிதமல்ல; ஒரு யோகியின் பாட்டைக் கேட்டு அதை மனதில் இருத்திக் கொள்வது அவள் பலஹீனத்தை வெளிக்குக் காட்டுகிறது. ஆனால் ஜமீந்தாரின் தர்பாரில் வித்வான்களுக்கும் போர் வீரர்களுக்கும் அடிமைப் பெண்களுக்குமா குறைவு? அங்கே இரவு பகல் எந்நேரத்திலும் பாட்டும் கூத்துமாக இருக்கும். அது அந்த கலைக்கே இருப்பிடமாக இருந்தது. அங்கு வரும் வித்வான்களுக்கு ரத்னம் முதலிய விலை மதிப்பில்லாத வஸ்துக்களை வெகுமதி கொடுப்பது!

பிரபா அதே இடத்தில் சிறு வயதுமுதல் வளர்ந்துவந்தாள், அவள் அழகை அந்தக் குளத்தின் ஜலமும் தென்றல் காற்றும் பன்மடங்கு அதிகரிக்கச் செய்தது. அவளது மனோ வேதனைக்கும் இதே முகாரவிந்தமென்றால் அதில் என்ன ஆச்சரியமிருக்கிறது?

3

பிரபாவுக்கும் ராஜகுமாரன் ஹரிசந்திரனுக்கும் வெகு விமரிசையாக கலியாணம் நடந்தேறியது. கணவனுடன் செல்லும் சமயம் தோழி உமாவை விட்டுப் பிரிய மனமில்லாமல் வருத்தப்பட்டாள். ஜமீந்தார் அவளுக்கு தேறுதல் சொல்லி விடைகொடுத்தனுப்பினர்.

நெளகட் பெரிய சமஸ்தானம். அதற்கு ஹரிசந்திரன் ஒரு திலகம் போல் விளங்கினன். பிரபாவுக்காக 'ஆனந்த பவனம்' என்னும் சித்திர அரண்மனையையும் அவள் சேவைக்காக அநேக தாதிகளையும் நியமித்தான் ராஜகுமாரன்.

தாதிகள் பிரபாவை நன்கு அலங்கரித்திருந்தார்கள், ராஜகுமாரன் பிரபாவின் சௌந்தரியத்தில் ஈடுபட்டு உன்மத்தனுகியிருந்தான். வெகு சந்தோஷமாக அன்று சயன அறைக்கு வந்தான், பிரபா அவனைக் கண்டு எழுந்து நின்று தலை குனிந்த வண்ணம் நமஸ்காரம் செய்தாள். 'அவளுடைய கண்களிலிருந்து கண்ணீர் பெருகி நதிபோல் ஓடியது. ராஜகுமாரன் அன்பின் மிகுதியால் முக்காட்டை விலக்கினன். அவ்வளவுதான்!

விளக்கு இருந்தது, ஆனால் அணைந்திருந்தது! பூவிருந்தது வாடி வதங்கி! அன்று முதல் இதேபோல் ராஜகுமாரனின் மனமும் இருந்தது.

ஒவ்வொரு க்ஷணமும் பிரபாவை நினைத்து நினைத்து வாடிய மல்லிகைப் பூவைப்போல ராஜ்ய விஷயங்களைக் கவனிக்காமலும் வெளியில் வேட்டைக்குப் போகாமலும் இருந்தான்.

கந்தர்வகானம் என்பார்களே அதேபோல் இருந்த குரலும், ரோஜா புஷ்பத்தை ஒத்த அவள் முகச்சோபையும் அவள் கவலையால் எங்கோ சென்று மறைந்தன. அவ்வளவு தான்! பிரேமையில் ஈடுபட்ட ராஜகுமாரன் லாகிரியை உண்டவன் போல பாலில் வெண்ணெய் இருக்கிறது என்பது போல பிரபாவின் மனதில் ஏதோ ஒன்று இருக்கிறது என்று எண்ணினன்.

ராஜகுமாரனின் உள்ளத்தைக் கவர்ச்சிசெய்த பிரபாவின்மேல் உள்ள அன்பின் பயனால் அவளது செல்வாக்கு குறையவில்லை. பிரேமை என்னும் தீபம் இருள் சூழ்ந்த ஹிருதயத்தையும் ஒளியுறச் செய்து விடும்!

உண்மையானதும் கல்மஷமில்லாததுமான ராஜகுமாரனின் காதலுக்கு தான் யோக்கியதை யற்றவள் என்றும், அவனுடைய உண்மைக் காதலுக்குப் பதிலாக தன் பாப மூட்டையை அவன் மீது சுமத்த மனமின்றி பிரபா தன் செயல்களை நினைத்து வெட்கப்பட்டாள்.

கணவன் அருகில் இருக்கும் தருணத்தில், புஷ்பக்கொடி எப்படி தனக்கு ஆதரவாகப் பக்கத்திலிருப்பதைப்பற்றிக்கொள்கிறதோ, அதே போல அவனை மார்புடன் அணைக்கச்செய்து காதல் மயமானபேச்சுகளைப்பேசுவாள். ராஜ குமாரனுடன் உல்லாசமாக நந்தவனத்தில் காற்று வாங்கச் செல்வாள். அவனுக்காகப் பூக்களை கொய்து மாலை தொடுத்து கழுத்தில் போட்டு "அன்பே! இந்தப் பூவை வாட வைக்கக்கூடாது. எப்பொழுதும் அப்பொழுது கொய்ததுபோல வைத்திருக்கவேண்டும்" என்பாள். பௌர்ணமி தினத்தில் படகில் ராஜகுமாரனுடன் உல்லாசமாகச்செல்வாள். காதல் சம்பந்தமாகப் பல பாட்டுகள் பாடி அவனைச் சந்தோஷப் படுத்துவாள். அவன் பக்கத்தில் இருக்கும் சமயம் ஆடுவாள்; பாடுவாள். ஆனால் அவள் மட்டும் தனியாக இருக்கும் சமயம் ஸதிக் குளத்தின் நீலவர்ண ஜலமும், அதில் பூத்திருக்கும் தாமரை மலரும் அதன் பக்கத்திலிருக்கும் மகிழம்பூ மரமும் அவள் கண்முன் வந்து நிற்பதுபோல தோன்றும். அச்சமயம் அவள் கண்களுக்கெதிரில் உமா புன்சிரிப்பாகச் சிரித்துக் கொண்டு அன்னம்போல மெதுவாக நடந்து வருவதுபோலும், அதே சமயம் அந்த இளம் யோகியின் மதுரமான கானம் அவள் காதில் வண்டுபோல் ரீங்காரம் செய்வது போலும் தோன்றும்.

அம்மாதிரி மனக்கலக்கம் ஏற்படும் சமயங்களில் ஒரு பெருமூச்சு விட்டு விட்டு அறையை விடுத்து வெளியே வந்து, கூண்டில் அடைபட்டிருக்கும் பட்சிகளின் இனிமையான குரல்களை கேட்டுச்சாந்த மடைவாள். அந்தச் சம்பவங்கள் அப்பொழுது பகல் கனவு போல் மறைந்து விடும்.

4

இதே போல் சில மாதங்கள் கழிந்தன. ஒரு நாள் ராஜகுமாரன் அவளை தன் அரண்மனையிலுள்ள சித்திரசாலைக்குக் கூப்பிட்டுக் கொண்டு சென்றான்; முதல் பாகத்தில் சரித்திர சம்பந்தப் பட்ட சித்திரங்களே இருந்தன. முக்கியமாக சித்திரசாலையினுள் புகுந்ததும் எதிரில் வீரப் பிரதாபன் ராணா பிரதாப் சிங்கின் படம் தென் பட்டது. ராணாவின் முகத்தில் 'வீரன்' என்று காண்பிக்கும் சின்னங்கள் தென் பட்டன. வலது பக்கத்தில் பக்த சிரோன்மணி ஜக்மல் துர்காதாஸ் மற்றும் பலருடைய படங்களும் இடது புறம் உதார குணம் பொருந்திய வகையில் பீம சிங் உட்கார்ந்திருப்பது போல் உள்ள படமும், ராணா பிரதாப் சிங்கின் படத்தெதிரில் மகாராஷ்டிர வீர புருஷன் சிவாஜியின் படமும் இருந்தன. மற்றொரு அறையில் புகுந்ததும் அதில் ஸ்ரீராமசந்திரனின் வீரச் செயல்கள் நிறைந்த படமும் கிருஷ்ண பரமாத்மாவின் லீலாமிருதமான படங்களுமிருந்தன. பிரபா ஸ்ரீ கிருஷ்ணனின் படத்தருகில் சென்று தலை சாய்த்துக் கை கூப்பி நின்று சற்று நேரம் மனதில் தியானம் செய்தாள். அந்த சமயம் அவள் ஒரே பக்தியில் ஈடுபட்டவளாய்க் கண்களிலிருந்து ஆனந்த பாஷ்பத்தை வெளிக்கிளப்பினாள். அவளுடைய மனதில் அச் சமயம் தன் கல்மஷமான பிரேமையை நினைத்து பயம் ஏற்படலாயிற்று; இவைகளெல்லாம் சித்திரங்களல்ல; அவர்களின் பிரதி பிம்பமே என்று அவளுக்குத் தோன்றியது. 'அவர்களுடைய சாயையால் தான் நமது தேசத்தின் சரித்திரக் கதைகள் உற்பத்தியாயின. அவர்கள் தான் பாரத தேசத்தின் ரத்தினங்கள்' என்று சொல்லும்படியான அந்தச் சித்திரங்களின் முன்பு அவளால் சங்கோசப் படாமல் இருக்க முடியவில்லை!

எதிரிலிருந்த மற்றொரு பாகத்திற்கு இருவரும் சென்றார்கள். அங்கு பக்தர் கபீர். பக்தர் ராமதாஸ் இருவர் படங்களும் எதிரில் இருந்தன. மறு பக்கத்தில் குரு கோவிந்தர் படமும் இருந்தது; வேதாந்தத்தை உலகெங்கும் பரவச் செய்த ஸ்வாமி விவேகானந்தர் படமும் ஸ்வாமி ராம தீர்த்தரின் படமும் இருந்தன. வேலைப்பாடுகள் மிகவும் மெச்சத்தகுந்தவையாகக்காணப்பட்டன. பிரபா அவர்களுக்கு நமஸ்காரம் செய்து கொண்டு வந்தாள். அவளால் அவர்களுடைய சித்திரங்கள் முன்பு தலையை நிமிரவும் முடியவில்லை.

இதன் பிறகு வேறு அறைக்குச் சென்றார்கள். புராண சிரேஷ்டரான வேத வியாஸர், வால்மீகி, சிருங்காரரஸகவிதா ரத்னம் காளிதாஸன் இடது புறம் பவபூதி—மற்றும் பலருடைய படங்களும் தென்பட்டன.

தென் புறச் சுவற்றில் ராஷ்டிரபாஷா வித்வான்களான மனக்கவி ஸுர்தாஸ், ஜோதிமயமாக விளங்கின துளஸிதாஸ் ஸ்வயகவி கேசவ்—இது போல் பலகவிகளுடைய சித்திரங்களும் இருந்தன. பிரபாவுக்கு ஸுர்தாஸின் மீது அபாரபக்தி. அவள் ஸுர்தாஸின் படத்தருகில் சென்று அவருடைய பாதத்தருகில் பார்வையைச் செலுத்தினாள். திடீரென்று அடியிலிருந்த ஒரு சிறிய படத்தைப் பார்த்து பிரமித்து நின்றுவிட்டாள். அது தான் பிரபாவின் மனதை இது காறும் கொள்ளை கொண்ட யோகியின் படம்! அதை தீன் மனக்கண்ணால் சற்று உற்றுப் பார்த்தாள்.

ராஜகுமாரன் கொஞ்சம் புன்சிரிப்புடன் "இவரை எங்காகிலும் பார்த்திருக்கிறாயா?" என்று கேட்டான்.

இந்த எதிர் பாராத கேள்வியினால் பிரபாவுக்கு மனம் படபடத்தது. வேடனைக் கண்டு மிரளும் பட்சியைப் போல அவள் மிரள மிரள விழித்தாள். அவரே என்னை 'நீ ஏங்காவது பார்த்திருக்கிறாயா?' என்று கேட்டாரே, அது எதனால்? அதற்கு என்ன பதில் சொல்வது? ஹே பரமாத்மா! என்னைக் காப்பது உன் கடமை! என்ன பதில் சொல்வேன்? என்று அவள் தவித்தாள். முகம் வெளுத்து விட்டது. தலையை கீழே சாய்த்த வண்ணம் மெலிந்த குரலில் "ஆமாம்! எங்கோ பார்த்த ஞாபகமாக இருக்கிறது" என்றாள்.

நமது தொடர் கதை

ஸ்ரீகாந்தன்

சரத்சந்திரர் எழுதியது.

(ஸ்ரீ.கு.ப.ராஜகோபாலன் மொழிபெயர்த்தது)

முன் கதைச் சுருக்கம்

சிறுபிராயத்தில் இந்திரநாதனுடன் சேர்ந்து ஸ்ரீ காந்தன் தனது இளமைப் பருவத்தை மிகவும் துணிகாமாகவும் நிர்ப்பயமாகவும் கழித்ததுடன் சமூகத்தை விரோதிக்கும் விதமாகவும் நடந்து கொள்கிறான். இதற்கப்புறம் ஸ்ரீகாந்தன் ஓர் நாள் தனது பழைய நண்பனான ஜமீன்தாரின் வீட்டில் பியாரியைச் சந்திக்கிறான். பியாரிக்கு ஸ்ரீ காந்தனிடம் விசேஷ ப்ரீதி: பிறகு அவன் வேறு இடம் கிளம்பி வழியில் ஒரு சந்யாஸியை அடைந்து சில காலம் தங்கி விட்டு அவரிடமிருந்து பிரிகிறான். ஸ்ரீ காந்தனுக்கு தேக அசௌக்யம் ஏற்படுகிறது. இந்தச் செய்தியை யறிந்து பியாரி அவனது உதவிக்கு வருகிறாள். பியாரி வீட்டிற்குப் போன அவன் அங்கு குதூஹலத்தைப் பார்க்கிறான். பிறகு அவன் பியாரிடம் தன் விவாகம், ரங்கூன் பிரயாணம் இவற்றைப் பற்றி சம்பாஷித்து விடைபெற்று கப்பலேறிக் கிளம்புகிறான். கப்பலில் அவனுக்குப் பலருடன் பழக்க மேற்படுகிறது. ரங்கூன் போய்ச் சேர்ந்ததும் அவனுக்கு ஏற்படும் அனுபவம் விநோதமாக இருக்கிறது. அங்கு அவன் உத்யோகத்திற்காக அலைந்த பின் அதை சம்பாதிக்கிறான். இதனுடன் தான் கப்பலில் சந்தித்த அபயாவின் புருஷனைக் கண்டு பிடித்து, அவன் அபயாவை ஏற்கும்படி வழி தேடுகிறான். பிறகு அபயாவை ஸ்ரீகாந்தன் சந்தித்தபோது அவள் அவனிடம் பல சீரிய கருத்துகளை வெளியிடுகிறாள். ராஜலக்ஷ்மியிடமிருந்து ஒரு கடிதம் வர ஸ்ரீகாந்தன் ரங்கூனைவிட்டு புறப்பட்டு அவளிடமே வந்து சேருகிறான். சில தினங்களுக்கப்பால் இருவரும் யாத்திரை கிளம்புகின்றனர். ஸ்ரீகாந்தன் மனோநிலை வேறுபடுகிறது. ஸ்ரீகாந்தன் தனியே புறப்பட்டுப் போய், ஊரில் தேக அசௌக்கியமடைகிறான். அந்நிலையில் அவன் ராஜலக்ஷ்மிக்குக் கடிதம் எழுத, அவள் அவனுக்கு சகாயம் புரிய உடனே அங்கு வந்து சேருகிறாள். ராஜலக்ஷ்மி அவனிடம் காட்டும் ப்ரீதி மிகவும் அபாரமானது. ஒருநாள் தன்னையே தான் அவனுக்கு அளித்து விட்டிருப்பதாகவும் அவள் சொல்கிறாள். இருவரும் இதற்கப்புறம் கங்காமாடி கிராமத்திற்குப் போக, வழியில் ஒரு சாதுவை சந்தித்து அவரையும் தங்களுடன் அழைத்துப்போகின்றனர். பிறகு அவர் பிரிந்து போகிறார் பின்பு இவர்கள் தங்கள் கிராமத்திற்கு வருகின்றனர். அங்கு ஒரு ஏழைக் குடும்பத்தில் விவாகம் நடக்கும் முறையும் குசாரி மஹாசயர் மனைவி கூறிய விருத்தாந்தமும் விநோதமாயிருக்கின்றன. மேலும் சில பரிச்சயங்கள் இவர்களுக்கு ஏற்படுகின்றன.

10

ஒரு வேளை மனிதர்களுக்கு பரலோக சிந்தை அதிகமாகி விட்டால், இகலோகத்திலிருக்கிறவர்களைப்பற்றி கவலைப்பட முடியாது போலிருக்கிறது. இல்லாவிட்டால் ராஜலக்ஷ்மி என்னுடைய சாப்பாட்டு விவகாரங்களைப்பற்றிய கவலையை விட்டு விட்டாள். என்ற இப்பேர்ப்பட்ட ஆச்சரியகரமான சம்பவம் வாழ்க்கையில் நடக்கக்கூடுமா? இந்த கங்காமாடிக்கு நாங்கள் வந்த இத்தனை நாட்களுக்குள் அவள் திடீரென்று என்னை விட்டுப் பிரிந்து எவ்வளவு தூரம் போய்விட்டாள்! இப்பொழுதெல்லாம் பிராமண சமையல்காரன்தான் சாப்பாட்டைக் கவனிப்பது, மற்ற சௌகரியங்களைக் கவனித்துக்கொள்வது ரதன். ஒரு விஷயத்தில் இது அவ்வளவு கஷ்டமான ஏற்பாடாகவுமிருக்கவில்லை. வியாதி உடலுடன் நான் அதிகமாகச் சாப்பிடாவிட்டால் அதனாலொன்றும் அசௌகரியமில்லை. எனக்கு எப்பொழுது இஷ்டமோ, எப்படி இஷ்டமோ அவ்விதம் சாப்பிடுகிறேன். ரதனும், சமையல்காரனும் அடிக்கடி வற்புறுத்துவதால் மட்டும் நான் அதிகம் சாப்பிட்டுவிடுவதில்லை. அந்த பாழாய்ப்போன சமையல்காரன் தன்னுடைய சமையலில் தான் ஏதோ பிசகு என்று நினைத்துக் கொள்வான்.

ஒருவிதமாக அவர்களை திருப்தி செய்துவிட்டு படுக்கையில் போய் உட்கார்ந்து கொண்டேன். எதிரே அதே திறந்த ஜன்னல் அதே வெப்பமான காற்று. மத்தியானம் பூராவும் அந்த மரம் மட்டையே இல்லாத சுஷ்கப்பிரதேசத்தைப் பார்த்துக்கொண்டு பொழுதுபோக்கினபோது எங்களிருவருடைய சம்பந்தத்தைப்பற்றிய நினைவு என் மனதிற்கு வந்தது. அவள் இன்றும் என்னிடம் அன்பு கொண்டுதானிருக்கிறாள். இந்த லோகத்தில் அவளுக்கு நான் ஒருவன்தான். பரலோகத்திலோ நான் அவளுக்கு முற்றிலும் வேறு மனிதன். அவளுடைய சிஷ்டாசார வாழ்க்கையில் நான் பங்கெடுத்துக் கொள்ளவில்லை. அங்கே அவள் மீது தாவா செய்வதற்கு என்னிடம் ஒருவிதமான ஆதார பத்திரமும் கிடையாது. ஹிந்துப்பெண்கள் இந்த விஷயத்தை மறக்கமாட்டார்கள். இந்த வாழ்க்கையில் மட்டுமல்ல; பரலோகத்திலும்கூட துணையாக இருப்பது என்னிடம் பற்றாக இருப்பது அல்ல. இந்த சந்தேகம் அவளுடைய மனதில் நிச்சயமாக உதித்திருக்க வேண்டும்.

இந்த மாதிரி அவள் இருந்ததால் என்னுடைய நாட்களும் இந்த மாதிரி கழிந்தன. வேலையில்லாமல் ஒருவிதமான நோக்கமுமில்லாமல் காலை முதல் மாலை வரை ஏங்கி மலினமடைந்தேன். என்னுடைய ஆயுளை என் கைவசமாக்கிக் கொண்டு உயிரை விட்டு விடுவதைத் தவிர வாழ்க்கையில் எனக்கு வேறு வழியில்லை. ரதன் வந்து நடுநடுவே புகையிலையைக் கொடுத்து விட்டுப் போனான். நேரந்தவறாமல் வாய்பேசாமல் தேனீரும்கொண்டு வந்துகொடுத்துப் போனான். ஆனால் அவனுடைய முகத்தைப் பார்த்தால் அவன் என்னிடம் எவ்வளவு அனுதாபம் காட்ட ஆரம்பித்தான் என்பது தெரிந்தது. சில சமயம் திடீரென்று உள்ளே வந்து "பாபு, ஜன்னலை சாத்திவிடுங்கள், 'வெக்கை' யடிக்கும்" என்று சொல்வான். "இருந்து விட்டுப் போகட்டும்" என்பேன் நான். எவ்வளவு பேர் அந்த வெக்கையை உடல் மீது தாங்கிச் செல்கிறார்கள், ஒரு வேளை என்னுடைய பிள்ளைப் பிராயத்திய நண்பன் இந்திரநாதன் இன்னும் உயிரோடிருக்கலாம், இதே வெக்கைக் கானல் அவன் பேரிலும் தான் தாக்கும். ஒரு வேளை அவனும் பல நாளைய சிறு பிள்ளை. சுக, துக்கங்களை நினைத்துப் பார்த்துக் கொண்டிருக்கலாம். எங்களிருவருடைய அன்புக்கும் பாத்திரமான அன்னதா திதி-ஒருவேளை அவளுடைய எல்லா துக்கங்களும் இத்தனை நாட்களுக்குள் முடிவடைந்திருக்கலாம். எப்படியோ அங்கே அருகிலேயே பர்மா தேசம் இருந்தது போல் தோன்றிற்று, காற்றுக்குத் தடையுண்டா என்ன? அபயாவினுடைய தேகத்தின் மேல் பட்டு அது கடல் கடந்து வந்து என்னை அடையவில்லையென்று யார் சொல்லக் கூடும்? அவள் என்னுடைய மனதை விட்டு அகல முடியாது என்று அவளே சொன்னது என் நினைவுக்கு வந்தது. ரோகிணி தாதா ஒரு வேளை இப்பொழுது வேலைக்குப் போயிருப்பார். அபயா அந்த வீட்டு வாசற கதவைத் தாளிட்டுக் கொண்டு கூடத்தில் உட்கார்ந்து தையல் வேலையில் ஈடுபட்டிருப்பாள். நாள் பூராவும் எனனைப் போல் அவள் தூங்க முடியாது. இத்தனை நாட்களுக்கு மடியில் ஒரு சின்னக் குழந்தைகூட இருக்கலாம்.—

இந்த மாதிரி எண்ணங்கள் உள்ளத்தில் சென்று வெள்ளம் கரையை உடைப்பது போல் உடைத்தன. யுக யுகாந்தரமாக சேகரித்த ஸம்ஸ்காரங்கள், தலைமுறை தத்துவமாக நல்லது கெட்டதுகளை பற்றிய நமது விதிகள், நமது ரத்தத்தில் ஊறிப்போயி



ருக்கின்றன. என்னுடைய ரத்தத்திலும்தான். ஆனால் எப்படியோ உள்ளன்புடன் தீர்க்காயுஸாக இரு என்று அவளுக்கு ஆசீர்வாதம் செய்தேன்.

தொண்டு செய்வதிலேயே கண்ணுடைய அபயாவின் சாந்தமான முகத்தோற்றம் என் மனக்கண் முன்தோன்றுகிறது. அவள் பக்கத்தில் களங்கமற்றுத் தூங்கும் குழந்தை அப்பொழுது தான் உதித்த தாமரை மலர் போல சோபையுடன் துடித்துக் கொண்டிருக்கிறது, மணத்துடனும், மறுவுடனும் பிரகாசித்துக் கொண்டிருக்கிறது. அப்பேர்ப்பட்ட அமுத வஸ்துவுக்கு வாழ்க்கையில் உண்மையிலேயே இடமில்லையா? உபயோகமில்லையா? மனித சமூகத்தில் குழந்தைக்கு மரியாதையில்லை, வரவேற்பில்லை—இடமில்லையென்பதற்காக இதைக் கடுமையாக அப்புறப்படுத்திவிடுவதா? மங்களகரமான ஒரு தனத்தை காலாந்தரத்திற்கும் துககத்தை யளிக்கும் நரகத்தில் வீழ்த்துவதைத் தவிர மனித ஹ்ருதயத்தில் வேறு மேன்மையான தர்மமில்லையா என்ன!

அபயாவினுடைய குணம் எனக்கு நன்ருகத் தெரியும். இந்தப் பொறுப்பை ஏற்க அவள் தன் வாழ்க்கையிலிருந்து எவ்வளவைத் தியாகம் செய்திருக்கிருள் என்பது என்னைத் தவிர வேறு யாருக்கும் தெரியாது. ஈரமற்ற அசிரத்தையாலும், கேலியாலும், அவமானமேற்படுத்துவதாலும் மட்டும் வாழ்க்கையினுடைய எல்லா பிரச்னைகளும் தீர்ந்து போய் விடாது. சிற்றின்பம் கேவலம் தேகசம்பந்தமான வெட்கப் படக்கூடிய போகம். ஆமாம், அதனுல்தான் அபயாவையும் திக்காரம் செய்யவேண்டியிருக்கிறது.

வெளியே இருந்து வந்த வெப்பமான காற்று நிமிஷத்தில் என் கண்களிலிருந்து பெருகிய கண்ணீரை உலர்த்தி விட்டது. பர்மாவிலிருந்து வந்த நினைவுகள் மனதிற்கு வந்தன. அந்த சமயம் ரங்கூனில் மரண பயத்தால் குழந்தை குட்டிகள், தாய் தந்தையர், கூடப் பிறந்தவர்கள்கூட ஒருவரையொருவர் கவனிக்கவில்லை. மரண உத்ஸவத்தின் மகத்தான விளையாட்டு நகரத்தில் அல்லோல கல்லோலப்பட்டுக் கொண்டிருந்தது. அந்த சமயத்தில்கூட நான் மரண தூதனுடைய கைவசப்பட்டு அவள் வீட்டு வாயிலை அடைந்த பொழுது அவள் புதிதாக குடித்தனம் வைத்திருக்கிருேம் என்று ஒரு கணம்கூடத் தயங்கவில்லை. சில விஷயம் நானிந்தப் புத்தகத்தில் சில வரிகளில் எழுதி அறிவித்துவிடும்படியானதல்ல. அது எப்பேர்ப்பட்டது என்பது எனக்குத் தெரியும், எத்தனை பேருடனே நான் பழகிப் பார்த்திருக்கிறேன். அபயாவுக்கு ஒன்றுமே கடினமானதல்ல. அவளுக்கு மரணம் கூட துச்சமான விஷயம். பசி, யௌவன தாகம் இவைகூட அவளிடம் பதில் பெறுவதில்லை.

நாள் பூராவும் தனியாக இப்படிப் பொழுது போக்கிவிட்டு, பொழுது விடிந்ததும் கொஞ்சம் வெளியே புறப்பட்டேன். எழெட்டு நாட்களாகவே இந்த மாதிரி செய்துகொண்டிருந்தேன். புழுதி நிறைந்த வழியாக நாங்கள் கங்கா மாடிக்குவந்தோமல்லவா? அதே வழியைப் பிடித்துக்கொண்டு சில நாட்கள் வெகு தூரம் போனேம். ஏதோ யோசனையிலாழ்ந்து இன்றும் அதேமாதிரி போனேன். திடீரென்று எதிரே தூசியைக் கிளப்பிக்கொண்டு வெகு வேகமாக குதிரையொன்று வந்தது. சற்று திடுக்கிட்டு நான் பாதையை விட்டு விலகி நின்றேன். குதிரை மேலிருந்தவன் சிறிது தூரம் போன பிறகு குதிரையை நிறுத்தித் திரும்பிவந்து, என் எதிரே நின்றுகொண்டு, "உங்கள் பேர் ஸ்ரீகாந்தபாபு அல்லவா?" என்னை அடையாளம் தெரிகிறதா?" என்று கேட்டான்.

"என் பெயர் அதுதான். ஆனால் நீங்கள் யாரென்று தெரியவில்லை" என்றேன் நான்.

அவன் குதிரையை விட்டுக் கீழே இறங்கினன். கிழிந்தும், அழுக்கடைந்தும் போயிருந்த அவன் உடை, ஒரு பெரிய மனிதனுடையதாக இருந்தது. தலையில் பிய்ந்துபோன தொப்பி ஒன்று இருந்தது. அதைக் கையிலெடுத்துக்கொண்டு அவன் "நான் ஸதீச பரத்வாஜன். மூன்ருவது கிளாசில் பரீட்சை தேருமல் போனவுடன் நான் ஸர்வே ஸ்கூலில் படிக்கப் போனது நினைவில்லையா?" என்ருன்.

நினைவு வந்தது. உடனே நான் சந்தோஷத்துடன் "அப்படிச் சொல்! நீ இந்த துரை அலங்காரத்துடன் எங்கே போகிருய்?" என்று கேட்டேன்.

அவன் சிரித்துக்கொண்டு "இந்த வேஷம் வேண்டியிருக்கிறதப்பா! ரயில்வே கன்ஸ்டரக்ஷனில் ஸப் ஓவர்ஸியராக வேலை பார்க்கிறேன், கூலிகளை மிரட்டிக்கொண்டே தான் காலம்கழிக்கிறேன். ஹாட்டும், கோட்டுமில்லாவிட்டால் நடக்குமா? இல்லாவிட்டால் அவர்களே என்னை அடித்து விடுவார்கள். ஸோபல்புரத்தில் ஒரு அவசரமான காரியம். அங்கிருந்து தான் வருகிறேன். ஒரு மைல் தூரத்தில் தான் எங்கள் காம்ப் ஸா-யிக்யா-விலிருந்து இந்தப் புதுலயன் போடுகிறேம். என்னேடு அங்கே வாயேன்; டீ சாப்பிட்டு விட்டு வரலாம்" என்ருன்.

நான் அவன் வேண்டுகோளை மறுத்து விட்டு "இன்று முடியாது. இன்னெரு நாள் சமயம் வாய்த்தால் வருகிறேன்" என்றேன்.

அவன் உடனே பல விஷயங்களைப்பற்றி என்னிடம் கேள்வி கேட்க ஆரம்பித்தான். உடம்பு எப்படி இருக்கிறது. எங்கே இருக்கிறேன். இந்த இடத்திற்கு ஏன் வந்தேன். குழந்தை குட்டிகள் எவ்வளவு, அவர்கள் யார் யார் எவ்வித மிருக்கிருர்கள்—இந்த மாதிரியாக.

நான் பதிலுக்கு உடம்பு சரியாயில்லையென்றும், கங்கா மாடியிலிருக்கிறேனென்றும், இங்கே வந்ததற்குக் காரணம் பெரிய சிக்கலான விஷயமென்றும், குழந்தை குட்டிகள் கிடையாது, ஆகையால் அவர்களில் யார் எங்கே இருக்கிருர்களென்ற கேள்வி அநாவசியமென்றும் சொன்னேன்.

அவன் ஒரு தமாஷ் பேர் வழி, என்னுடைய பதில்களிலிருந்து அவனுக்கு ஒன்றும் விளங்காவிட்டாலும், பிறருடைய விஷயம் பூராவையும் எப்படியாவது அறிந்து விட வேண்டுமென்ற பிடிவாதம் அவனிடம் கிடையாது. அவன் தன்னுடைய சமாசாரத்தை சொல்ல ஆரம்பித்தான். ஜாகை, ஆரோக்ய ஸ்தலம், காய்கறி யெல்லாம் கிடைக்கிறது, பாலும், மீனும் முயற்சி செய்தால் கிடைக்கும். ஆனல் ஜன சஞ்சாரம் கிடையாது. பேச்சுத் துணைக்கு ஆள் கிடையாது. ஆனல் அதனுல் ஒன்றும் அதிக சிரமமில்லை. ஏனென்ருல் நன்ருக இருட்டின பிறகு தூங்கலாம்—பொழுது போய் விடும். வெள்ளைக்காரர்கள் எப்படி இருந்தாலும், வங்காளியர் ரொம்ப நல்ல மனிதர்கள். தற்காலிகமாக கள்ளுக்கடை ஒன்று ஏற்படுத்தப்பட்டிருக்கிறது—இந்த மாதிரியாகப் பேசிக் கொண்டு நடந்து வந்தான். அடிக்கடி நான் அவனுடைய காம்புக்கு வரவேண்டுமென்று வற்புறுத்தி, தானும் உத்யோக ஜோலியாக, போடா மாடிக்குப் போய் திரும்பும் வழியில் நிச்சயம கங்கா மாடிக்கு வருவதாகச் சொன்னன்.

அன்று நான் வீடு திரும்பும் பொழுது இருட்டி விட்டது. சமையல்காரன் வந்து சாப்பாடு தயாராக இருப்பதாகச் சொன்னன். கைகால் அலம்பிக்கொண்டு சட்டையைக் கழற்றி விட்டு சாப்பிட உட்கார்ந்தேன். அப்பொழுது ராஜலக்ஷ்மியின் குரல் காதில் விழுந்தது. அவள் அறையில் நுழைந்து வாயிற்படியருகில் உட்கார்ந்து கொண்டு சிரித்த வண்ணம் "நீ எவ்விதத்திலும் கோபித்துக் கொள்ளவே கூடாது என்று முன்னமேயே சொல்லி இருக்கிறேனே," என்ருள்.

"இல்லையே, எனக்கொன்றும் கோபமில்லையே?"

"பின் நான் அப்படி கேள்விப் பட்டேனே?"

"முக்ய விஷயமானல், என்ன விதமாக என்று கேள்விப்பட்டதைச் சொல்லு,"

ராஜலக்ஷ்மியினுடைய சிரித்த முகம் உடனே கவலை கொண்டதாக மாறிற்று."

"நல்லது"-என்று அவள் ஆரம்பித்தவுடனேயே அவளுடைய பார்வை திடீரென்று என் கலத்தின் மீது விழுந்தது,

"என்ன, நீ சாப்பாடா சாப்பிடுகிருய்? இரவில் நீ சாப்பிடுவது கொஞ்சமும் சகிக்கவில்லையே. உனக்கு சாதமே செல்லவில்லையா? உன் உடம்பை சொஸ்தப்படுத்த விடமாட்டாயா நீ?" என்ருள்.

எனக்கு சாதம் நன்ருகப் சென்றுகொண்டு தானிருந்தது. அதை அவளிடம் சொல்லி என்ன பிரயோஜனம்?

ராஜலக்ஷ்மி உரத்த குரலில் "மஹராஜ்" என்று கூப்பிட்டாள். சமையல் காரன் வாசற்படியண்டை வந்து நின்றவுடனேயே அவள் என் கலத்தைச் சுட்டிககாட்டி, பின்னும் கடுமையான குரலில் "இதென்ன இது? ஆயிரம் தடவை உனக்குச் சொல்லி இருக்கிறேனல்லவா? ராத்திரி வேளையில் பாபுவுக்கு சாதம் போடவேண்டாமென்று உனக்கு எவ்வளவு தரம் சொல்லி இருக்கிறேன். உனக்கு ஒரு மாத சம்பளப் பிடித்தம் செய்து விட்டேன் போ" என்ருள்.

ஆனல் சம்பளப் பிடித்தம் என்னஎன்பது எல்லா வேலைக்காரர்களுக்கும் தெரியும். சமையல்காரன் கொஞ்சம் மனஸ்தாபத்துடன் "வீட்டில் நெய் இல்லையம்மா, நான் என்ன செய்வது?" என்ருன்.

"ஏன் இல்லை? அதைச் சொல்லு—"

"இரண்டு மூன்று தடவை நெய் இல்லையென்று சொல்லியனுப்பினேன். நீங்கள் அனுப்பவில்லை யென்ருல் நானென்ன செய்வது?"

சாதாரணமாக வீட்டுச் செலவுக்கு வேண்டிய நெய் அங்கேயே கிடைக்கும். ஆனல் எனக்காக நெய் ஸாயிங்கியாவுக்கு அடுத்த ஒரு கிராமத்திலிருந்து வந்தது. அதை ஆளனுப்பிவரவழைக்க வேண்டும. விஷயமென்னவென்ருல் ராஜலக்ஷ்மி வேறு முயற்சிகளில் ஈடுபட்டிருந்ததால் நெய் இல்லாத விஷயம் அவள் காதில்படவில்லை, அல்லது பட்டு அவள் மறந்துபோய்விட்டாள்.

"எத்தனை நாளாக நெய் இல்லை மஹராஜ்?" என்று ராஜலக்ஷ்மி சமையல்காரனைப் பார்த்துக் கேட்டாள்.

"ஏழெட்டுநாளாக இல்லையம்மா."

"ஏழெட்டு நாளாகவா சாப்பிட்டுக்கொண்டு வருகிருர்?" என்று அவனிடம் சொல்லிவிட்டு ரதனைக் கூப்பிட்டு, "நான்தான் என்னவோ மறந்துபோய்விட்டேன். ஆனல் நீயாவது சற்று போய் வாங்கிவந்திருக்கக்கூடாதாப்பா? இந்தமாதிரி எல்லாருமாகச் சேர்ந்து கொண்டு எனக்குத் தண்டனை விதித்திருக்கிறீர்களா?" என்ருள்.

ரதன் உள்ளுக்குள்ளே இப்பொழுது யஜமானியிடம் மனஸ்தாபம் கொண்டிருந்தான். இரவு பகலாக வீட்டைவிட்டு எங்காவதுபோயிருப்பது, அவனுடைய வெறுப்பை தனது உதாசினத்தால் காட்டுவது, இவற்ருலேயே கொஞ்சநாளாக அவன் அதை வெளிப்படுத்திக்கொண்டிருந்தான். இப்பொழுது யஜமானி கேட்ட கேள்விக்குப் பதிலாக ஒன்றும் தெரியாதவன் போல முகத்தை வைத்துக் கொண்டு "நானென்ன கண்டேனம்மா? நீங்கள் வீட்டில் சாப்பிடாததாலும், பட்டினி இருப்பதாலும் ஒரு வேளை நல்ல

ஹிந்தி ஆசான்

உபாத்தியாயர் உதவியில்லாமல் தமிழ் உச்சரிப்பைக்கொண்டே நாலே வாரத்தில் நல்ல ஹிந்தி பாஷையை சுலபமாகக் கற்றுக்கொள்ளலாம். விலை 12 அ. ஒரு காபி அனுப்ப அ 14 மணியார்டர் செய்யவும்.

எம். எஸ் ராமுலு கம்பெனி,
286, எஸ்பிளனேட் மதராஸ்.

அபாரசக்திவாய்ந்தடானிக்!

S.K.M.

Dr. N. V. ஸ்ரீராமாச்சார்லுவின்

—ஸித்தகல்ப—

மகரத்வஜம்

60 மாத்திரை ரூ. 10.
30 மாத்திரை ரூ. 5.

விவரத்திற்கு எழுதவும்:

மதராஸ் ஆயுர்வேதிக் பார்மஸி லிமிடெட்.,
த, பெ. நெ. 151. (ஸ்தாபனம் 1915ஞ) 289, எஸ்பிளனேட், மதராஸ்.

நெய் வேண்டாமோ என்று இருந்து விட்டேன். இல்லாவிட்டால் ஏழெட்டு நாளாக உடம்பு சுகமில்லாதவருக்கு சாதம் போடலாமா?"

ராஜலக்ஷ்மிக்கு அதற்குமேல் பேச வாயில்லை. ஆகையால் வேலைக்காரனிடமிருந்து இவ்வளவு பெரிய வார்த்தையை வாங்கிக் கட்டிக்கொண்டு சிறிது நேரம் மௌனமாக உட்கார்ந்திருந்து விட்டு பிறகு எழுந்து உள்ளே போய் விட்டாள்.

இரவு படுக்கையில் படுத்து வெகு நேரம் வரை புரண்டு கொண்டிருந்த பிறகு கண்ணை மூடுகிற சமயம் ராஜலக்ஷ்மி கதவைத் திறந்து கொண்டு உள்ளே வந்தாள். என் காலடியில் வந்து உட்கார்ந்து வெகு நேரம் வரையில் மௌனமாக இருந்து விட்டு "தூங்கி விட்டாயா?" என்று கேட்டாள்.

"இல்லை" என்றேன் நான்.

"உன்னை அடைவதற்காக நான் என்ன முயற்சி செய்தேனே அதில் பாதி பகவானுக்குச் செய்திருந்த போதிலும் இத்தனை நாளைக்கு அவர் கிருபையை அடைந்திருப்பேன். ஆனல் உன்னை அடையவில்லை நான்."

"ஒரு வேளை பகவானைக்காட்டிலும் மனிதனை அடைவது அதிகக் கஷ்டமோஎன்னமோ?"

ராஜலக்ஷ்மி ஒரு நிமிஷம் அசைவற்று இருந்துவிட்டு "பிரேமையும் ஒருவிதமான கட்டாக இருந்தாலு மிருக்கலாம். ஒரு வேளை அது கூட உன்னிடமில்லையோ?" என்ருள்.

இந்த கேள்விக்கு பதிலில்லை. இந்தக் கேள்வி சாச்வதமும், ஸநாதனமுமானது. முதல் ஆண், பெண்களிடமிருந்து ஆரம்பித்து, தலை முறை தத்துவமாக இந்த பிரச்னைக்கு முடிவே கிடையாது. இந்த விவாதம என்று முடிகிறதோ அன்று வாழ்க்கையிலிருக்கும் எல்லா ரஸமும், எல்லா மாதுரியமும், கசந்து விஷமாக மாறிவிடும். ஆகையால் நான் பதிலொன்றும் சொல்ல முயலாமல் மௌனமாக இருந்தேன்.

ஆனல் ராஜலக்ஷ்மி நான் ஒரு பதில் அளிக்க வேண்டுமென்று துடிக்காமலும், நிர்ப்பந்தம் செய்யாமலுமிருந்தது தான் ஆச்சரியம். வாழ்க்கையில் இப்படிப் பட்ட பெரிய விஷயத்தால் தூண்டப்பட்டு அவள் ஒரு நிமிஷம் தன்னையே மறந்தாள்.

"ஞாய ரதன டாகூர் ஒரு விரதத்தின் கதையைச் சொன்னர். ஆனல் அந்த விரதம் கடினமானது என்று ஒருவரும் எடுத்துக் கொள்வதில்லை. அதை எடுக்கும் பாக்யம் யாருக்குத் தான் கிடைக்கப் போகிறதோ?" என்ருள்.

விஷயத்தை அவள் முற்றிலும் சொலலாததால் நான் நடுவில் பேசாமல் மௌனமாக இருந்தேன். அவள் மறுபடியும் ஆரம்பித்தாள்.

"மூன்று நாள் உபவாசம் இருக்க வேண்டும். நாங்களிருவரும் சேர்ந்து அதை எடுக்க வேண்டுமென்று ஸுநந்தைக்கு நிரம்ப ஆசை. ஆனல்—" என்று சொல்லி அவள் கொஞ்சம் சிரித்து "உனக்கு இஷ்டமில்லாவிட்டால்—" என்று இழுத்தாள்.

"எனக்கு இஷ்டமில்லாவிட்டால என்ன?" என்று நான் கேட்டேன்.

"அப்படியானல் அது நடைபெற முடியாது." என்ருள் ராஜலக்ஷ்மி

"அபபடியானல் அந்த யோசனையை விட்டு விடு எனக்கு இஷ்டமில்லை"

"போ! விளையாடக்கூடது"

"விளையாட்டில்லை; உண்மையாகவே எனக்கிஷ்டமில்லை நான் தடை செய்கிறேன்"

நான் சொன்னதைக் கேட்டு ராஜலக்ஷ்மியின் முகம் சிறுத்து விட்டது. சிறிது நேரம் அசைவற்றவளாக இருந்து விட்டு 'ஐயோ, நாங்கள் எல்லா ஏற்பாடுகளும் செய்து முடித்து விட்டோமே? சாமான் வாங்க ஆள்களை அனுப்பியாகிவிட்டது நாளைப்போய் மறுநாள் ஆரம்பம் இப்பொழுது வந்து கூடாது, என்ருல் என்ன செய்வது? சுநந்தையின் முகத்தில் தான் நான் எப்படி விழிப்பது? ஐயையோ—இதெல்லாம் உன்னுடைய வேஷம். வேண்டுமென்று என்னைக் கோபமூட்டுவதற்காக இல்லை. அதெல்லாம் கூடாது. உனக்கிஷ்டம் என்று சொல்லித் தாகை வேண்டும்"

"இருக்கிறது; ஆனல் நீ என்றும் என்னுடைய இஷ்டம் இஷ்டமில்லாமையை எதிர்பார்த்ததில்லையே! இன்றேன் திடீரென்று தமாஷ் செயகிருய்?" என்றேன்.

ராஜலக்ஷ்மி என் பாதத்தில் கை வைத்து "இனிமேல் அப்படியெல்லாம நடககாது, இந்தத் தடவை சந்தோஷமாக எனக்கு உத்தரவு கொடு" என்ருள்.

"நல்லது ஆனல் நாளைக்கு உனக்கு ரொம்ப வேலை இருக்கிறது. இன்றிரவு சிரமபரிகாரம் வேண்டும். தூங்கப்போ" என்றேன்

ராஜலக்ஷ்மி போகவில்லை. மெதுவாக என்னுடைய பாதங்களின் மேல் கைவைத்துத் தடவினுள். தூங்குகிற வரையில் கண்ணைச் சுற்றும் பொழுதே அவளுடைய ஸ்பரிசத்தில் முன்பிருந்த அன்பு இப்பொழுது இல்லை என்று எனக்குத் தோன்றலாயிற்று. அது ஒரு நாளில் அனுபவித்த விஷயமல்ல ஆரா ஸ்டேஷனிலிருந்து அவள் என்னை வீட்டுக்குக் கூட்டிக் கொண்டு வந்த அன்று அவள் இந்தமாதிரி பாதங்களைத் தடவி என்னைத் தூங்கவைத்தாள். அந்த ஸ்பரிசத்தில் அன்பு நிறைந்திருந்தது. அப்பொழுதும் இந்த மாதிரி மௌனமாகத்தானிருந்தாள். ஆனல் அவளுடைய பெண் இருதயத்தில் இருந்த எல்லாவற்றையும் காலி செய்து அந்த பத்து விவரங்கள் மூலம் என் பாதங்களில் கொட்டினுள், அப்படிச் செய்தும் நானதை விரும்பவில்லை. அப்பேர்ப்பட்ட அன்பைப் பெற்று, என்ன செய்வது என்று எண்ணி அதை நான் அடையவில்லை. வெள்ளப்பெருக்கின் நீர்போல வரும்போதும் அது நான் இஷ்டப்படாமல் வந்தது. போகும்பொழுதும் அதே மாதிரிதான். என்னுடைய கண்களிலிருந்து சாதாரணமாக ஜலம் வருவதே இல்லை. அன்புக்காகவும் நான் ஆர்ப்பாட்டம் ஒன்றும செய்வதில்லை. ஜகத்தில் எனக்கு ஒன்றுமில்லை. யாரிடமிருந்தும் எனக்கு வரவேண்டியதும ஒன்றுமில்லை. கொடு என்று கை நீட்டி நிற்பது எனக்கு வெட்கத்தைத் தரும். புத்தகங்களில் படித்திருக்கிறேன். இந்த விஷயமாக எவ்வளவு விரோதம், எவ்வளவு மனக்கொதிப்புமான அபிமானங்களால் ஏற்படும் தடைகள் எவ்வளவு? சினேகம் என்ற அமிர்தம் விஷமாக மாறுவதைப்பற்றி எவ்வளவு கதைகள்? எல்லாம் பொய்யல்ல. ஆனல் என் மனத்திலேற்பட்ட வெறுப்பால் சீச்சீ என்றேன்.

வெகு நேரத்திற்குப் பிறகு நான் தூங்கி விட்டேன் என்று எண்ணி ராஜலக்ஷ்மி மெதுவாக எழுந்து வெளியே போனுள். தூக்கமற்ற என் கண்களிலிருந்து கண்ணீர் பெருகியது அவளுக்கு எப்படித் தெரியும். கண்ணீர் வடிந்து கொண்டே இருந்தது. ஆனல் ஒரு நாள் என்னுடைய தாக இருந்த தனம் கை தவறிப் போய் விட்டதென்று வீணுகப் புலம்ப நான் முற்படவில்லை.

(தொடரும்)

அமிர்தாஞ்சன்

போலிகள் எச்சரிக்கை

"சுதேஹமித்திரன்"

எல்லாவித நோய்களையும் தீர்க்கும்.

அமிர்தாஞ்சன் லிமிடெட்,
பம்பாய் - சென்னை - கல்கத்தா.

ஆரணி ஸில்க் ஹவுஸ்

17, துளசிங்கபெருமாள் கோவில் தெரு, திருவல்லிக்கேணி.

இடம் மாற்றம்.

தற்காலிகமாக கீழ்க்கண்ட விலாசத்தில் மாற்றப்பட்டிருக்கிறது. கல்யாணகாலத்துக்கேற்ற நூதன ரகங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. கஸ்டமர்கள் தெரிவிக்கும் விலாசத்தில் Free Delivery கொடுக்கப்படும்.

விலைகள் குறைக்கப்பட்டிருக்கிறது.

தங்கள் ஆதரவை எதிர்ப்பார்க்கிறேம்.

ஹெட் ஆபீஸ்:
ஆரணி ஸில்க் ஹவுஸ்,
புரோப்ரைடர்ஸ்:
க. மு. கந்தசாமி செட்டி
அண்ணுமலை செட்டி
ஆரணி (N. A. Dt)

பிராஞ்சு:
ஆரணி சில்க் ஹவுஸ்
85, பெரிய தெரு,
கும்பகோணம்.

கோடைகாலத்தில் தொண்டையைப் பாதுகாருங்கள்

தொண்டை, சுவாசப்பை, மார்பு வியாதிகளுக்குப் பெப்ஸ் சிறந்த நிவாரணி. பாட்டில் ரூ. 1. வீதம் எங்கும் விற்கப்படுகின்றது.

பெப்ஸ் உட்கொள்க.

PEPS

கிருமிநாச சுவாச மாத்திரைகள்.

உங்களுக்கு
மலச்சிக்கலோ அல்லது
ரத்தக்கொதிப்போ அல்லது
மண்டை கனமோ அல்லது
தலைவலியோ அல்லது
மயக்கமோ அல்லது
வாய்துர்நாற்றமோ அல்லது
சருமப்படுவனே இருந்தாலும்
உடனே பரீக்ஷியுங்கள்

காஸ்டபீன்

ருசி மிகுந்த சாக்லட் மலவிரோசனி. மலச்சிக்கலை ஒழிக்க் பத்திரமும் நிச்சயமுமான வழி.

குழந்தைகள், நடுவயதினருக்கும், ஆரோக்யம், பலத்தை அளித்திருக்கின்றது.

எல்லா மருந்து வியாபாரிகளிடமும் 2 சாக்லட் உள்ள பாகெட் ஒரு அ. ஒவ்வொன்றும் 25, 50, 100 கொண்ட பாட்டில்களிலும் கிடைக்கும்.

CASTOPHENE

CASTOR OIL CHOCOLATES

ஏஜண்டுகள் :—
மெஸர்ஸ்:
சிவராம் & ஸ்வாமி லிமிடெட்.
154, நைனியப்ப நாயக்கன் தெரு, பி. டி., மதராஸ்.

உத்தம சித்திரம்

ஸ்ரீ எ. எஸ். பி. அய்யர், ஐ. ஸி. எஸ்.

பரம லோபியாயிருந்த ஒரு வியாபாரி தன்னுடைய உருவப்படம் ஒன்றை எழுதி வைத்துக்கொள்ள ஆசைப்பட்டான். சித்திர மெழுதுவதற்கு வேண்டிய துணியையும் வர்ணங்கள் முதலியவைகளையும் கொடுத்து சித்திர மெழுதுவோனுக்கு எட்டணா கூலி கொடுப்பதற்கும் அவன் தயாராயிருந்தான். கூலிவேலை செய்பவன் கூட நாள் ஒன்றுக்கு எட்டணா சம்பாதித்துவிடுகிறதினால்வியாபாரியின் நிபந்தனைகளுக்கு ஒப்புக்கொண்டு ,சித்திரம் எழுதுவோன் ஒருவன் கூட முன்வரவில்லை. கடைசியில் சித்திரமெழுதுவோன் ஒருவன் வியாபாரியின் நிபந்தனைகளுக்கு ஒப்புக்கொண்டு சித்திர மெழுதத்தொடங்கினான். தனக்கு நன்றாகச் சித்திரம் தீட்டத்தெரியும் என்று அவன் வியாபாரியிடம் சொன்னான். மிகவும் முரடான ஒரு துணியையும் பழைய வர்ணங்களையும் சித்திரம் தீட்டும் கருவிகளையும் அவனிடம் வியாபாரி கொடுத்தான். சித்திர மெழுதும் கருவியினால் சித்திர மெழுதுவோன்,மேலும்கீழுமாக, குறுக்கும் நெடுக்குமாகவும் பல கீறல்களை துணியின்மீது கீறினான். அதைப் பார்த்துக்கொண்டிருந்த வியாபாரிக்குக் கோபம் வந்தது. சித்திரமெழுதுவோனை அவன் திட்டினான். •வியாபாரியே, அவசரப்படாதே. முடிவில் எல்லாம் நன்றாக இருக்கும். நீ மனவருத்தப்பட வேண்டாம். தையற்காரன் துணியைக் கத்தரிக்கும்போதும், வண்ணான் அழுக்குத் துணிகளைச் சலவைசெய்துகொண்டிருக்கும்போதும், பார்த்துவிட்டு, அவர்களுக்குத் தொழில்தெரியாதென்று ஆத்திரப்பட்டுச் சொல்லிவிடக்கூடாது. சிறிது பொறுமையுடனிரு. நீ நல்ல உருவப் படத்தை கூடிய சீக்கிரம் பெறுவாய்' என்று சித்திரமெழுதுவோன் சொன்னான். பிறகு அவன் தன்னுடைய வேலையைக் கவனித்துக்கொண்டிருந்தான். முடிவில் சிரிப்பை உண்டாக்கக்கூடிய ஒரு சித்திரத்தை அவன் எழுதிமுடித்தான். அரையணாவைப் போன்ற தலையையும்,தலையளவு வாயையும் உடைய சித்திரத்தை அவன் வரைந்திருந்தான். நாணயங்களையும் அசுத்தமான வஸ்துக்களையும் இரண்டு கைகள் எடுத்து வாய்க்குள் போட்டுக்கொண்டிருப்பது போல் அந்த சித்திரத்தில் காட்டப்பட்டிருந்தது. குண்டூசியின் தலையைப் போன்ற சிறிய இரண்டு கண்கள் முகத்தில் காணப்பட்டன. பூசணிக்காயைப் போன்ற வயிறு ஒன்று, நாணயங்களினாலும் அசுத்தமான வஸ்துக்களினாலும் நிரப்பப்பட்டு விளங்கிற்று. கால்கள் முழங்கால்வரையில் நாணயங்களினால் மறைக்கப்பட்டிருந்ததுபோல், சித்திரமெழுதுவோன் கற்பித்து வரைந்திருந்தான்.

அந்த சித்திரத்தைக் கண்டு, வியாபாரி கோபத்துடன் துள்ளினான். அந்தப் படம் சில விஷயங்களில் தன்னைப்போலவே இருந்ததைக் கண்டு, அவனுடைய கோபம் அதிகரித்தது. 'நான் என்ன இந்தப்படத்தில் காணப்படும் குரூபியான ராக்ஷஸனைப் போலவா இருக்கிறேன்! நீ மிகவும் அழகான சித்திரம் எழுதிக்கொடுக்கிறேன் என்று பெருமையடித்துக்கொண்டாயே. இதுதானா மிகவும் அழகியசித்திரம்' என்று வியாபாரி சித்திரமெழுதுவோனைக் கேட்டான். 'இந்தப்படம் எல்லா விஷயத்திலும் உன்னைப் போலவே இருக்கின்றது. பார்ப்பதற்கு இது அழகாயில்லாமற் போனால், நான் என்ன செய்வது. இதில் எழுதப்பட்டிருக்கும் மனிதனுடைய உருவம் அழகாயிருந்தால், இதுவும் அழகாயிருந்திருக்கும்' என்று சிரித்துக்கொண்டே சித்திரம் எழுதுவோன் சொன்னான். 'நீயே இந்தப்படத்தை எடுத்துக் கொண்டுபோ. நான் கொடுத்த துணியின் கிரயத்தையும், சித்திரம் தீட்டும் கருவிகளின் கிரயத்தையும் எனக்குக் கொடுத்து விட்டுப்போ. பார்ப்பதற்கு கோரமாயிருக்கும் இந்தப் படத்தை முதலில் இவ்விடத்திலிருந்து எடுத்துக்கொண்டுபோ' என்று அந்த வியாபாரி உரக்கக் கூவினான். 'எனக்குச் சேரவேண்டிய கூலியாகிய எட்டணாவை கீழே வைத்து விட்டு இவைகளையெல்லாம் எடுத்துக்கொண்டு போய் விடு' என்று சித்திரம் தீட்டுவோன் பதிலளித்தான்.

இருவரும் சண்டையிட்டனர். தங்களுடைய வழக்கை அவர்கள் ஒரு நீதிபதியிடம் சொல்லிக் கொண்டனர். அந்த சித்திரத்தைப்பார்த்து நீதிபதி விலாப் புடைக்கச் சிரித்தார். 'தலை, வாய், கண்கள், கைகள், வயிறு, கால்கள், முதலியவற்றுள் ஒன்றாகிலும் என்னுடைய உருவத்திலிருப்பவைகளை ஒத்திருக்கிறதா பாருங்கள். அதனால்தான் இது என்னுடைய உருவப்படமல்லவென்று நான் சொல்கிறேன்' என்று அந்த வியாபாரி சொன்னான். 'அவைகள் என்னமோ பார்ப்பதற்கு ஆச்சரியத்தை உண்டு பண்ணுகின்றன. அதற்கு ஏதோ காரணம் இருக்கவேண்டும். சித்திரம் எழுதியவனே, இந்த சித்திரம் இப்படி யிருப்பதற்குக் காரணம் ஏதாகிலும் இருக்கிறதா?'' என்று நீதிபதி கேட்டார். "பிரபுவே பொருத்தமுள்ளதாகவும் விஷயங்களைத் தெளிவாக விளக்குவதாகவுமுள்ள ஒரு சித்திரத்தை நான் வரைந்துகொடுப்பதாக ஏற்றுக்கொண்டேன். ஒப்புக்கொண்டபடியே நான் ஒரு சித்திரத்தை எழுதிக் கொடுத்திருக்கிறேன். சித்திரமெழுதுவதற்கு இந்தவியாபாரி அளித்த குறைந்த கூலியும் எழுதுவதற்குக் கொடுத்த முரட்டுத் துணியும் பழைய கருவிகளும் இவனுடைய அல்பத்தனத்தை விளக்குவதனால், இவனுடைய தலையை நான் சித்திரத்தில் சிறிதாகக் காட்டி யிருக்கிறேன். இந்த வியாபாரிக்கு இருக்கும் ஐஸ்வரியத்தைக்காட்ட, இவனுடைய வயிற்றைப் பெரிதாக வரைந்திருக்கிறேன். மேலும் இவனுடைய உருவத்தில் அதிக பாகத்தை இவனுடைய வயிறு தான் ஆக்கிரமித்துக்கொண்டிருக்கிறது. இவனிடம் வாங்கிக் கொள்ளும் தன்மை யிருக்கிறது. கொடுக்கும் தன்மை யில்லையென்று காட்டுவதற்கு இரண்டு கைகளையும் வாயில் எதையாவது போட்டுக்கொண்டிருக்கும்படிக்கு சித்திரத்தில் உருவகப்படுத்தியிருக்கிறேன். இவன் பேராசை பிடித்தவன் என்று காட்ட, வாயைப் பெரியதாக இருக்கும்படி சித்திரத்தில் தீட்டியிருக்கிறேன். பணத்தாசை பிடித்தவன் இவன் என்று எடுத்துக்காட்ட, எப்போதும் நாணயங்களின் மீதே கவனத்தைச் செலுத்தியிருப்பதனால், இயற்கை விநோதங்களின் அழகைக் காணக் கொடுத்து வைக்காத கண்கள் இவனுக்கு இருப்பதுபோல் நான் சித்திரத்தில் சிறிய கண்களை காட்டியிருக்கிறேன், இவன் திரவியத்தை சம்பாதித்த வழியையும், திரவியத்தைக் கரப்பாற்றும் வழியையும் விளக்க இவனுடைய கால்கள் செல்வத்திலேயே வேரூன்றிக் கிடக்கும்படி, சித்திரத்தில் எழுதியிருக்கிறேன். இதைவிட ஆழ்ந்த கருத்துக் களடங்கிய பொருத்த முள்ள சித்திரத்தை எழுதுதல் கஷ்ட மென்பதையும், அதிக கஷ்டப்பட்டு நான் எழுதியிருப்பதனால் எனக்கு, என் கூலியாகிய எட்டணாவைக் கோடுத்து விடும்படிக்கு தாழ்ந்த வணக்கத்துடன் கேட்டுக் கொள்கிறேன்'' என்று சித்திரமெழுதுவோன் சொன்னான். நீ அதிக கஷ்டப்பட்டுத்தான் இவ்வளவு பொருத்தமுள்ள படத்தை எழுதியிருக்க வேண்டும். ஆதலால், எட்டணாவை உனக்குக் கொடுத்து விடும்படி நான் தீர்மானிக்கிறேன்'' என்றுநீதிபதி தீர்ப்புசொன்னார்.

ஜெர்மன் கைதிகள் "படையெடுப்பு"

இப்போது பிரிட்டனில் அச்சுநாடுகளைச் சேர்ந்தவர்கள் அநேகர் கைதிகளாகப் பிடிக்கப்பட்டிருக்கின்றனர், லண்டனில் ஜெர்மன் கைதிகள் வந்திறங்குவதைப் படத்தில் பார்க்கலாம்.

பிரபல ஜோதிஷர்

மஹா ராஜாக்களால் தங்க மெடல்கள் பரிசு பெற்றவர் ஒரு ஜாதகம் கணிக்க ரூ.2. நேரில் ஒரு ஜாதகம் பார்க்க ரூ.5. மாதவாரி ஒரு வருஷ பலன் எழுத ரூ.5. ஆரூடம்3கேள்விகளுக்கு ரூ. 1. மேல் கேள்வி 1-க்கு

அணா 8. ஜாதகம் அல்லது எழுதும் நேரம் தேவை. பண்டித காழியூர் ம. ஸ்ரீனிவாஸாச்சாரியார், திருநீர்மலை, குரோம்பேட்டை போஸ்டு, எஸ். ஐ. ஆர்.

த்யாகராஜ கீர்த்தனம்

[காபிரைட்]

(சங்கீத வித்வான் துறையூர் எம். ராஜகோபால சர்மா)

I

பல்லவி

நாராயண! ஹரி! நாராயண! ஹரி!

சரணம்

1. நச்வரமைன தனச்வமுலனு நே
விச்வஸிஞ்ச பூஜேச்வர! ஹரி! ஹரி!
2. கோடீசுலகனி ஸாடிலேனி பல்கு—
போடினொஸகி மும்மாடிகி வேடனு
3. ஆச பிசாசாவேசமு கலுகு த—
னேசுல காசெடு தேசமு நேலுது
4. நாலோ நே நீசேலோ ஜிக்கிதி
நீ லோபமு விடுவ வேலோ தெலியது
5. பூலோகமுலோ மேலோர்வரு விதி—
வ்ராலோ நீ கௌ ஜாலோ தெலியது
6. தூரெடு பனுலகு தூரெதரு கட—
தேரெடு பனுலனு தேரே மனஸுகு
7. தொலிதா ஜேஸின பலமே கலதனி
யிலனென்த்ஸனி மர்த்யுல செலிமியெந்துகு
8. தூஷணஹர! பரதூஷண ஜனகண
பீஷண! ஸுகுண விபீஷண ஸன்னுத!
9. நோரெப்புடு நீ பேரே பலுகனி
வேரே எவருன்னரே ராகவ!
10. மித்ர குலேச சரித்ர! ரஸிக்ஜன
மித்ரமு கோருது வ்ருத்ராரி வினுத!
11. வீன விமான! கவீஹ்ருதயாலய!
தீன ஜனாவன! தானவஹர! ஸ்ரீ
12. நாஜுபுலு நீ ஜுக தனமு
நே ஜுடனி த்யாக ராஜுல்லமலரு

II

நாராயண	—நாராயண மூர்த்தியே!
ஹரி!	—ஸ்ரீ மகா விஷ்ணுவே!
நச்வரமு ஜன	—அநித்யமான
தன அச்வமுலனு	—ஐச்வர்யம், குதிரை முதலானவைகளை
நே விச்வஸிஞ்ச	—நான் ஒருக்காலும் விரும்ப மாட்டேன்
பூஜாஈச்வர!	—பூமா தேவியின் புத்ரியான சீதா தேவியின் நாயகனே!
ஹரி! ஹரி!	—ஸ்ரீ ஹரியே!
கோடீசுலகனி	—தனவந்தர்களைக் கண்டு
ஸாடிலேனி	—இணை சொல்வதற்கரிதான முறையில்
பல்கு போடின் ஒஸகி	—வாக்குவாதம் செய்து
மும்மாடிகி வேடனு	—முக்காலமும் அவர்களை வேண்டமாட்டேன்,
ஆசபிசாச ஆவேசமுகலுகு	—ஆசையாகிய பேய் பிடித்தலையும்
தீனேசுல	—செல்வவந்தர்களை
காசெடு தேசமுன்	—வைத்துப் பாதுகாக்கும் தேசங்களை
ஏலுது	—பக்தி மார்க்கத்தை உபதேசித்து நல் வழிப்படுத்தி நான் பரிபாலித்து வருகிறேன்.
நாலோ	—என் உள்ளத்தில்
நே	—நான்
நீசேலோ ஜிக்கிதி	—உன் கையில் அகப்பட்டுக் கொண்டேன்!
நீலோபமு விடுவவேலோ தெலியது	—உன் லோப குணத்தை ஏன் விடமாட்டேன்! என்கிறாயோ தெரியவில்லை.
பூலோகமுலோ	—இவ்வுலகில்
மேலு ஓர்வரு	—பிறர் மேன்மையைக் கண்டு சகிக்கமாட்டார்கள்
விதிவ்ராலோ	—விதியின் செய்கையோ
நீ கௌஜாலோ	—அல்லது உன் லீலா விநோதமோ
தெலியது	—தெரியவில்லை
தூரெடு பனுலகு	—கெடுதலான காரியங்களுக்கு
தூரெதரு	—ஆவலாய் பிரவேசிக்கிறார்கள்
கடதேரெடு	—ஜன்மம் கடைத்தேறும் வண்ணம் செய்யும்
பனுலனு	—காரியங்களை
மனஸுகுசேரே	—மனதிற்கு எடுத்துக் கொள்ள மாட்டார்கள்

தாய்மார்களே!

ப
ய
ஸ்
யா

குழந்தைகளுக்கு தாய்ப்பால் தவிர மற்ற எந்த உணவும் ஏற்றதல்ல.

உங்கள் பாலை விருத்தி செய்து கொண்டு குழந்தைகளை நீங்களே ஆரோக்கியமாய் வளருங்கள்.

தாய்ப்பாலினால் வளர்ப்பது ஆரோக்கியம் மட்டுமல்ல. மிகச் சிக்கனமுங்கூட.

பயஸ்யா (Regd)

தாய்ப்பாலை மிகுதியாய் உண்டு பண்ணும் உத்தம ரஸாயனம்.

விலை ரூ. 2—8—0
(Packing & Postage Extra.)

எல்லா மருந்துக் கடைகளிலும் கிடைக்கும்.

அல்லது நேரில்:—
ஆத்ரேய ஆயுர்வேதிக் ஒர்க்ஸ்,
தென்னூர்ரோடு, திருச்சினாப்பள்ளி.
Prop. V. B. Nataraja Sastri,
Ayurvedacharya.

(தாய்மாருக்கு உபயோகமுள்ள பயஸ்யா புஸ்தகம் இனாம்.)

நினைவிருக்கட்டும்

தேகாரோக்கியம் கெடாமலிருப்பதற்கு எப்படி கலப்பற்ற சுத்தமான உணவு உட்கொள்ளுகிறோமோ அதுபோலவே, கண்களுக்கும், மூளைக்கும் கெடுதல் நேரிடாது. ஞாபக சக்தியும் சுறு சுறுப்பும் அடைவதற்கு கலப்பற்ற பொடியே அவசியமென்பதை பொடி உபயோகிக்கும் சகோதரர்கள் அறிதல் வேண்டும். இவ்வித கலப்பற்ற பொடிக்கு மதராஸ் **ஸ்ரீ அம்பாள் அண்டு கம்பெனி**, யார் 35 ஆண்டுகளாக புகழ் பெற்றவர்களென்பது யாவரும் அறிந்ததே. பொடி வாங்கும் போது **ஸ்ரீ அம்பாள் பட்டணம் பொடியையே** கவனித்து வாங்க நினைவிருக்கும்படி கேட்டுக் கொள்ளுகிறோம்.

விக்டோரியா டிபோ,
மைலாப்பூர், மதராஸ்.

தொலிதா ஜேஸின
பலமே கலதனி
இலனு என்த்ஸனி
மர்த்யுல
செலிமி யெந்துகு
தூஷண ஹர!

பர தூஷண ஜன கண
பீஷண!
ஸுகுண விபீஷண
ஸன்னுத!
எப்புடு
நீ பேரே பலுகனி
நோரு
வேரே
எவருன்னுரே
ராகவ!
மித்ர குலேச சரித்ர!
வ்ருத்ராரி வினுத!

ரஸிக ஜன மித்ரமு கோருது

வின விமான!

கவி ஹ்ருதயாலய!
தீன ஜனாவன!
தானவஹர!

நாஜுபுலு நீ ஜுகதனமு
நேஜுடனி
த்யாகராஜுல்ல மலரு

—முன்தான் செய்த
—பலனையே அனுபவிப்பதாக
—இவ்வுலகில் என்னுத
—மனிதர்களின்
—சிநேகம் எதற்கு?
—கரதூஷணன் என்ற ராக்ஷஸர்களை ஸம்ஹரித்தவனே!
—பிறரை நிந்தித்து ஹிம்சிக்கும் துஷ்டர்களுக்கு
—பயங்கரமாயுள்ளவனே!
—நல்ல குணமுடைய விபீஷணனுல்
—துதிக்கப்பட்டவனே!
—எப்பொழுதும்
—உன் நாமத்தையே உச்சரிக்காத
—வாக்குடன்
—வேறு
—யார் இருக்கிறுர்கள்?
—ஹே ராமா!
—சூர்ய குலத்தில் உதித்து விளங்கியவனே!
—வ்ருத்ராசுரனை வென்ற தேவேந்திரனுல் துதிக்கப்பட்டவனே!
—என் மனம் ரஸிகர்களான ஸாதுக்களின் நட்பையே விரும்புகிறது
—பக்ஷிராஜனுன கருடனை வாகனமாகக் கொண்டவனே!
—கவி ஸ்ரேஷ்டர்களின் மனதில் வசிப்பவனே!
—எளியவர்களைக் காப்பாற்றுபவனே!
—துஷ்டர்களான அஸுர ராக்ஷஸர்களை ஸம்ஹரிப்பவனே!
—என் த்ருஷ்டி உன் த்ருஷ்டியே யாகும்
—நான் பார்ப்பதில்லை என்ற மனோபாவம்
—த்யாகராஜனுன என் உள்ளத்தை பரவசப்படுத்தும்

III

இது திவ்ய நாமப் பகுதியைச் சேர்ந்த கீர்த்தனங்களில் ஒன்றுகும். இக்கீர்த்தனத்தில் ஸ்வாமிகள் பாமர ஜனங்களின் தன்மையை எடுத்துக் கூறி அவர்களை நம்பி வீண் போகாது, பகவத் பக்தியில் தான் ஈடுபட்டுள்ளதாய் தெரிவித்துக் கொண்டு, தன்னை ஏற்றுக் கொள்ளுமாறு வேண்டிக் கொள்ளுகிறுர்.

நச்வரமைன:—'இந்நாள்ளு தயாராகுன்ன வேமி' என்ற கீர்த்தனத்தின் 2-வது சரணத்தில் இவ்வுண்மையை நன்கு குறிப்பிட்டுள்ளார்.

கோடிசுலகனி:—செல்வவந்தர்களை அடுத்து, அவர்கள் மகிழ்ச்சியடையும்படி புகழ்ச்சியாய்ப் பேசி அதன் மூலம் தனம் பெற்று சுகமாய் வாழ்வது விரும்பத்தக்கதல்ல; பகவத் த்யானம் ஒன்றுமட்டுமே 'நிரந்தரமான சௌக்யத்தை அளிக்கும் என குறிப்பிடுகிறுர். 'ஸுகலு பதிவேலுன்ன' 'நிதிஸால' 'காஸிச்சேதே' முதலான கீர்த்தனங்களில் ஸ்வாமிகள் தனவந்தர்களையும், அவர்களிடம் உள்ள தனத்தையும் எவ்விதம் மதித்துள்ளார் என்ற உண்மை காணப்படுகிறது.

'கருணு ஜலதீ தாசரதீ' என்ற கீர்த்தனத்தின் 3-வது சரணத்தில் 'தனமதமுனனுண்டு ஜனுலனு நேனுயாசன ஸேயராலேனுரா' என்று காணப்படுவதும் கவனிக்கத் தக்கது.

ஆசபிசாசா வேசமு:—உலக வாழ்க்கையில் மயக்கம் கொண்டு பணமே பெரிதென எண்ணித் திரியும் ஜனங்கள் பால் அன்பு கொண்டு 'எந்துகோபாக, பொத்து போயெனு' முதலான கீர்த்தனங்கள் வாயிலாக ஸ்வாமிகள் அவர்களுக்கு உபதேசிப்பது கவனிக்கத்தக்கது.

நாலோநே:—தன் உள்ளத்தில் ஸ்ரீராமனின் உருவைக் காணப்பெற்றவருய் பரவசமடைகிறுர்.

பூலோகமுலோ:—5, 6, 7, சரணங்களால் பாமர ஜனங்கள் பக்தியின் தன்மையை உணருது புரியும் பாபக்ருத்யங்களைக் கூறி அதன் பொருட்டு வருத்தம் கொள்கிறுர்.

நோரேப்புடு:—ஸகல மந்திரங்களிலும் மேலான தாரகா மந்திரத்தினும் சிறந்தது வேறென்றுமில்லை என்ற உண்மையை விளக்குகிறுர்.

நரஜபுலு:—'அவனன்றி ஓர் அணுவும் அசையாது என்று சொல்லப்பட்டது போன்று, பகவானுடைய தன்மையால் ஸகல ஜீவராசிகளுக்கும் நடப்பது பார்ப்பது முதலான காரியங்கள் நடைபெருகின்றன. இவ்வுண்மையை உணர்ந்ததால் தன் உள்ளம் மகிழ்ச்சி கொண்டு விளங்குவதாக ஸ்வாமிகள் குறிப்பிடுகிறுர்.

IV

ராகம் யமுன கல்யாணி — ஆதி தாளம்

65-வது மேள ஜன்யம் ஆ. ஸரிகபமதநிஸ்
அவ. ஸ்நிதபம கமரிஸ

பல்லவி

ஸா; ரீ;	காகா காரீ	கா ;	பாமா	தா தா	பா பா
நா ரா	யண ஹரி	நா	ரா .	ய ண	ஹ ரி
நீ தா ஸா ;	ஸாஸ்நி தாபா	பாஸ்நி	தபபம	கா மா,	ரீ ஸா
நா - ரா	யண . ஹரி	நா . .	ரா . . .	ய ண	ஹ ரி

(சரணங்களை பல்லவி போன்றே பாடவும்.)

உண்மை உறுதிக்கும் உத்திர வாதம்.
—:—
"ஷண்முகம் பிராண்டு"
ஸ்டீல் டிரங்கு & சூட்கேஸ்கள்
தேவைக்கு வேண்டிய புது மாதிரி டிஜைன்களில் கிடைக்கும்.
ஷண்முகம்பிராண்டு ஸ்டீல்டிரங்குஒர்க்ஸ்
தயாரிப்பவர்:- சி. ஞானசந்திர நாயகர்,
P. 3094, 341. எஸ்பிளநேட், மதராஸ்

PARASURAM'S
சித்த எண்ணெய்.
இந்த எண்ணெயில் பதினெட்டு சித்தர்களால், அடி, நடு, முடி, என்ற முப்பு குரு பஸ்பம் சேர்ந்திருக்கிறபடியாலும், ஷை எண்ணெயிலுள்ள மூலிகைகளுக்கு நூறு மடங்கு சக்தி ஏற்பட்டு இருக்கிறபடியாலும் மூலிகை சத்துக்கள், ஆல்கலிஸ், ஆல்கலாய்ட்ஸ் (Alkalis, Alkaloids) களாக மாற்றப்பட்டு இருக்கின்றன.
குணமாகும் வியாதிகள்:- அஷ்ட குன்மங்கள், வாயு கட்டிகள், பாண்டு ரோகம், மூல வியாதி, சூலைகள், சர்ம ரோகம், மூத்திர தோஷம், பெரும்பாடு, தலை நோய், வயிற்றுப் புண், கீல்வாயு பிடிப்பு, பித்த பாண்டுகள், சொறி சிரங்குகள், ஸ்திரீகளுக்கு மாத விடாய்களில் உள்ள எவ்வகை தோஷங்களையும் நிவர்த்தி செய்யக் கூடியது. சிறு குழந்தைகளும் உட்கொள்ளலாம்.
விலை ½ அவுன்ஸ் ரூ. 1.
பரசுராம் சித்த ஔஷத ஆச்ரமம் திருவண்ணுமலை.
(பிராஞ்சு: 59-A, லாயிட்ஸ் ரோட், ராயப்பேட்டை மதராஸ்)
ஏஜண்டுகள்:—
மதராஸ்: அப்பா & கம்பெனி.
மதுரை: டி. என். சோக்கலிங்கம் பிள்ளை & ஸன்ஸ்.
காரைக்குடி: சாரதா ஸ்டோர்ஸ்.

கவலைவேண்டாம்
உங்கள் வியாதி எதுவாயிருந்தாலும் சரி; உண்மையான நல்ல மருந்து வேண்டுமானுல், அடியில்கண்ட நமக்குத் தெரியப்படுத்திஞல் நிவர்த்திக்க தக்க வழிகளைத் தெரிவிப்போம்.
மலையப்பசாமி
வைத்தியசாலை,
பழனி. S. I.



கக்ஷியை எடுத்துரைத்தார்

ஸ்ரீ ஸி. ஆர். காரியக்கமிட்டியிலிருந்து வெளியே வருகிறுர்.

கச் சம்மதிக்கவில்லை போலும்: அமெரி வாதத்தில் குறுக்கிடாதிருந்தால் குட்டு வெளிப்பட்டிருக்காது. அவருடைய பெருமையைக் காப்பாற்றும் ஆர்வத்தில் உண்மையை விளக்கி விட்டார்.

மேலே என்ன நடக்கப்போகிறது? அதைப்பற்றி கவலை காணவில்லை. இந்தியரைத் திருப்தி செய்வதைவிட வெளியாரைத் திருப்தி செய்வது தான் கருத்தா? கதவு திறந்து கிடப்பதாகச் சொல்லப்படுகிறது. என்ன ஆறுதல்! திறந்த கதவைச் சாத்தவே இன்று இந்தியர் உதவி தேவை. அதைப்பெற இப்படிப்பட்ட ஜம்பப் பேச்சு உதவாது. இன்னுமா அதை அறிய வில்லை?

★

பார்லிமெண்டில் விளக்கம்

——ஸ்ரீமான் ஸி. ஆர். ஸ்ரீநிவாஸன்

காமன்ஸ் சபையில் தமது தூதைப்பற்றி ஸர் ஸ்டாபோர்டு கிரிப்ஸ் பேசியிருக்கிறுர். குறை கூறவில்லை; கசப்பு காட்டவில்லை. நஷ்டக் கணக்கில் லாபத்தையே காண முயன்றுர். நஷ்டம் தெளிவு; காரியம் கூடவில்லை. லாபமென்ன? பிரிட்டிஷாரின் அந்தரங்க சுத்தி மெய்ப்பிக்கப் பட்டதென்கிறுர். பெட்டியைப் பறிகொடுத்தவன் சாவியைக்கொண்டு திருப்தியடைந்த கதையை இது ஞாபகப் படுத்துகிறது. கிரிப்ஸ் அவ்வளவு அசடல்ல! ஆனுல், என்ன செய்வார், பாவம்; வெகு ஆர்வத்துடன் முயற்சித்தார். பலப்படவில்லை. காரணத்தை அறிய முற்பட வேண்டும். கெட்டிக்காரத்தனத்தை விக்னங்களை விளக்குவதில் காட்ட வேண்டும். நல்லெண்ணத்தை மெய்ப்பிக்கும் வழி அது. "டூ" விட்டு ஒதுங்கப் பார்ப்பது அசட்டுத்தனம்.

வேற்றுமை கண்ட விஷயங்களை கிரிப்ஸே குறிப்பிட்டிருக்கிறுர். முதலாவது அரசியல் திட்ட நிர்மாண முறை; இரண்டாவது பாதுகாப்பு; மூன்றுவது இடைக்கால நிர்வாகப் பொருப்பு. முதல் விஷயம் குறைக்கிடம் கொடுத்தாலும் காரியத்தைக் கெடுக்கவில்லை. இரண்டாவது விஷயம் சமரஸமாகத் தீர்ந்தது. மூன்றுவது விஷயந்தான் வழி மறித்தது. அவர் கோர்த்துக்கூறும் விவரத்தைப் படிக்கும்போது ஆச்சர்யப்படக்கூடிய விஷயம் ஒன்று தெள்ளென விளங்குகிறது. ரூபாயில் 15 அணு வரையில் ஒற்றுமை; வீச ரூபாயில் வேற்றுமை! சற்று பொறுமை காட்டியிருந்தால் அதுவும் தீர்ந்திருக்கும். திடீரெனப் பேச்சு முறிந்தது; காரணம் என்ன? குறை யாரிடம்?

இடைக்காலப் பிரேரணைகள் ஸ்தூலமாக விடப்பட்டிருந்தன. சூக்ஷமம் அதில் தானிருந்தது. அமெரியின் பேச்சைக் கவனிக்கும்போது அது புலனுகிறது. பிரிட்டிஷார் இன்று தங்கள் பொறுப்பை விடத்தயாரில்லை; பொறுப்பை நிறைவேற்ற அதிகாரம் கையிலிருக்க வேண்டும். புதிய திட்டம் வகுத்து இந்தியர்களுக்குப் பொறுப்பேற்பட வேண்டும். அதுவரையில் அதிகாரம் மாறுவதற்கில்லை. இதற்குக் கட்டுண்டே கிரிப்ஸ் இவ்விடம் வந்தார். நிர்வாகத்தை இந்தியர் ஏற்றுக்கொண்டால் கட்டு கலகலத்து விடுமென்று நினைத்தார். இங்குள்ளவர் நம்பிக்கை கொள்ளவில்லை. அங்குள்ளவர் கட்டை அவிழ்க்

'மித்திரன்' ஆசிரியர் விளக்கம்

இம் மாதம் 1-ந் தேதி மாலை கும்பகோணம் பார்லிமெண்டின் ஆதரவில் ஓர் பொதுக் கூட்டம் நடந்தது. 'சுதேசமித்திரன்' ஆசிரியர் ஸ்ரீமான் ஸி. ஆர். ஸ்ரீனிவாஸன் தலைமை வகித்து பின் கண்ட விதம் பேசினுர்;—

இப்பொழுது நாம் பெருத்த அபாயகரமான நிலைமையில் தத்தளிக்கின்றோம். கட்டுப்பாடு என்ற சித்தாந்தம் நம்மை சங்கிலி போல் பிணைத்துக் கொண்டிருக்கிறது. சுயமாக நாம் சிந்தித்துப் பார்க்க விடப்படுவதில்லை. இந்திய ராஜீய வாழ்வில் கட்டுப்பாடு என்ற கொள்கை நமது சுய உணர்ச்சியையும் பாரபக்ஷமற்ற நம்பிக்கையையும் குலைத்துவிட்டது. நாமாக யோசனை செய்வதை அடியோடு நிறுத்திவிட்டோம். இதனுடைய பலன் தான் விபரீதமாக விளங்கிவிட்டது. ராஜாஜி சென்னைத் தீர்மானத்தைப்பற்றி அர்த்தமற்ற கூச்சல் காணப்படுகிறது. யாரும் சிந்தித்துப் பார்த்ததாகக் காணேம். யோசித்துப் பாராமலேயே ராஜாஜியின் தீர்மானம் கண்டனத்துக்கு உள்ளாகிவிட்டது. தற்கால நெருக்கடியைச் சிந்தித்துப் பார்க்கவில்லை. ராஜாஜியின் தீர்மானத்தில் அப்படித் தான் என்ன கெடுதலான அம்சங்கள் இருக்கின்றனவென்று அலசிப் பார்ப்போம். முதல் தீர்மானத்தில் முதல் ஷரத்து:- பாகிஸ்தானுக்கு இடம் கொடுப்பதாகச் சொல்லப் படுகிறது. அதில் என்ன தப்பு இருக்கின்றது? கடுமையான நிபந்தனைக்கு உட்பட்டு

அமெரிக்கத் தூதர்புத்ரியுடன்

ஸர் ஸ்டாபோர்ட் க்ரிப்ஸ் லண்டனில் அமெரிக்க ஜனதிபதி தூதராக இருக்கும் மிஸ்டர் அவரில் ஹாரிமன் புத்ரி காத்லீனுடன் நிற்கிறுர்.



அ. இ. கா. கமிட்டி. கூட்டம் தலைவர் பிரசங்கம் புரிகிறார். ஸ்ரீமதி சரோஜினி தேவி, பண்டித நேரு முதலியோர் மேடைமீது உட்கார்ந்திருக்கின்றனர்.

பாகிஸ்தான் கொள்கை ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது. ஜின்னா கிழக்கே நின்று காங்கிரஸ் மேற்கே நின்றால் எப்பொழுது தான் நாட்டில் ஒற்றுமை ஏற்படுவது? சுதந்தரம் என்பதே முக்கியம்: அதற்குப்பின் தான் ஒற்றுமை: நாம் சுதந்தரம் அடைய முயற்சி செய்யாமல் ஒற்றுமையை மட்டில் சிந்தித்துக்கொண்டிருந்தால் நாம் எப்பொழுது தான் சுதந்தரம் அடைவது? நாம் சுதந்திரம் அடைந்துவிட்டால் நமக்குள்ள வித்யாசங்களை நாம் சமரசமாக நமக்குள் தீர்த்துக்கொள்வது சாத்தியமாகும். ஒற்றுமை ஒற்றுமை எனக் கூக்குரலிட்டுக்கொண்டிருந்து, ஒற்றுமை ஏற்பட எவ்விதமான மார்க்கமும் செய்யாமலிருந்தால் ஒற்றுமையும் ஏற்படாது, சுதந்திரமும் கிடைக்காது: ஆகையால் தான் பாகிஸ்தான் கொள்கையை ஒப்புக்கொண்டால் நாட்டிற்கு எவ்விதக் கெடுதலும் விளைந்துவிடாது என்பதை நன்கு ராஜாஜி தெரிந்துகொண்டு தீர்மானத்தைக்கொண்டு வந்தார். தீர்மானத்தின் இரண்டாவது ஷரத்தையும் பார்ப்போம். சென்னையைப்பற்றிய வரையில் தேசீய அரசாக்ஷி ஏற்பட அனுமதி கோரினார். சென்னை நிலைமையைச் சற்று சிந்திப்போம். அதிகாரிகளுக்கே என்ன செய்வது என்பது இந்த நெருக்கடியான சந்தர்ப்பத்தில் தோன்றவில்லை. இந்த சமயத்தில் நம்முடைய பிரதிநிதிகள் அரசாங்கத்தில் அதிகாரப் பதவிகளில் இருந்தால் மக்களின் பீதியைத் தணித்து அமைதியை நிலைநாட்ட எவ்வளவோ செய்ய முடியும். இப்பொழுது இருக்கும் மோசமான நிலைமையை இப்படியே இருந்துவிடும்படியாக நாம் விட்டுவிடக் கூடாது. அப்படி விடுவது அபாயகரமானதோடு கூட பெருத்த அழிவையே நாட்டில் உண்டு பண்ணக் கூடும்.

காரியக்கமிட்டிக் கூட்டம்

அலகாபாத்தில் ஏப்ரல் 27-ந்தேதி பகல் காங்கிரஸ் காரியக் கமிட்டிக் கூட்டம் மௌலானா அபுல் கலாம் ஆஸாத் தலைமையில் ஆரம்பமாயிற்று. யுத்தம் காரணமாக வெளிநாடுகளிலிருந்து வந்துவிட்டவர்களைப் பற்றியும், யுத்த நிலையைப்பற்றியும் கூட்டத்தில் ஆலோசனை நடந்தது. பண்டித நேரு, சமீபத்தில் தாம் செய்த சுற்றுப்பிரயாண அநுபவங்களை எடுத்துச் சொன்னார் மறு நாளும் கூட்டம் நடைபெற்றது.



ஜவஹரின் அன்பு

ஒரு ஏழையிடம் பண்டித நேரு காட்டிய பரிவு.

கூட்டம் முடிந்ததும் காங்கிரஸ் தலைவர் மௌலானா ஆஸாத் பத்திரிகைப் பிரதிநிதிகளைச் சந்தித்தார். அகில இந்தியக் காங்கிரஸ கமிட்டி முன்பு ஆஜர்படுத்தப்படக்கூடிய இரண்டு தீர்மானங்களைப்பற்றியும், சென்னைக் காங்கிரஸ் சட்டசபைக் கக்ஷித்தீர்மானத்தை யொட்டிய ஸ்ரீமான் ராஜகோபாலாச்சாரியாரின் யோசனையைப்பற்றியம் விவாதிக்கப்பட்டதாக அவர் கூறினார்.

மற்றவர்களுடன் அபிப்பிராய பேதம் காரணமாக ராஜாஜி சென்ற மாதம் 30-ந்தேதி காங்கிரஸ் காரியக் கமிட்டியிலிருந்து ராஜினாமாச்செய்து விட்டார். இந்த ராஜினாமாவைக் காங்கிரஸ்தலைவர், மௌலானா அபுல் கலாம் ஆஸாத் வருத்தத்துடன் அங்கீகரித்திருக்கிறார்.

அகில இந்தியக் கமிட்டி

அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி ஏப்ரல் 29-ம் தேதி மாலை 6–30 மணிக்கு தாகூர்நகரில் கூடியது, கூட்டம் மூன்றரை மணி நேரம் நடந்தது, க்ரிப்ஸ் திட்டத்தை காரியக் கமிட்டி ஏன் ஏற்க முடியாமல் போய்விட்டதென்பதை விளக்கி காங்கிரஸ் தலைவர் மௌலானா அபுல்கலாம் ஆஸாத் ஒன்றரை மணி நேரம் அழுத்தம் திருத்தமாகப் பேசினார். மறுபடியும் சமரஸம் பேச பிரிட்டிஷ் சர்க்கார் இனி முற்பட மாட்டார்களென்று ஸர் ஸ்டாபோர்ட் அறிவித்திருப்பதைப் பற்றி பிரஸ்தாபிக்கையில் மௌலானா "இந்தியாவும் சமரஸப் பேச்சைத் தொடங்க முன் வராது" என்று உறுதியாகக்கூறினார், க்ரிப்ஸ் திட்டம் சம்பந்தமாகக் காரியக்கமிட்டி செய்த தீர்மானத்தை ஆதரிப்பதாக ராஜன் பாபு பிரேரித்ததைச் சபை சபை அங்கீகரித்தது. ஒருவர்தான் பிரேரணைக்கு ஏதிராகக் கையைத் தூக்கினார், பிறகு சர்க்கார் தடைக்குள்ளான யுத்த சம்பந்தமான இரண்டு தீர்மானங்களையும் பண்டித நேரு பிரேரித்துச் சுருக்கமாகப் பேசினார். இத்தீர்மானங்களை ஸ்ரீ புலாபாய் தேசாய் ஆமோதித்தார். இவை ஏகமனதாக அங்கீகரிக்கப்பட்டன.

யுத்த தீர்மான விவரம்

அகில இந்தியக் காங்கிரஸ் கமிட்டிக் கூட்டத்தில் காரியக் கமிட்டியால் யுத்தம் சம்பந்தமாகக் கொண்டுவரப்பட்டு நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தில் படையெடுத்துவரும் அன்னியருடன் பூரண அஹிம்ஸா பூர்வமான் ஒத்துழையாமையை அனுஷ்டிக்க வேண்டுமென்று வற்புறுத்தப்பட்டிருக்கிறது. இந்தியாவின் கொள்கையைத் தீர்மானம் விவரிக்கிறது. உடனே நெருக்கடி ஏற்பட்டால் அப்பொழுது ஜனங்கள் என்ன செய்யவேண்டுமென்று தீர்மானம் யோசனை கூறியிருக்கிறது. அன்னிய அதிகாரிகள் இந்திய மக்களை மிக்ககேவலமாக நடத்துவதில் இந்தியர் வெறுப்பு கொள்ளுவதாகத் தீர்மானம் கூறுகிறது. இந்தியா தன்னுடைய சொந்த பலத்திலேயே சுதந்திரத்தைப் பெற்று, அதை நிலைநாட்டும். தற்போதைய நெருக்கடி காரணமாகவும், ஸர் க்ரிப்ஸுடன் நடத்தியசம்பாஷணையின் அனுபவத்தை யொட்டியும், இந்தியாவில் பிரிட்டிஷாரின் ஆதிக்கம் சிறிதளவுக்கே இருந்தாலும்கூட — இருக்கும்படியான எந்த யோசனையையும், திட்டத்தையும் காங்கிரஸ் கவனிப்பதற்குச் சாத்தியப்படவில்லை. அன்னியரின் தலையீடு காரணமாகவோ அல்லது படையெடுப்பு காரணமாகவோ இந்தியாவிற்குச் சுதந்திரம் கிட்டுமென்ற எண்ணத்தை ஏற்க முடியாது. படையெடுப்பு ஏற்பட்டால் அதை எதிர்த்தே ஆகவேண்டும். அந்த எதிர்ப்பு அஹிம்ஸா பூர்வமான ஒத்துழையாமையே யாகும். ஆகவே படையெடுப்பவர்களுக்கு இந்திய மக்கள் எந்த விதத்திலும் உதவி புரியமாட்டார்களென கமிட்டி எதிர்பார்க்கிறது.

ஸ்ரீ ஸி. ஆர். தீர்மானம்

அகில இந்தியக் காங்கிரஸ் கமிட்டிக் கூட்டத்தில் ராஜாஜியின் தீர்மானத்தை 15 பேர்கள் மட்டுமே ஆதரித்தனர். காரியக்கமிட்டி அங்கத்தினர்களும் மற்றவர்களும் சேர்ந்து 120 பேர் அத்தீர்மானத்துக்கு விரோதமாக ஓட் கொடுத்தனர். ஆனாலும் ராஜாஜி தமது பிரசங்கத்தால் ஹிந்து—முஸ்லீம் பிரச்னையைப் பற்றி அனைவரையும் தீர்க்கமாகச் சிந்திக்கும்படிச் செய்து விட்டார். அவர் மனக்கசப்பில்லாமலும் பேசினார். அரைமணி நேரம் அவர் அறிவு நிறைந்த அரிய பிரசங்கம் ஒன்று செய்தார். அவர் பேசி முடிந்ததும் பலரும் கரகோஷம் செய்தனர். இதிலிருந்து அவர் கருத்தைச் சபையினரில் பெரும்பாலோர் அங்கீகரிக்காவிட்டாலும், அவரது தைரியத்தையும் உண்மைத் தன்மையையும் அவர்கள் பாராட்டியதாகவே தெரிந்தது. யுத்தத்துக்குப் பிறகும் முஸ்லிம் லீக் பாகிஸ்தானை வற்புறுத்தினால் அதற்கிணங்கும் முறையில் ஏற்படக்கூடிய எதிர்ப்பைக் காங்கிரஸ் தைரியமாகச் சமாளிக்க வேண்டுமென அவர் நல்ல மேற்கோள்களுடன் விளக்கினார்; இடையில் பண்டித ஜவஹர் குறுக்கிட்டுப் பேசியபோது ராஜாஜி, முஸ்லீம் பொது ஜனங்களின் ஆதரவைப் பெற வேறு வழியிருந்தால் அவர் காட்டட்டும் பார்ப்போம் என அறைகூவி அழைத்தார். வீண் கனவு காண்பதில் பயனில்லையென்றும் காரியத்தைச் சாதித்துக் காட்ட வேண்டுமென்றும் அவர் திட்டமாகக் குறிப்பிட்டார். "ஜப்பான் நம்மைத் தாக்க வந்துவிட்டது: ஆகவே, நாம் நேரில் கவனிக்க வேண்டிய நமது யுத்தமாக இது இருக்கிறது. இந்த சமயத்தில் நாம் கைகட்டி வாய்மூடி வாளாவிருப்பது கூடாது. டில்லியில் கூடிய காரியக்கமிட்டி செய்த தீர்மானத்துக்கு அதிகமாகவும் காந்திஜி சமீபத்தில் எழுதிய வியாசத்தில் குறிப்பிட்ட விஷயத்துக்குப் புறம்பாகவும் நான் ஒன்றும் கேட்கவில்லை. இந்த சமயத்தில் இந்தியா பிரிந்து நிற்பது கூடாது" என அவர் எடுத்துச் சொன்னார்.



அ. இ. கா. கமிட்டியில்

ஸ்ரீமதி விஜயலக்ஷ்மி பண்டிட் ஒரு நிருபருடன் சம்பாஷிக்கிறார். அவர் புத்ரியும் அருகே நிற்கிறார்.

ராஜாஜி பிரேரணையை ஆதரிக்க எழுந்த ஸ்ரீமான் கே. சந்தானத்துக்குத் தலைவர் 5 நிமிஷ அவகாசம் தான் அளித்தார். அதற்குள் அவர் பல விஷயங்களைச் சுருக்கமாக எடுத்துக் கூறி விளக்கினார்.

போட்டித் தீர்மானம்

இந்தச் சந்தர்ப்பத்தில் ஸ்ரீ ஜகத்நாராயணலால் நாட்டைத் துண்டாட எவ்வித முயற்சியும் செய்யக்கூடாதென்ற கொள்கையை வற்புறுத்தி ராஜாஜிக்குப் போட்டியாக ஒரு பிரேரணை கொண்டு வந்தார். ஸ்ரீமான் டி. பிரகாசம் அதை ஆதரித்தார். சென்னை மாகாணம் ராஜாஜியின் பிரேரணையை ஆதரிக்கவில்லையெனக் குறிப்பிட்டார். அதன்பின் காரியக் கமிட்டி அங்கத்தினர்கள் இருவர் பேசினார்கள். ராஜன்பாபு "தேசிய சர்க்கார் ஏற்படுமென்ற நிச்சயம் எங்கே இருக்கிறது? நிருவாக சபை ராணுவ விஷயத்தில் நெருங்கி ஒரு காரியமும் செய்ய முடியாத நிலையில் நாம் சமரஸம் பேசிப் பயன் என்ன என்று கேட்டார். முஸ்லீம் லீக் கேட்பதென்ன வென்றே தெரியவில்லை?" என்றும் சொன்னார். லீக் காங்கிரஸுடன் சேர்ந்து சுயேச்சைக் கோரிக்கையை வெளியிடச் சித்தமாகவிருக்கிறதா என பண்டித ஜவஹர் கேட்டார். தேசீய சர்க்கார் அமைப்புக்கே அது விரோதமாக விருக்கிறது என்றும் சொன்னார், ஜனாப் மெஹரலி அபேதவாதக் கட்சியினர் சார்பாகப் பேசுகையில், பாகிஸ்தானைப்பற்றிப் பேசவே கூடாதென்றும், அது முஸ்லிம்களுக்கும் பாதகம் விளைக்கக் கூடிய திட்டம் என்றும் சொன்னார். போதிய அவகாசமில்லாவிட்டாலும் ராஜாஜி விவாதத்துக்குப் பதிலளிக்கையில் சபையினருக்குத் தம் கட்சியை எடுத்துச் சொல்லித் திருப்தி உண்டுபண்ண மீண்டுமொரு முயற்சி செய்தார் "ராஜ தந்திரிகள் எப்போதும் பிறர்மீது குற்றங்களைச் சுமத்திக் கொண்டிருக்கமாட்டார்கள். சந்தர்ப்பத்திற்கேற்றவாறு ஏதாவது காரியம் செய்வார்கள். ஆனால் நாம் இங்கு என்ன செய்கிறோம்? தேசீய சர்க்கார் ஏற்படுவதற்கு நாம் இதுவரை என்ன செய்தோம் என்பதை நினைத்துப் பாருங்கள்! இந்த நெருக்கடிக்குப் பிரிட்டிஷார்தான் காரணம் எனச் சொல்லிக்கொண்டிருப்பதில் பயனில்லை. தேசீய ஒற்றுமைதான் முதலில் வேண்டும். அது திடீரென ஆகாயத்திலிருந்து இறங்கி வராது. ஸ்ரீ ஜகத்நாராயணர் பிரேரணையை ஏற்றுக்கொண்டால் சமரஸத்துக்கே வழியில்லாது போய்விடுமாகையால், அதை ஏற்றுக்கொள்ளக்கூடாதென நான் சபையினரை வேண்டிக் கொள்ளுகிறேன்" என்றார். மௌலானா ஆஸாத் தமது முடிவுரையில் சென்ற ஐந்து வருஷங்களாக முஸ்லிம் லீகுடன் சமரஸம் செய்துகொள்ள எடுத்துக் கொண்ட முயற்சி எதுவும் பலிக்கவில்லை யென்றும் இப்போது ராஜாஜி செய்த ஏற்பாட்டால் ஏதாவது சமரஸம் ஏற்படுமா என்ற நம்பிக்கையும் அடியோடு போய்விட்டதாகவும் சொன்னார். அதோடு அவர், இரு ஸ்தாபனங்களின் பிரதிநிதிகளையும் ஒன்றுகூட்டி ஒரு ஒப்பந்தத்துக்கு வந்திருக்கவேண்டுமென்றும், இப்போது காரியக்கமிட்டியிலிருந்து ஐவரைத் தெரிந்தெடுத்தனுப்பத் தாம் தயாரென்றும், அவர்கள் லீக் பிரதிநிதிகள் ஐவரோடு கலந்து பேசி ஒரு ஒப்பந்தத்துக்கு வரட்டுமென்றும், காரியம் பலிக்காவிட்டாலும் முயற்சி செய்வதில் தவறில்லை யென்றும், பாகிஸ்தான் இஸ்லாமியக் கொள்கைக்கே மாறானதென்றும் குறிப்பிட்டார். கூட்டம் முடியுமுன் ராஜாஜி மீண்டும் மேடைக்குவந்து சென்னையில் கூட்டு மந்திரி சபை அமைப்பதுபற்றிய தீர்மானத்தைப் பிரேரிக்கத் தமக்கு அவகாசமில்லையென்றும், ஆனால் அந்தக்கொள்கையைத் தாம் கைவிடவில்லையென்றும் சென்னை ஒரு காலத்தில் துண்டிக்கப்படலாமென்றும், அப்போது அகில இந்தியக் காங்கிரஸ் கமிட்டி பொதுவாக அகில இந்தியாவுக்குமாக ஒரு கொள்கையை நிர்ணயிப்பது கஷ்டமாக முடியுமென்றும் குறிப்பிட்டார். ஸ்ரீமான் சத்தியமூர்த்தி இந்தப் பிரேரணையையும் விவாதமின்றி ஓட்டுக்கு விட்டுவிடலாம் என ஒரு யோசனை கூறினார். ஆனால் அதற்குள் கூட்டமே கலைந்து விட்டது.



தலைவர்கள் வருகை

1. ராஜன்பாபு, ஸ்ரீ சங்கரராவ்தேவ், ஸ்ரீ அச்சுத பட்டவர்த்தன், 2. ஸ்ரீ ஜயராம்தாஸ் தௌலத்ராம், ஸர்தார் படேல் முதலியோர்.

சித்திரமும் சிருங்காரமும்

★

சமீபத்தில் ஸினிமாத் தொழில் சம்பந்தமாக மஹா கனம் டாக்டர் முகுந்த ராம் ஜயகர் தெரிவித்த அபிப்பிராயம் பிரசுரமாகியது. இவ்வாரம் உலகப் பிரசித்தி பெற்ற தத்துவ சாஸ்திர நிபுணரான ஸர் ஸர்வேபள்ளி ராதாக்ருஷ்ணன் அதே விஷயமாக வெளியிட்ட கருத்துகள் பிரசுரமாகின்றன. இதன் மூலம் பிறர் எண்ணுவதுபோல் ஸினிமாத் தொழில் கேவலமானதல்ல என்பதும், பிரபலஸ்தர்களும் இத் தொழிலை ஆரம்பிப்பது கடமை என நினைத்து வருகின்றனர் என்பதும் புலனுகும். ஸர் ராதாக்ருஷ்ணன் கூறியிருக்கும் விஷயங்கள் படத்தைத் தயாரிக்கும் ஒவ்வொருவரும் ஊன்றிப் பார்க்கவேண்டியதாகும்.



சமீபத்தில் ஸர் ராதாகிருஷ்ணன் லாஹூரில் குருகுலமோன்றில் பிரசங்கம் செய்தபோது எடுத்த படம்.

தத்துவ சாஸ்திரி கருத்து.

உலகப் பிரசித்தி பெற்ற தத்துவ சாஸ்திரியான ஸர் எஸ். ராதாகிருஷ்ணன், சினிமாத் தொழில் சம்பந்தமாகக் கொண்டிருக்கும் சில கொள்கைகளைக் கீழே காணலாம். சமீபத்தில் "பிலிம் இந்தியா" பத்திரிகா நிருபர் அவரைப் பேட்டியிட்டு, அவரது அபிப்பிராயத்தை அறிந்து கொண்டார். இப்போது அந்தப் பேட்டியிலிருந்து சில பகுதிகள் அடியில் பிரசுரமாகின்றன. ஸர் ராதாகிருஷ்ணன், ஒரு பீடக் காட்சியைப் பார்த்துவிட்டு ரயிலில் பிரயாணம் செய்துகொண்டிருந்தார், அச்சமயம் அவருடன் சம்பாஷித்து அந்த நிருபர் அவர் மனதில் இருப்பதை அறிந்துகொண்டார்.

"நமது நாட்டினருக்கு இயற்கையாகவே தமது மதத்தில் சிரத்தையும் பக்தியும் இருப்பதால் அவர்களுக்குப் புராணக் கதைகளில் அதிக விருப்பம் இருக்கிறது என்பது எனக்குத் தெரியும். புராணப் படம், எந்த பாஷையிலிருந்தாலும் சரி, பொது மக்களால் பெரிதும் பாராட்டப்படுகிறது: காரணம் இது தான். படத்தில் வரும் சம்பவங்களை அவர்கள் முன்பே அறிவார்கள்: படத்தைப் பார்த்ததும் தாங்கள் தெரிந்த விஷயங்கள் உடனே அவர்களது ஞாபகத்திற்கு வருகின்றன.

"ஒரு விஷயம். நாட்டில் புராணக் கதை மோஹம் சற்று அதிகமாகவே இருக்கிறது. பண்டைய காலத்திய லக்ஷியங்களை நாம் தள்ளி விடாமல், தற்கால நிலைமைக்கேற்ப அவற்றை எடுத்துக்காட்ட வழிதேட வேண்டும். பல மாகாணங்களிலும் சினிமாத் தொழிலில் ஈடுபட்டிருப்பவர்களில் ஒரு சிலர் இம்மாதிரி புராணக் கதைகளைப் படம் பிடிப்பதை நிறுத்தி வைக்க வேண்டும்: எல்லோருமே கூட இவ்விதம் செய்யலாம். இந்நாட்டில் இத் தொழிலை ஆரம்பித்து 20 வருஷங்கள் ...

நம் தினசரி வாழ்க்கையையும், நம் சமூகம், பொருளாதாரம் ஆகியவற்றைத் தழுவிய பிரச்னைகளையும் அடிப்படையாகக் கொண்ட படங்களைப் பிடிப்பதே பயன் தரும், தற்காலத்தவர் புரிந்துகொள்ள வேண்டுமானல் தற்கால சம்பவங்களைப் பிரதானமாகக் கொண்டு படம் பிடிக்க வேண்டும்.

"இந்திய சரித்திரத்தைப் படித்தோமானல், எவ்வளவு பெரியார்களைப்பற்றிய படங்களை நாம் தயார் செய்யமுடியும் என்பது நமக்குத் தெரியவரும். பல ஊர்களைப்பற்றிய படங்களையும், டாகுமெண்டரி படங்களையும், செய்திப் படங்களையும், சிறு படங்களையும், அமெரிக்காவைப் போல் நாமும் தயாரிக்க வேண்டும்." இது விஷயமாக சமீபத்தில் முயற்சி செய்யப்பட்டதை நான் அறிவேன். ஆனல் இதில் தீவிரமாக ஈடுபடாதது எனக்கு வருத்தமாக இருக்கிறது."

ஹாலிவுட்டில்போல் தொழில் உன்னத நிலையை அடைவதற்கு உதவும் வசதிகள் இந்தியாவில் போதிய அளவுக்கு இருக்கின்றனவா என்று வினவப்பட்டபோது. ஸர் ராதாகிருஷ்ணன் பின்கண்டபடி தெரிவித்தார். "ஆம், இருக்கின்றன. இங்கு மட்டும் முனைந்து முயற்சி பண்ணினல் முடியாதது ஒன்றுமில்லை என்பது எனக்குத் தெரியும். மேலும் பல யுவர்களும், சர்வகலாசாலைப் படிப்பு பெற்ற இளைஞர்களும் பெண்மணிகளும் இத்தொழிலில் ஈடுபட்டுவருகின்றனர். இது விஷயமாக வேண்டிய வளவுக்குப் பணம் கிடைத்தே வரும். முன்னேறிப் போய் கொண்டிருக்கும் இத்தொழில் மூலம் அதிக வருவாய் கிடைத்து வருவதே இதற்குக் காரணமாகும்.

"மனித சமூகத்திற்குப் பிரயோஜனகரமாயிருந்து அவர்களது சந்தோஷத்திற்கு வழிகாட்டும் ஒரு தொழிலைத் தடைப்படுத்துவதா? ஒழுக்கம், வினயம் நடத்தை இவற்றைப்பற்றி சம்பிரதாயக் கொள்கைகளை அனுஷ்டிப்பது உசிதமல்ல. எந்தத் தொழிலை எடுத்துக் கொண்டாலும், அதில் நல்லவர்களும் கெட்டவர்களும் கட்டாயம் இருந்தே தீருவர், ஆகவே வாழ்க்கையில் ஒவ்வொருவரது குணவிசேஷம் தான் முக்கியம். நல்ல குணமிருப்பது அவர்களுக்குத் தான் நல்லது. குணத்தின் மேன்மையை மற்றவர்கள் கூடியவரையில் உணரும்படிச் செய்ய வேண்டும். சினிமாத் தொழிலில் சேர்ந்வதை அனுசிதமாகக் கருதக் கூடாது. கடைசியில் பார்க்கப் போனல் ஒவ்வொரு தொழிலின் பெருமையும் இழுக்கும், அதை நிர்வகிக்கும் ஸ்திரீ புருஷர்களைத் தான் தழுவியிருக்கிறது. தகுதியானவர்கள் தொழிலை நிர்வகித்தால் அது சிறப்புடன் சோபிக்கிறது: மேன்மையுடனும் விளங்குகிறது: மற்றவர்களுக்கு பெருமை தருகிறது: இம்மாதிரி உன்னத நோக்கம் கொண்டவர்களை நாம் அடைய வேண்டும், இச்சமயம் நமது சினிமா ஸ்டுடியோக்கள் ஒழுக்கம் மிகுந்தவர்கள் பஹிஷ்கரிக்கும்படியான ஸ்திதியில் இல்லை என்பதை நான் எடுத்துக் கூற வேண்டும்: இப்போது இந்தத் தொழிலில் ஏதாவது ஆக்ஷேபகரமான அம்சங்கள் இருந்தாலும், அதில் ஆக்ஷேபிக்கத் தகாதவர்கள் வந்து ஈடுபட்டால், அந்த அம்சங்கள் மறைந்துவிடும்.

"நமது பொழுதுபோக்குக்கு சாதனங்களாக இருப்பவர்களுடன் நாம் சேரக்கூடாது என்று நாம் எண்ணினல், அது நமக்கு நன்றியறிவில்லை என்பதையே குறிப்பிடும்: இது உதாசீனத் தன்மையைக் காட்டும். நாம் விபரீத மனேபாவம் கொள்ளக் கூடாது. நம் நாட்டில் சினிமாப் படங்கள் நிரந்தர ஸ்தானத்தைப்பெற்றிருக்கின்றன. ஆகவே நாம் அவற்றைக் கூடிய அளவுக்குப் பயன்படுத்திக் கொள்ளவே முயல வேண்டும்."

இதற்கப்புறம் ஸர் ராதாகிருஷ்ணனுடன் ஸ்திரீ புருஷ சமத்துவம்பற்றி பிரஸ்தாபிக்கப்பட்டபோது அவர் பின்கண்டபடி கூறினர்: "நமது சமூகத்தில் ஸ்திரீ புருஷ சமத்துவம் அதி அவசியம் தான். இரு தரப்பாரும் போட்டியிடாமல் அந்நியோன்யத்துடன் நடந்து கொள்ளவேண்டும் என்பது என்னுடைய கருத்து. தேக அமைப்புகள் வேறுபட்டிருந்த போதிலும் அவர்களது ஐக்யபத்யத்திற்கு அதனல் பாதகம் இல்லை. அவர்களது தேக அமைப்பு புருஷர்களை உத்சாகப்படுத்துவதாய் இருக்கிறதே தவிர புருஷர்போல் நடந்துகொள்ள உதவுவதாய் இல்லை. பலவிதமாகப் உருப்படுத்தவல்ல களிமண்போன்றது தாய் வளர்க்கும் குழந்தை!

"இந்த நாகரீகத்தில் இருக்கும் சில தோஷங்களை ஸ்திரீகள் தான் பரிஹரிக்கமுடியும். யுத்தம், தேசவிரோதம் இவை தான் அந்த தோஷங்களுள் முக்கியமானவை. யுத்தத்தை நிறுத்தவும், சமாதான முறையில் மானிடவர்க்கத்தின் பிரச்னைகளைத் தீர்த்து வைக்கவும், சத்யாக்ரஹக் கோஷ்டிகளை ஸ்திரீகள் ஆரம்பிப்பது கடமையாகிறது. பைத்தியம் பிடித்தவர்களின் பேராசை பூர்த்தியாவதற்காக, தங்கள் வயிற்றில் பிறந்த குழந்தைகள் உயிரை இழக்கக்கூடாது என்று கூற அவர்களுக்குத் தான் உரிமை உண்டு.

"ஒவ்வொரு நாட்டிலும் ஸினிமாக்காரர்கள் இந்தக் காரியத்தை நிறைவேற்ற முன் வந்தால் திருப்தி தரும். பயன்தரும் பிரசாரத்திற்குப் படங்கள் தான் பிரதானம்: இந்தக் கடமையை எந்த ஸ்டுடியோ வேண்டுமானு...

FREE! (1) How to Enjoy Married Life. (2) How to Make Various Kinds of Scented Hair Oils and Perfumes at Home at a very Cheap Cost.

Please apply at once to:—

S. PAUL & Co., Dept. S. M.
4, Hospital St., Dharamtola CALCUTTA.

"எங்கு பார்த்திருக்கிருய்?"

பிரபாவுக்கு தலை சுழல ஆரம்பித்தது. கொஞ்சம் தன்னை திடப் படுத்திக் கொண்டு "ஒரு தடவை எங்கள் அரண்மனை அருகில் இவர் பாடிக் கொண்டிருந்தார், என் தோழி உமா இவரைக் கூப்பிட்டுக் கொண்டு வந்து எனக்கெதிரில் பாடச் சொன்னுள். அப்பொழுது!" என்ருள்.

"என்ன பாட்டு?"

பிரபாவுக்கு மேலும் மேலும் கிளம்பும் கேள்வியைக் கண்டு 'இதில் ஏதோ ஒருவிஷயம் இருக்கிறது. சரி பார்க்கிறேன் என்று தனக்குள் நினைத்துக் கொண்டு அவருடைய பாட்டு அப்படியும் பூராவாக இல்லை!" என்ருள்.

"என்ன பாடினன்?" என்று சிரித்த வண்ணம் கேட்டான் அவன்.

இந்தக் கேள்விக்குப் பதில் சொல்லி விட்டால் பாக்கி என்ன இருக்கிறது; இன்று ஏதோ விபரீதம் தான்! என்று அவளுக்குத் தோன்றி விட்டது. யோசனையில் ஆழ்ந்து நிர்கதியாக நின்று "சூர்தாஸரின் ஏதோ ஒரு விருத்தம்" என்ருள்

"இதுதானு" என்று அதன் முதல் அடியைப் பாடிக்காண்பித்தான்.

பிரபாவின் கண் முன் எல்லாம் இருண்டு விட்டதுபோலிருந்தது. தலை சுழல ஆரம்பித்தது. நிற்க முடியாமல் உட்கார்ந்து விட்டாள். திரும்பவும் நம்பிக்கை இழந்த குரலில் "ஆம்! இதே விருத்தம்தான்!" என்று சொல்லி விட்டு கொஞ்சம் தொண்டையை சரிப்படுத்திக் கொண்டு "தங்களுக்கு எப்படித் தெரிந்தது?" என்று கேட்டாள்.

"இந்த யோகி அடிக்கடி என்னிடம் வருவது வழக்கம். எனக்கும் அவர் பாட்டு மிகவும் பிடித்திருக்கிறது. அவரே என்னிடம் இந்தத் தகவலைச் சொன்னர். ஆனல் இதைத்தான் சொன்னர். நீயும் அவர் பாட்டை ரொம்ப விரும்புவதாகவும் திரும்பவும் அவரை வரும்படி நீ கட்டளையிட்டதாகவும் சொன்னர்" என்ருன்.

பிரபாவுக்கு உண்மையை நிரூபிக்கச் சந்தர்ப்பம் கிடைத்தது "இது சுத்தப் பொய், நான் அவரிடம் ஒன்றும் சொல்லவில்லை!" என்ருள்.

அப்படித்தான் நானும் முதலில் நினைத்தேன். இதெல்லாம் அவர்களுடைய வாக்கு சாதுர்யம்! பெருமை படுத்திக்கொள்வது என்பது இவரது வழக்கம். ஆனல் இதில் என்ன கண்டு பிடிக்க இருக்கிறது? அவருடைய பாட்டோ பூர்த்தியாக இல்லையே?"

"இல்லை! நல்ல விஷயத்தை யார் பூர்த்தியாகச் சொல்வார்?"

"திரும்பவும் அவர் பாட்டை கேட்கவேண்டுமானல் அவரைக் கூப்பிடுகிறேன், என் உத்திரவுக்காக வருவார்," என்ருன்.

அவருடைய தரிசனம் திரும்பவும் கிடைக்குமா என்ற ஆசையினல் பிரபாவின் முகம் மலர ஆரம்பித்தது. ஆனல் அவள் எதை பல மாதங்களாக மறக்கடித்துக் கொண்டிருந்தாளோ அதை இப்பொழுது புத்துயிர் பெறச் செய்வதா என்று யோசித்தவண்ணம் "இந்த வேளையில் பாட்டு கேட்க என் மனம் விரும்பவில்லை" என்ருள்,

"அதெல்லாம் நான் கேட்க மாட்டேன். நீ பாட்டு கேட்டாலும் கேட்காவிட்டாலும் நான் அவரை இப்பொழுது இங்கே கூப்பிடத்தான் போகிறேன்" என்று சொல்லிய வண்ணம் ராஜகுமாரன் வெளி அறைப் பக்கம் சென்ருன். பிரபா அவனை பின் தொடரவில்லை. அவள் ஒரே யோசனையில் ஆழ்ந்திருந்தாள். மனதில் சந்தோஷத்தின் அலை பெரிது பெரிதாக வந்து மோதிக்கொண்டிருந்தது. ரொம்ப கஷ்டத்துடன் பத்து நிமிஷத்தைக் கழித்தாள். பிறகு வீணையின் இன்னிசையும் பாட்டின் நாதமும் கிளம்பின. அந்த இனிமையான கானம் அவளை ஸ்தம்பிக்கச் செய்தது.

அதே ஹிருதயத்தைப் பிளக்கும் குரலும் ஆனந்த மயமான ராகமும் அவளை மோஹிக்கச் செய்தது. கொஞ்ச நேரத்திற்கெல்லாம் அந்த யோகியின் உருவம் தென்பட்டது. அதே உடை, குரு குருப்பான பார்வை, தேவ கானத்தை ஒத்த குரல், முகத்தில் புன்சிரிப்பு—எல்லாம் முதல் பார்த்ததுபோலவே! பிரபா சங்கோசத்துடனேயே யோகியின் பக்கம் திரும்பிப் பார்த்தாள். திடீரென்று அவளுடைய மனது பட படவென்று அடித்துக்கொண்டது. அவள் கண் முன் நின்றுகொண்டிருந்த ஒரு திரை விலகியது. கண்களில் நீர் ததும்ப கணவனின் பாதங்களில் விழுந்து நமஸ்காரம் செய்தவண்ணம், "அன்பே!" என்ருள்.

ராஜகுமாரனுக்கு இன்று உண்மை தெரியவந்தது. தன் கையினல் பிரபாவை தூக்கி மார்புடன் அணைத்துக்கொண்டான். இருவரும் அப்பொழுதே ஒரே ஆத்மாவாக ஆனர்கள்.

"நான் ஏன் இந்தமாதிரி செய்தேன் தெரியுமா? எனக்கும் பாட்டில் ரொம்பப் பிரியம். அதுபோல் நீயும் விரும்புவதாகக் கேள்விப்பட்டேன். என் ஹிருதய கமலத்தில் அரசு புரியச் செய்ய உன்னை ஒரு தடவை பார்க்கவே இந்த மாதிரி உபாயம் செய்தேன்!" என்ருன்.

"யோகியாக இருந்து எது செய்தீர்களோ, அதையே ராஜாவாக இருந்து செய்திருந்தால் ஒன்றும் பலித்திராது. நீங்கள் இப்பொழுது எனக்கு மிகவும் அன்புள்ளவரும் கணவருமாக இருந்தும் என்னை ஏமாற்றிவிட்டீர்கள், மேலும் அது என்னுடைய ஆத்மாவை களங்கம் செய்துவிட்டதே? அதற்கு யார் பொறுப்பாளி?" என்ருள்.

"நம் இரவு இவ்விதம் முடிந்தது": என்ற படத்தில் நடிக்கும் மார்கரெட் ஸல்லவன், ப்ரேடரிக் மார்ச், ப்ரான்ஸிஸ் டீ,

லும் மேற்கொள்ளலாம். படத்தின் மூலமாகப் பலருக்கும் சுலபமாக விளங்கும்படிச் செய்வது தான் சரி. ரேடியோ, புத்தகங்கள், இவற்றைக் காட்டிலும் படங்கள் தான் அதிக பிரசார சக்தி வாய்ந்தவை. படத் தொழிலில் இருப்பவர்களுக்கு கடமையை நாம் சுட்டிக்காட்டுவது அவசியமாகும். அவர்கள் என் வார்த்தையை மதித்தால் எனக்கு ஏற்படும் சந்தோஷத்திற்கு எல்லையே இராது."

* * * *

மார்கரெட் ஸல்லவன்

ஹாலிவுட்டில் இருந்து வரும் ஒருவிபரீதத்தைக் குறிப்பிடாமல் இருக்க முடியாது. மார்கரெட் ஸல்லவன் தோன்றும் படங்களில் எல்லாம் அவர் மெலிந்த உடலும் குறும்புப்பார்வையும் கொண்டவர் போல் தான் காணப்படுகிறார்: அதிகம் பேசுவதும் கிடையாது: அப்படி ஏதாவது பேசினாலும் அது ரகஸ்யம் போலத்தான்: புன்சிரிப்புக்கு அதிகமாக முகத்தில் குறி கிடையாது. அவரை நேரிலோ அல்லது அவரது போட்டோவையோ பார்த்தவர்கள் அவர் படத்தில் காண்பது போல் ஒல்லியாகவும் திடமற்றவராகவும் இல்லை என்பதை அறிவார்கள். ஆனால் தன் இயற்கை நிலைக்கு மாறாக அவர் படத்தில் நடிப்பது ஆச்சரியப்படத்தக்கதாகும்,

லோ-லுவின் தயாரித்த யுனைடட் ஆர்டிஸ்ட் ரிலீஸான "இவ்விதம் நம் இரவு முடிந்தது" என்ற படத்தில் ருத் ஹாலண்ட் வேஷத்தில் மார்கரெட் ஸல்லவன் நடிக்கிறார்; இந்த படத்தில் ப்ரெடரிக் மார்ச், ப்ரான்ஸிஸ்டீ முதலியவர்களும் நடிக்கின்றனர். இது எல்பின்ஸ்டன் தியேட்டரில் இம்மாதம் 9-ம் தேதி முதல் காட்டப்படும். இந்த வேஷத்தில் அவருக்கு தமது திறமையைக் காட்ட அதிக சந்தர்ப்பம் வாய்த்திருக்கிறது. முந்திய படங்களில் எல்லாம்அவருக்கு அவ்வளவாக சந்தர்ப்பம் கிடைத்ததில்லை. இந்தப் படத்தில் அவர் சிரித்து விளையாடுவதைக் காணலாம். முன்பெல்லாம் கதை முடியும் போது அவர் இறந்து விடும் காட்சி தவறாமல் இருந்துவந்தது. ஆனால் இதில் அவர் சந்தோஷமாக இருக்கிறார். இந்தப் படத்திலும் அவரை சோகரஸம் விட்டபாடில்லை யாயினும், முந்திய படங்களைவிட இது எவ்வளவோ மேல்! ஹாலிவுட்டில் மாக்கரெட் ஸல்லவனைப் பற்றி இருந்துவந்த கருத்து மறைந்து இப்போது தான் அங்குள்ளவர்கள் அவரிடம் அன்பு காட்டவாரம்பித்திருக்கின்றனர்.

1933-ல் முதன் முதல் மார்கரெட் மேஞ்டு சென்றார்: "நேற்று தான்" என்ற படத்தில் அவர் நடிக்க ஏற்பாடாகியிருந்தது. ஆரம்பத்தில் ஸ்டூடியோக்களில் இவரைக் கண்டால் ஒருவருக்கும் பிடிக்காது. முதலில் இவர் நாடகமேடையில் நல்ல பெயர் எடுத்தவர்: நாடக மேடை மீது இவருக்கேற்பட்ட அபிமானத்திற்கும், மதிப்புக்கும் அளவே கிடையாது அந்நாளில். முக்கிய வேஷம் ஒன்று அளிக்கப்பட்டதால்தான் இவர் படத்தில் நடிக்க சம்மதித்தார். ஹாலிவுட்டில் வந்தபிறகு படத்தொழிலை இவர் சற்று வெறுத்தார். ஹாலிவுட்டில் இருக்கும் நடிகைகள் தங்களது நடிப்புத் திறமை மூலமே தங்களது காரியத்தை நிறைவேற்றி வந்தனர். ஆனால் மார்கரெட் அவ்வாறு செய்யாமல் தம் மனதில் தோன்றியதைப் பஹிரங்கமாக எடுத்துக் கூற வாரம்பித்துவிட்டார், விஷயம் பிடிக்காவிட்டால் அதை ஒளிவுமறைவின்றி வெளியிடும் ஸ்வபாவம் இவருக்கு உண்டு. ஒரு பெரிய மனுஷ்யனிடம் பற்றுதல் தோன்றாவிட்டால் அவருடன் பழக இவர் விரும்பமாட்டார். யாராவது பேட்டியிட வந்தால் தமது மனதில் புதிய கருத்துகள் உதயமாயிருந்தால் தான் பேட்டியளிப்பது வழக்கம்: இல்லாவிட்டால் பேட்டியளிக்க இவர் மறுத்துவிடுவார்: இதைப் பெரிய குற்றமாகக் கருதினர். மற்றவர்கள்.

இவர் நடித்த ஒவ்வொரு படமும் பார்ப்பவர்களை மேலும் மேலும் திருப்தி பண்ணிக் கொண்டே போனபோதிலும், இதர நடிகைகள் இவரிடம் அபிமானம் காட்டவில்லை: "சிறியவரே, இப்போது என்ன?" "நலம் தரும் தெய்வம்" "ரோஜா இவ்வளவு சிகப்பா?" ஆகிய படங்கள் யாவும் நல்ல பெயர் சம்பாதித்தன: ஆனால் அவற்றில் நடித்த பிரதான நடிகையை மட்டும் இதரர்கள் மகிழ்ச்சியுடன் பாராட்டவில்லை.

1936-ல் மார்கரெட் ஸல்லவன் பிராட்வேக்கு திரும்பினார்: மூன்று வருஷம் தான் ஹாலிவுட்டில் காலத்தைக் கழித்தார். "நாடக மேடைக் கதவு" என்ற நாடகத்தில் அவர் நடிக்க ஏற்பாடாகியிருந்தது ஸினிமாவில் பிரக்யாதி பெறுவதில் விருப்பமில்லாமல் நாடக மேடையில் தோன்றுவதை அபேக்ஷித்த ஒரு நடிகையை அடிப்படையாகக் கொண்டது இந்தக் கதை. திரும்பியது பயன் தரவில்லை. நாடகத்தைப் பார்த்தவர்கள் இவரிடம் முன்போல் திருப்தி காட்டவில்லை. மறுபடியும் இவர் ஹாலிவுட்டுக்கே திரும்பினார்: அப்போது இவர் மனம் அதிகமாக மாறிவிட்டது. ஹாலிவுட்டில் இருப்பதிலேயே திருப்திகொண்டவர் போல் இவர் தென்பட்டார்: இது அவரது நடவடிக்கையிலிருந்து வெளிப்பட்டது முன்போல் படத்திற்கும் தமக்கும் சம்பந்தமில்லை என்ற உணர்ச்சி இவரிடம் இல்லை. லீவண்ட் ஹெவர்ட் என்பவரை இவர் மணந்ததும் ஹாலிவுட்டில் இவருக்கு ஒரு நிரந்தர ஸ்தானம் வழங்கப்பட்டது: "மூன்று தோழர்கள்" "கடையில் மெலிந்த அழகி" "மூலையில் இருக்கும் கடை" "மார்டல் ஸ்டார்ம்" முதலிய படங்களில் இவர் காட்டிய நடிப்பு பெரிதும் பாராட்டப்பட்டது.

பார்வையை இழந்தவர்

வாஷிங்டனைச் சேர்ந்த லாஸன் தம்பதிகள் சமீபத்தில் பகலில் விமானப்படையெடுப்பு காரணமாகப் பார்வையை இழந்தனர். ஸெயிண்ட் டன்ஸ்டன் விடுதியில் அவர்கள் பயிற்சியும் சிகிச்சையும் ஏற்று வருகின்றனர். இவ்விருவரும் ஏககாலத்தில் பயிற்சிபெற்று வருவது குறிப்புக்குரியதாகும். மிஸ்டர் லாஸன் டெலிபோன் ஆபரேட்டராகவும் மிஸஸ் லாஸன் டைபிஸ்டாகவும் வேலை செய்ய பயிற்சி பெற்றிருக்கின்றனர். பயிற்சி காரணமாக மிஸஸ் லாஸன் ஒரு புஷ்பத்தைப் பார்ப்பதை மேலே காணலாம்.

விண்ணப்பம்

—:0:—

தயவு செய்து தங்கள கடிதங்களை இனிமேல கீழ்க் கண்ட எங்கள் விலாசத்திறகு எழுதக கோருகிறோம.

Dr. பிள்ளா பாபய்ய பாத்ருடு & பிரதர்

ஈரல் குலைக்கட்டி வைத்திய நிபுணர்கள்

7, சாரங்கபாணி ஸ்வாமி கோயில் கீழ வீதி,

கும்பகோணம்.

திருச்சி பிராஞ்சு:

8, ஆண்டார் தெரு, தெப்பகுளம், திருச்சி.

பாத்ருடுவின் "பால சஞ்சீவினி"

குழந்தைகளின் ஈரல் குலைக்கட்டிகளை குணப்படுத்தும்.

பிராஞ்சு:- பேனிங்டன் ரோடு, தஞ்சாவூர்.

(16-ம் பக்கத் தொடர்ச்சி)

"நன்றாக இருக்கிறது! அது ஒருக்காலும் முடியாது. என்னை கல்யாணம் செய்து கொள் என்று நான் உன்னைக் கேட்டால், நீ சம்மதிப்பாயா? மாட்டவே மாட்டாய். பெரிய பெரிய ராஜகுமாரர்கள் இருக்க என்னை உன் உயிர் போனாலும் கல்யாணம் செய்து கொள்ளமாட்டாய்! அதே போல் தான் என் உயிர் போனாலும் நான் ஒரு பொய்யும் சொல்லமாட்டேன்" என்றான்சந்திரன்

ராஜகுமாரி சற்று யோசித்தாள். பிறகு, "நான் உன்னைக் கல்யாணம் செய்துகொண்டால் அப்பொழுதாவது மயிலைக் கொடுப்பாயா? என்று கேட்டாள்.

"சம்மதிப்பேன். ஆனால்என்னை கல்யாணம் செய்துகொள்வதாகப் பிரமாணம் செய்து தருவாயா?" என்றான் சந்திரன்.

"அப்படியே செய்கிறேன்" என்றாள் அவள். உடனே சந்திரன் அந்த மயிலை ராஜகுமாரியிடம் கொடுத்துவிட்டான். ராஜகுமாரியும் 'கல கல' வென்றுசிரித்துக்கொண்டு மாயமாக ஓடிவிட்டாள்.

மறுநாள் தர்பாரில், உதயபுரி அரசன் வீற்றிருந்தான். சந்திரன் அவருக்கு முன்பு ஆஜராகி நமஸ்காரம் செய்தான். பாஞ்சால அரசனும் ராஜகுமாரியும் தாங்கள் செய்த தந்திரம் வெற்றிபெற்று விட்டதென்று சந்தோஷத்துடனிருந்தனர்.

"என்ன சமாசாரம் சந்திரா?" என்று கேட்டான் உதயபுரி அரசன்.

"வருந்தத்தக்க சமாசாரம் அரசே! நமது அழகிய மயில் ஒன்று போய் விட்டது" என்றான்.

"என்ன நிஜமாகவா?" என்று ஆச்சரியத்துடன் கேட்டான் அரசன்.

"ஆம் அரசே. என்னை மன்னித்து விடுங்கள்" என்றான் சந்திரன்.

"என்ன எப்படி அது தொலைந்தது?" என்று சற்று கோபத்துடன் கேட்டான் அரசன்.

"ஒரு அழகிய பெண் என்னை கல்யாணம்செய்து கொள்வதாயும், அதற்கு பரிசாக அந்த மயில் அவளுக்குவேண்டுமென்று கேட்டாள். கொடுத்துவிட்டேன்" என்றான்.

"எந்த அழகிய பெண்? யார் அவள்? என்னைக் கேட்காமல் நீ எப்படிக் கொடுக்கலாம்?" என்று கோபத்துடன் கேட்டான் அரசன்.

"அதோ உமக்குப் பக்கத்தில் உட்கார்ந்திருக்கும் பெண்-ராஜகுமாரி தான். நான் செய்தது தப்பிதம் தான் அரசே. அதை உங்களிடம் சொல்லிவிடலாம் என்று தான் வந்தேன்" என்றான்.

பாஞ்சால அரசனுக்கும், ராஜகுமாரிக்கும்முகத்தில் அசடு வழிந்தது! ஏனெனில் சந்திரன் நிஜத்தைச் சொல்லிவிட்டான் அல்லவா!

உதயபுரி அரசன் ஆச்சரியத்துடன் நடந்தவை என்னவென்று பாஞ்சால அரசனைக் கேட்க, பாஞ்சால அரசன் நடந்தவற்றை விவரமாகச் சொன்னான். உதயபுரி அரசனுக்குச் சந்தோஷம் தாங்கவில்லை.

"பலே சந்திரா, நீ நிஜத்தைச் சொல்லி என் பாதி ராஜ்யத்தை மிச்சப் படுத்தினாய் அல்லவா. ஆகையால் அந்த பாதி ராஜ்யம் உனக்கே கொடுத்தேன்" என்றான்.

விஜயபுரி அரசன் தான் பந்தயத்தில் தோற்றுப் போனதை ஒத்துக்கொண்டதுடன் தான் பந்தயத்தில் பேசிய பிரகாரம் பாதி ராஜ்யத்தையும் அதோடு கூட தன் மகளையும் சந்திரனுக்கே கொடுத்துவிட்டதாகச் சொல்லிவிட்டான்.

மறுநாள் சந்திரனுக்கும் ராஜகுமாரிக்கும் வெகு விமரிசையாகக் கல்யாணம் நடந்தது.

மீரா பாய்

(15-ம் பக்கத் தொடர்ச்சி)

மாய்ப் பிடித்துக்கொண்டார். அது யார்? கிரிதர கோபால் தான். உடனே மீரா ஸ்மரணையற்று பூமியில் விழுந்தாள். ஆனால் அவள் காதில் மட்டும் பின் வரும் வார்த்தைகள் விழுந்து கொண்டே இருந்தன.

காதில் விழுந்த வார்த்தைகள்

"நீ உன் கனவனின் உத்தரவை நிறைவேற்றி விடலாம். உனது பழைய பிராணன்போய் புத்துயிர் பெற்றாய். நீ புதிய வாழ்க்கையை துவக்கிவிட்டாய். இப் புது வாழ்க்கையுடன் நீ பிருந்தாவனம் போய் அங்கிருந்து உன் எஜமானனாகிய கிரிதரகோபாலனுடைய பெருமையையும் மகிமையையும் உலகமெல்லாம் பரவச் செய்!"

சித்தூரிலிருந்து பிருந்தாவனம் தொலை தூரமுள்ளது. அவ்வளவு தூரமும் மீரா நடந்தே சென்றாள். அதனால் அவளுக்கு அசதியாவது முகத்தில் களைப்பாவது தோன்றவே இல்லை.

'மேராதோ கிரிதரகோபாலா.
ப்ரபூ தூஸ்ரா நகோயீ'
(என் கிரிதர கோபாலை தவிர
மற்றொருவரும் எனக்கில்லை)

என்று அவளது பிரியமான பாட்டை பாடிக் கொண்டே சென்றாள். கிராமங்களில் ஆண்களும், பெண்களும், குழந்தைகளும் கூட, அப்பாட்டை பாட ஆரம்பித்தனர். போகும் வழியே கிராம ஜனங்களால் வரவேற்கப்பட்டாள். ஒவ்வொருவரும் பாலும் பழமும் கொண்டு வந்து சமர்ப்பித்தார்கள். கடைசியில் அவள் பிருந்தாவனம் போய்ச் சேர்ந்தாள். அங்கிருக்கும் ஒவ்வொரு கோவிலுக்குள்ளும் சென்று பூஜை செய்தாள்; ஓர் மரத்தடியில் உட்கார்ந்து ஜனங்களுக்கு உபதேசம் செய்தாள். மீராவின் பாட்டுக்கள் எங்கும் பரவ ஆரம்பித்தன, மீராவின் புகழ் ஒவ்வொரு தெருவிலும் சந்திலும் கூடப் பேசப்படுவது போஜ் ராஜாவின் செவிகளில் விழுந்தது. அப்பொழுதுதான் மீராவினிடத்தில் தவறாக நடந்து கொண்டதை அவன் உணர்ந்தான்: மீராவால் சித்தூர் ஒரு அவதூறுக்கும் இடமாகவில்லை. ஆனால் அழியாக் கீர்த்திக்கும் பெருமைக்கும் பாத்திரமாயிற்று என்பதை நினைக்கும் போது அவன் மிக்க சந்தோஷமடைந்தான்.

ராஜாவின் மன மாறுதல்

தாமதமின்றி மீராவிடம் சென்று மன்னிப்புக் கேட்டுகொண்டு அவளை சித்தூருக்கு அழைத்து வரவேண்டுமென்று எண்ணினான், அதன் பொருட்டு அவன் ஒரு பிச்சைக் காரனைப்போல் மாறுவேஷம் பூண்டு பிருந்தாவனம் சென்றான். அங்கு மீரா கோவில் படியின் மீது உட்கார்ந்து பாடிக்கொண்டிருந்தாள். அப்பாட்டு தேவகானம் போல் அவன் காதில் ஒலித்தது. இப்பொழுது மீரா மிகவும் மாறுபட்டிருந்தாள்; அவள் குரலிலும் மாறுபாடு தோன்றிற்று. அவள் கண்களில் பக்தியின் பிரகாசம் ஜ்வலித்தது. ஆனால் அவளது புன்னகை மட்டும் மாறவில்லை; மேவாரின் ராணியாய் இருந்தபொழுது இருந்த வண்ணமே இருந்தது. அதே பரிதாபகரமான முகம், அதே குற்றமற்ற புன்சிரிப்பு. போஜ ராஜா தன் இருகரங்களையும் பிசைந்து கொண்டே மெல்லிய குரலில் "நான் உன்னிடத்தில் ஒரு பிச்சை கேட்க வந்திருக்கிறேன்" என்றான். "நானே பிச்சைக்காரிதானே. இந்த பிச்சைக்காரியிடம் என்ன பிச்சையை நாடி வந்தாய்?" என்றாள். போஜராஜா தன் வேஷத்தைக் களைந்து விட்டு தன்னை மன்னிக்கும்படி வேண்டி நின்றான். என்னவானாலும் மீரா ஒரு பெண் தானே? அதிலும் ஹிந்து பெண் அல்லவா? தன் கணவர் என்று தெரிந்தவுடனே அவர் கால்களில் விழுந்து நமஸ்கரித்து எழுந்து நின்றாள். அவள் கண்களிலிருந்து ஆனந்தக் கண்ணீர் பெருகிக்கொண்டிருந்தது. ஆழ்ந்த ஆசையுடன் "என் கணவரே, என் அன்பரே, இவ்வளவு நாள் கழித்து கடைசியாக இப்பொழுதுதான் என்னைத் தெரிந்து கொண்டீர்களா?" என்றாள். பிறகு போஜ் ராஜாவும் மீராவும் சித்தூர் போய்ச் சேர்ந்தார்கள். சிறிது காலத்துக்குப்பிறகு போஜ் ராஜா இறந்துவிட்டான். அப்பொழுது மீராவுக்கு வயது இருபத்து மூன்று, கலியாணம் நடந்து பத்து வருஷங்கள்தான் ஆயின. அந்தப்பத்து வருஷங்களுள் மீரா எவ்வளவோ கஷ்டங்களுக்குள்ளானாள். கணவன் இறந்த பிறகு தன் முழு நாட்களையும் கோவிலிலேயே கழிக்கலானாள். போஜராஜாவுக்குப் பிறகு பட்டத்துக்கு வந்த அவன் தம்பியாகிய விக்கிரமஜித் மீராவை அனேக விதத்தில் துன்புறுத்தினான். மீராவின் நடத்தை மேவார் சாம்ராச்சியத்தின் கௌரவத்திற்குக் குறைவு என்று எண்ணி துஷ்டனான விக்ரமஜித்து மீராவுக்கு விஷத்தைக்கொடுத்து கொன்றான்.

வட இந்தியாவில் துளசிதாஸும், வங்காளத்தில் சைதன்னியரும், மகாராஷ்டிர தேசத்தில் துகாராம், ராமதாஸ் ஏக்நாதும் எவ்வாறு அழியா புகழுடன் விளங்குகின்றனரோ அவ்வாறே மீராவின் பெயரும் புகழும் நம் தேசத்தில் பக்தி என்பது நிலைத்து நிற்கும்வரையில் அழியாது விளங்கும்.

மூன்று அவசிய குடும்ப ஔஷதங்கள்.

இரண்டும் அணா 10. ஸ்ரீகா கஸ்தூரி கோரோஜனை மாத்திரை இரண்டும் அணா 10.

பாலக்ஸ்—பேதியாக மாத்திரை, —பாட்டில் அணா 4.

யுனைடெட் கன்ஸர்ன், 54, பந்தர்தெரு, மதராஸ் (மாடுங்கா)

மாண்டலே சேதம்

★

மாண்டலேயில் ஜப்பானியர் எரிகுண்டுகளை வீசியதால் ஏற்பட்ட சேதத்தின் காட்சி.

★

நாசத் தோற்றம்

★

மாண்டலேயில் விமான ஸ்தலங்கள்மீது ஜப்பானியர் குண்டு வீசி நாசம் செய்தனர்.

★

பாழ் அடைந்தது

★

ப்ரோமில் ஜப்பானியர் குண்டுவீச்சுக்கு இலக்கான ரோம கத்தோலிக்கர் சர்ச்.

★

மயிலை

ஸ்ரீ ராமகிருஷ்ண மடத்துப் பிரசுரங்கள்

	ரூ.	அ.	பை.
ஸ்ரீ ராமகிருஷ்ண தேவரின் திவ்ய சரிதம்	5	0	0
ஞான தீபம்	2	0	0
உபதேச மொழிகள் (சாதா)	1	12	0
ஷை (காலிகோ)	2	0	0
ஸ்ரீராம கிருஷ்ண வசனும்ருதம்	1	8	0
ராஜயோகம்	1	4	0
கருமயோகம்	0	12	0
ஜகஜ்ஜீவ பரவிளக்க வினவிடை	0	12	0
பக்தி யோகம்	0	10	0
விவேகாநந்தர் சரிதம்	0	3	0
ஷை	0	12	0
ஷை கடிதங்கள்	0	10	0
நமது தாய்நாடு	0	8	0
சாரதா தேவி சரிதம்	0	8	0
குருதேவர் வாக்யம் (சாதா)	0	6	0
ஷை (காலிகோ)	0	10	0
ஈசோப நிடதம்	0	6	0
சிகாகோ பிரசங்கம்	0	5	0
பக்தி மார்க்கம்	0	5	0
எனது குருநாதர்	0	3	0
நடராஜ வடிவம்	0	3	0
பவாஹாரி பாபா	0	3	0
நம்மவர் நாட்டு ஞானவாழ்க்கை	0	2	0
எல்லாவற்றிலும் இறைவனைக் காணல்	0	2	0
முத்திநெறி	0	2	0
விவேகாநந்தர் வரலாறு	0	1	0
சந்யாசி கீதம்	0	0	6
Sayings of Sri Ramakrishna. Fifth Edition Calico	3	0	0
Stiff Board	2	8	0
Limp Board	1	12	0
Sri Sarada Devi Calico, Silver Title	3	8	0
Gospel of Sri Ramakrishna Vol. I.	2	8	0
Spiritiual Teachings of Swami Brahmananda	2	0	0
Message of Eternal Wisdom Calico	2	0	0
Do Do Wrapper	1	8	0
Divine Life	1	14	0
Inspired Talks (Calico)	1	12	0
Do (Wrapper)	1	4	0
Universal Prayers	1	6	0
Vedic Religion & Philosophy	1	4	0
Complete Works of Swami Abhedananda	1	0	0
Saint Durgacharan Nag	1	0	0
Sri Krishna the Pastoral and King-maker	0	12	0
Katha Upanishad	0	12	0
Mundakopanishad	0	12	0
Hinduism	0	10	0
Prasna Upanishad	0	10	0
Education	0	8	0
Isavasyopanishad	0	6	0
Kenopanishad	0	6	0
Mandukyopanishad	0	6	0
Aitareya Upanishad	0	6	0
Path to Perfection	0	4	0
Message of Swami Vivekananda	0	4	0
Sri Ramakrishna Paramahamsa	0	3	0
Women of India	0	3	0
Ramakrishna & Vivekananda	0	2	0

தபாற் செலவு, ரயில் செலவு முதலியவை பிரத்யேகம்.

எமது எல்லா ரயில்வே புத்தகசாலைகளிலும், ஏஜண்டுகளிடமும் கிடைக்கும்.

மானேஜர்,

"சுதேசமித்திரன்" புத்தகசாலை, சென்னை.

Printed and Published by T.S. Visvanatha Iyer, B.A., at the Swadesamitran Power Press, Mount Road, Madras. Editor, C.R. Srinivasan, B